ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீமகாபாரதவிலாசம்

அல்லது

# சூது - துகிலுரிதல்



இயலிசை நாடகமென்னும்

முத்தமிழ்வல்லவராகிய இராயநல்லூர்

இராமச்சந்திரக்கவிராயர் அவர்களால்

இயற்றியது.


அமரம்பேடு

**இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்**

**பூமகள்விலாச அச்சுக்கூடம்**

சென்னை

இதன் விலை] **1937**

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி Rs 2-50

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்



# ஸ்ரீ மகா பாரதவிலாசம்

## சூது - துகிலுரிதல்

காப்பு

### விநாயகர் தோத்திரம்

வெண்பா-இ-ம்-சங்கராபரணம்

ஓதுமகா பாரதத்தி லுள்ளபடி நாடகமாய்ச்
சூதுந் துகிலுரிவுஞ் சொல்லவே—ஆதரவாய்த்
தஞ்சமென் றிரங்குமெங்கள் தர்மவேழ மாமுகனார்
கஞ்சமஞ்சுஞ் செஞ்சரணங் காப்பு.

### முருகர் தோத்திரம்

விருத்தம்-இ-ம்-தோடி.

சரவணபவனேபோற்றி சங்கரன்மகனேபோற்றி
அரிதிருமருகாபோற்றி ஆறுமாமுகனேபோற்றி
திருவளர்குகனேபோற்றி செங்கைவேலவனேபோற்றி
கரிமுகற்கிளையவெங்கள் கந்தனேபோற்றிபோற்றி.

சிவபிரான் தோத்திரம்

விருத்தம்-ஆனந்தபைரவி

திங்கள்செஞ்சடையாய்போற்றி திரிபுரமெரித்தாய்போற்றி
மங்கையோர்பாகாபோற்றி மான்மழுதரித்தாய்போற்றி
துங்கவெண்விடையாய்போற்றி துலங்குமுக்கண்ணுபோற்றி
எங்கள்நாயகனேபோற்றி ஈசனேபோற்றிபோற்றி.

மகாவிஷ்ணு தோத்திரம்

விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

ஆரணப்பொருளேபோற்றி அகிலநாயகனேபோற்றி
பாரளந்தவனேபோற்றி பாண்டவர்தூதாபோற்றி
வாரணமழைத்தபோது வந்துகாத்தவனேபோற்றி
காரணவஸ்துவான கண்ணனேபோற்றிபோற்றி.

உமைக்கும்-இலட்சுமிக்கும்-சரஸ்வதிக்கும்-தோத்திரம்

விருத்தம்-இ-ம்-காம்போதி

திருவளருலகம்போற்றுஞ் சிவகாமித்தாயேபோற்றி
மருமலர்கமலமேவு மாதுலட்சுமியேபோற்றி
மருவலர்கலைகள்சொல்லு மகத்தானமதுரவாக்கு
தருஞ்சரஸ்வதியேயுந்தன் றுளிணைபோற்றிபோற்றி.

விநாயகர் தோத்திரம்

தரு-தோடையம்-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளசாப்பு

நீதாசரணம் விநோதாசரணம்
ஆகாரமாங்கண நாதாசரணம்
தீதேதுமில்லாம லிந்தத்தமிழுக்குத்
திருவருள்செய்து தினங்காக்கவேணும்
சிவசங்கரி-யுலகங்களை-யுதவுந்தனி-யுமைதந்தருள் (நீதா)

சுப்பிரமணியர் தோத்திரம்

துய்யாசரணமென் னையாசரணம்
மெய்யானவேல்முரு கையாசரணம்
ஒய்யாரமாமயி லேறிவந்தேயேழை
உரைக்குந்தமிழுக் குதவிசெய்யவேணும்
ஒருசங்கணி-யதுகொண்டிட-உலகந்தனை-வலம்வந்திடு (துய்)

பரமசிவன் தோத்திரம்

ஏகாசரணம் விவேகாசரணம்
வாகானதோகையோர் பாகாசரணம்
பாகானவிந்தத் தமிழுக்குதவிசெய்து
பாலிக்கவேணுங்கிருபை பாலிக்கவேணும்
பணியுந்திகழ்-மதியும்புன-லருகும்புனை-சடைதங்கிய (ஏகா)

உமையவள் தோத்திரம்

மாலிசரணங் கபாலிசரணம்
சிலிவிசாலத்திரி சூலிசரணம்
ஞானந்தனிலிந்த நாடகம்பாடவே
நாவிலிருந்துநீ நன்மைதரவேணும்
நவகண்டமும்-மதிரும்படி-நடனம்புரி-பதபங்கய (மாலி)

விஷ்ணு தோத்திரம்

நந்தாசரணம்மு குந்தாசரணம் கோ
விந்தாசரணா விந்தாசரணம்
எந்தாயிதற்கொரு விக்கினமில்லாம
லின்னருள் தந்துநீ முன்னிற்கவேணும்
இடமங்கைய-ருடனிங்கித-முடமங்கிள-மடர்கின் றிடும் (நந்தா)

சரஸ்வதி தோத்திரம்

வாணிசரணஞ்சொல் வேணிசரணிந்தி
ராணிசேர்புத்தக பாணிசரணம்
வாணுதலாளே சரஸ்வதியேயிந்த
வண்டமிழ்சொல்லநல் வாக்குத்தரவேணும்
மலர்தங்கிய-பிரமன்றிரு-வுளமிங்கிர்த-முடனேமகிழ் (வாணி)

மங்களம்

தரு-இ-ம்-அசாவேரி-திரிபுடை

பல்லவி

மங்களம் ஜெயமங்களம் சுபமங்களம் மங்களம்

அநுபல்லவி

திங்களிளம்பிறையுந் தங்குஞ்சடைமுடியுந்
தேசுலாவுநாகா பரணமுங்கொன்றையும்
வாசமேவுமெஞ் ஞாணதிபனென்று
சித்தர்கள்தவ சுத்தர்கள்தத்துவ
நித்தர்கள்பரி சுத்தர்கள்பரவிய
திரிநயனவிலாச மெய்யோகற்கும்
மலைமகளெனுமா துமைபாகற்கும் (மங்க)

சரணங்கள்

ஜகமேல்வருமாயை யனைத்துந்
தவறுமல்வகைஞான மளிக்கும
வருதேசிகனுக விருக்கும்
குருநாதன்செவ்வேள் முருகர்க்கும்
சிறுபிறைநுதல்குற மகள்வள்ளிக்கும்
சீர்பதிதருமகள் தெய்வயானைக்கும் (மங்க)

திசைமுகனுக்குங் கலைமகளுக்குந்
திருமகளுக்கும் முயல்வண்ணனுக்கும்
சீருலாவுநூதாடல் துகிலுரிதலைப்
பேருலாவுநன் னுடகமாய்ச்செய்ய
செந்தமிழ்கவிராமச் சந்திரன்றனக்குஞ்
சந்தமாய்ப்பாட மனங்கொண்டவர்க்கும் (மங்க)

விநாயகர்வருகிற-பொதுவிருத்தம்-இ-ம்-தோடி

அந்தமுமாதியாகி யருமறைப்பொருளுமாகி
விந்துவுநாதமாகி மெய்ப்பொருடானுமாகி
இந்துவேணியனளித்த வுரையொருமுதல்வனை
கந்தமாமலர்தாள் திவ்ய கணபதிவருகின்றாரே.

விநாயகர்வருகிற-தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்

பல்லவி

தர்மவிநாயகர் தானிதோவந்தார் வருள்புரிந்திட
தர்மவிநாயகர் தானிதோவந்தார்

அநுபல்லவி

நன்மைசேர்சென்னைமுத்தி யாலுபேட்டையில்
வன்னியவீதியில் வந்துகுடிகொண்ட
வல்லபைப்பெண் மணவாளர்நல்ல
கல்விதருங்கிருபை யாளர் எழில்

வானகத்தினில்-மேவுமுக்கிய-தேவருக்குமேல்-யாவருக்குநல்
வளமிகும்பல கலைபயின்றிட
வுளமிதங்கின னருள்சுரந்திதோ (தர்ம)

சரணங்கள்

மங்கைபுமையருளங்குச பாசர் கருணைவிலாசர்
மல்லன்மருகுழல் வல்லபைப்பிராணேசர்
தங்கும்பலகலைதந்தருளும்நேசர் கோடிசூரியப்பிரகாசர்
தஞ்சமென்றோரிட நெஞ்சந்தனில்வாசர்

பொங்குங்கஜமுகசூரனை வாட்டிய
பூரணவெற்பினிற்பாரதந் தீட்டிய
ஐங்கரனைநல் லமுதுசெய் தூட்டிய
ஔவைக்குகைலாயத்தைக் காட்டிய

ஆகமெய்ச்சதுர் வேதமெய்ப்பொரு
ளாயிருப்பவர் தூய்சிறப்பவர்
அங்குமிருப்பவ ரெங்குமிருப்பவ
ரானைமுகத்தவர் மோனமிகுத்தவர் (தர்ம)

கட்டியக்காரன் வருகிற பொது விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

மட்டில்லாக்கீர்த்திபெற்ற மதிகுலக்கொழுந்தோனிந்த
அட்டதிக்கெல்லாங்காக்கு மடல்பெருமரசர்கோமான்
துட்டரையடக்கும்வீரன் துரியமகாராஜன்வாசற்
கட்டியக்காரன்வந்து களரியிற்றோன்றினனே.

கட்டியக்காரன் வருகிற-தரு-இ-ம்-மிசுரதாளம்

பல்லவி

வாசற்கட்டியக்காரன்வந்தான்
ராஜன் துரியோதன ராஜகெம்பீர (வாச)

அநுபல்லவி

தலையிற்பொன் னுருமாலை துலங்க-கையிற்
சமுதாடுபளபளென் றிலங்க-வாகு
வலயங்களிருதோளில் தரித்து-சரிகை
வஸ்திரம்வல்லவாட்டு விரித்து (வாசற்)

சரணங்கள்

வலுவாய்சல்லடந்தட்டி வரிசையாய்க்கச்சைகட்டி
வலதுகையில்மீசை முறுக்கிவந்த
மருவலர்பயப்பட வுறுக்கி


மகுடமண்டலபதிகள்வந்தெதி ரடிபணிந்திடவிறன்முகுந்துள
மதிகுலந்தனில் வருதுரந்தர துரியனென்றிடுமகிபன்வந்திடு
சமயமிதுவெகுசமயமிதுவென சபையிலனைவரும்புகழஇதல (வா)

வ-ம். அகோதெப்படியென்றால் ஏகசக்ராதிபதியான சந்திர வம்ச வுத்தாரகனான இராஜபயங்கர ராஜகெம்பீர ராஜமார்த்தாண்ட ராஜபரமேஸ்வர ராஜாதிராஜன் துரியோதனமகாராஜன் கொலுவுக்கு வருகிறார். பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், சகலதேசத்து ராஜாக்களெல்லோரும் எச்சரிக்கை! ஆரடா கொலுவாசற்காரரே? சீக்கிரமாய் கொலுவை அலங்காரம்பண்ணும் பிள்ளாய்.

பொது விருத்தம்

ஒலிகடல்சூழுமிந்த உலகெலாமொருகுடைக்கீழ்
இலகவேயாளவல்ல ராஜாதிராஜனான
வலுமையில்மிகுந்தவீரன் மகாதுரியோதனன்றன்
குலவியவழகின்மிக்க கொலுவுக்குவருகின்றானே.

அகோதெப்படியென்றால் பஞ்சபாண்டவர்கள் செய்த ராஜசூயயாகத்திற்கு துரியோதனாதிகள் போயிருந்தபடியினாலே அவர்களிடத்திலே நடந்த சிறப்புகளனைத்தையும் துரியோதனமகாராஜன்



இராஜசூயயாகம்

பார்த்து பொறுமையினலே மனந்தளர்ந்து அஸ்தினபுரம் வந்து சேர்ந்து எவ்விதத்திலேயும் பாண்டவர்களை மோசஞ்செய்து அவர்களுக்குள்ள இராச்சியத்தையும் செல்வத்தையும் பறிக்கவேணுமென்று ஆலோசனை செய்யும்படியாய் துரியோதன மகாராஜன் கொலுவுக்கு வருகிறவிதங் காண்க.

துரியோதனுதிகள் வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

இராஜாதிராஜன்மகாராஜன் துரியோதிரன்
இராஜமார்த்தாண்டவன்வந்தான் கொலுவிருக்க

அநுபல்லவி

பேசும்வீஷ்மன்விதுரன்சகுனிகர்னன் துற்சாதனன்
மாசிலாத்துரோணர்கிர்பன் அஸ்வத்தாமன்மெய்ப்பாய்வர


சரணங்கள்

ஏகபூச்சக்கிரகுடை கவிக்க
எதிரெதிர்மன்னர்காங் குவிக்க
வாகையரவக்கொடி பிடிக்க
வைரியர்வெற்றிகளைப் படிக்க
தோகையர்வெண்சாமரம் வீச
சொற்கடிகையர் துதிகளைப் பேச
மோகனமாதரால மேந்த
மொய்குழலார்காளாஞ்சி யேந்த
போகதேவேந்திர னென்ன
யோகராஜேந்திர னென்ன
பூரிகைபேரிகைநாகசுராதிகள்
நீடியவார்கடல்போலொளிமீறவே
அந்தரமின்றெதிர்சுந்தர மென்றிட
முந்தியதுந்துமி திந்திமி யென்றிட
பம்பையதிர்ந்திடசங்கு முழங்கிட
இங்கிர்தமுடன்வெகுமங்களகரமுடன் (இரா)

கட்டியக்காரன் எச்சரிக்கை

ஆசிரியவிருத்தம்

மணிமகுடமன்னவர்க ளிருபுரநெருங்கவே
மருவலர்வணங்கிவரவே
வயிரியர்கள்விருதுகள் பிடிக்கவேவிலைமாதர்
வரிசைநடம்புரியவே
அணிகொண்டகுதிரைப் பெரும்படைநெருங்கவே
ஆனையின்றிரள்சூழவே



அமைச்சர்களிணங்கவே பிரதானிசேனுபதிக
ளங்கங்கு தங்கிவரவே
பணிவிடைக்காரருந் திருவடிவணங்கவே
பார்த்திபர்வணங்கிவரவே
பாவையர்கள்வெண்சாமரங்கள்தமைவீசவே
பம்பைதுந்துமிகுணமுறவே
திணிகொண்டநவரத்தின சிம்மாசனக்கொலுவில்
சீருடனேயரசுசெய்ய
தீரன்துரியோதன மகாராஜன்வருகிறூர்
ஜெனங்களே எச்சரிக்கை.

துரியோதனன் கடவுளைத்துதிக்கும் விருத்தம்

தக்கவோரண்டரண்ட சராசரமெவையுந்தந்து
மிக்கவேயளித்துக்காக்கு மேன்மைமுத்தொழில்நடாத்தி
பக்குவமுடையஞான பாதத்தைப்பெற்றோர்க்கெல்லாம்
கைக்கனிபோல்விளங்கும் கடவுள்செஞ்சரணம்போற்றி.

துரியோதனன்சொல் விருத்தம்

பஞ்சபாண்டவர்களுக்குப் பாதிநாடளித்ததாலே
மிஞ்சினூர்கெருவங்கொண்டார் வீரமும்பலமும்பெற்றூர்
எஞ்சலில்லாதராஜசூய யாகமுன்செய்தாரின்னங்
கொஞ்சநாட்சென்றூலிந்த குவலயமுழுதுங்கொள்வார்.

வ-ம். கேட்டீர்களோ இராஜ இராஜாக்களே! பாண்டவர்களுக்கு நாம் பாதிநாடு கொடுத்தபடியினுலே கெர்வத்திஞலும் வீரத்திஞலும் செல்வத்திஞலும் மிஞ்சிப்போனுர்கள்; ஒருவராலுஞ் செய்யப் போகாத இராஜசூய யாகமுஞ் செய்தார்கள்; இன்னங் கொஞ்சநாள் போனுல் இந்த உலகமெல்லாம் அவர்களே கைக்கொள்வார்கள்; இனி என்னசெய்யப்போகிறேன் இராஜாக்களே.

கர்னன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

மன்னவன் தருமராஜ மகாராஜன்சூயயாகம்
இந்நிலந்தனிற்செய்தாற்போ லெவர்செய்துகீர்த்திபெற்றூர்
இன்னுமங்கவர்க்கொப்பாக வொருவருமுலகிலில்லை
துன்னுமிவ்வுலகையெல்லாந் துவஜங்கட்டியவரேயாள்வார்.

வ-ம். கேளும் துரியோதனமகாராஜனே? தருமராசன் செய்த இராஜசூய யாகத்தைப்போல் ஆர்தான் செய்யப்போகின்றூர்கள். அவர்களுக்குச் சமானமாக யாரைச் சொல்லலாம். இன்னம் சில நாளைக்குள் உலகமெல்லா மவர்களே யாள்வார்கள்போலத் தோற்று கிறது. உங்கள் நிர்வாக மிப்படியிருந்தா லென்னசெய்யலாந் துரி யோதன மகாராஜனே.

சகுனி துரியோதனனுக்குச்சொல் விருத்தம்
ஏருழுமவனிளைத்தா லெருதுமச்சினங்கொண்டாடும்
பாரில்தேள்கொட்டாவிட்டால் பகர்பிள்ளைபூச்சியாகும்
கூரியசிங்கஞ்சும்மா குகைக்குள்ளேயொடுக்கங்கொண்டால்
வீரியஞ்செலுத்தியானை மேல்விழுந்தடித்திடாதோ.

வ-ம். கேளும் என்னுடைய மருமகனை துரியோதன மகா ராஜனே! உழுகிறவன் இளப்பமானால் எருது மச்சினங்கொண் டாடாதா! தேள்கொட்டாமற்போனால் பிள்ளைப்பூச்சியல்லவா! சிங்கம் குகைக்குள் ஒடுங்கியிருந்தால், யானை மேல்விழுந் தடிக்காதா! அப் படிப்போல நீ சும்மாயிருந்தால் பாண்டவர்க ளடித்தது ஆட்டந்தான் பிடித்தது பெண்டுதான் துரியோதனமகாராஜனே.

துற்சாதனன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்
செழிப்புடனவர்பெற்ற செல்வமும்புகழுங்கண்டு
பழிப்புடனீயிருக்கும் பருவமுமெண்ணிப்பார்த்தால்
வழிப்படுங்கதிரோன்முன்னே வன்பகல்மழுங்கினாற்போல்
இழிப்படுஞ்சந்திரன்போ லிருக்குதுன்செங்கோலண்ணே.

வ-ம். கேளும் அண்ணுவே? தருமபுத்திரர்கள் பெற்றிருக்கிற செல்வத்தையும் கீர்த்தியையும் உன்னையும்பார்த்தால் பகற்காலத் திலே சூரியன்முன்னே மழுங்கிப்போன சந்திரன்போ லிருக்கின் றது, உன்னுடைய செங்கோலண்ணே இதற்கென்னசெய்யலாம்.

துரியோதனன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்
ஆமிதுமெய்தான்தம்பி யடங்கிநாமிருந்தோமானாற்
பூமியைமுழுதுந்தர்ம புத்திரனேயரசுசெய்வான்
தாமதஞ்செய்தாற்பின்பு சாதிக்கக்கூடாதந்த
நேமமாமைவர்செல்வம் நீக்கவோருபாயஞ்சொல்வீர்.

வ-ம். ஆம் ஆம் துற்சாதனா? இனி நாம் சும்மா யடங்கியிருந் தால் பூமியெல்லாம் பாண்டவர்களே யாள்வார்கள்; இனி நாம் சும்மா யிருக்கலாகாது தர்மபுத்திராதிகளை எந்தவிதத்திலேயும் வெல்லும்படிக்கு ஒருபாயத்தைச் தேடிச் சொல்லுங்கள் பார்ப்போம் சபையோர்களே.

துற்சாதனன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்
குஞ்சரங்குதிரைத்தேராற் கொல்வதற்குபாயமுண்டு
நஞ்சினையூட்டிக்கொல்ல நமக்குளேசமர்த்துமுண்டு
வஞ்சனையாலேகொல்ல மாமனார்சகுனியுண்டு
பஞ்சபாண்டவரைக்கொல்ல பாரமோசொல்வாயண்ணே.

வ-ம். கேளும் அண்ணுவே? யானையின்பேரிலும் குதிரையின் பேரிலும் ரதத்தின்பேரிலும் ஏற்றிக்கொல்வதற்கு அனந்த முபாய முண்டு; விஷங்களையூட்டிக் கொல்லுகிறதற்கு நமக்குள்ளே சாமார்த் தியமுண்டு; வஞ்சனை துரோகஞ் செய்து கொல்லுகிறதற்கு சகுனி மாமனுண்டு; பாண்டவர்களை வெல்லுகிறது வெகு பெரிதாய்ச் சொல்லவேண்டாம் அண்ணே.

கர்னன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்

ஒருகணையாலேயந்த வுயர்பஞ்சபாண்டவாளை
கருவறுத்திடசமர்த்தன் கர்னனுனிருக்கும்போது
மருவென்னமாமாவென்ன வஞ்சனைவிஷங்களென்ன
பருவமில்லாதவார்த்தை பார்த்திபன்முன்னேசொன்னுய்.

வ-ம். கேளும் துற்சாதனமகாராஜனே? இந்த ஒருகணையினுல் பாண்டவர்களை கருவறுத்துப்போட சமர்த்தனுன கர்னன் இங்கே யிருக்க வஞ்சனையினுலும் விஷத்தினுலும் உபாயத்தினுலும் கொல்ல லாமென்று சாரமில்லாதவார்த்தையை இந்த இராஜசபையிலே பேச லாமோ துற்சாதனமகாராஜனே.

சகுனி கர்னனுக்குச்சொல் விருத்தம்

மைக்கண் துரோபதைக்காயன்று வளைத்தவில்லடிபட்டங்கே
மிக்கதோள்சலித்துப்பாரில் விழுந்ததுமறந்திட்டாயோ
அக்கணம்விஜயன்செய்த ஆண்மையைப்பார்த்திருந்தும்
வெட்கமில்லாமற்கர்ணு வீண்பேச்சுப்பேசலாமோ.

வ-ம். கேளும் கர்னமகாராஜனே? ஒரு துரோபதைக்காக வில்லை வளைக்கப்போய் அந்த வில்லினுலே அடிபட்டு கீழேவிழுந்து உதைத்துக்கொண்டது மறந்துவிட்டையா? அந்த க்ஷணத்திலே அர்ச்சுனராஜன் தன்னுடைய திராணியைச் செலுத்தினதைப் பார்த் திருந்தும் வீண்பேச்சைப் பேசலாமோ கர்னமகாராஜனே.

சகுனி துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

தப்புறுபாண்டவாளை சண்டையால்வெல்லநம்மால்
இப்பிறப்பிலுமாகாது யெழுபிறப்பிலுமாகாது
துப்புறுகபடவஞ்ச சூதினுல்வெல்லலாகும்
ஒப்புறவிதுவல்லாம லொன்றுலும்வெல்லமாட்டோம்.

வ-ம். கேளும் என்னுசை மருமகனுன துரியோதன மகா ராஜனே? அந்தப் பாண்டவர்களைச் சண்டைசெய்து வெல்ல நம் மாலே இப்பிறப்பிலுமாகாது, இன்னமிப்படி ஏழுபிறப்பு பிறந்தா லும் வெல்லக்கூடாது வஞ்சனை பண்ணி சூதினுலே வெல்லலாமே யல்லாமல் மற்றப்படி ஒன்றுலும் வெல்லமாட்டோம் என்னுசை மருமகனுன துரியோதனமகாராஜனே.

துரியோதனன் சகுனிக்குச்சொல் விருத்தம்

ஆமாமாமெய்தான்மெய்தான் அப்படிதானேசெய்வோம்
மாமாசொன்னதுவேபுத்தி மாமாவென்னருகேவாரும்
ஏமாற்றிசூதினுலே யெப்படிவெல்வோமந்தச்
சாமர்த்தியமின்னதென்று சட்டமாயுரைசெய்வீரே.

வ-ம். ஆ! ஆ! ஆ! அதுவேசரி! அதுவேசரி!!! தகும் தகும் அதுவேபுத்தி ஓய்! மாமா? என்னருகேவாரும் சூதாடி வெல்வோமென்று சொன்னீரல்லவா அந்த உபாயத்தை நன்றாய்த் தெரியச் சொல்லவேணும் என் மாமா.

சகுனி துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

மண்டபமொன்றுசெய்து மற்றந்தமண்டபத்தை
கண்டிடவரவழைத்துக் காண்பித்துப்பொழுதுபோக்கி
அண்டியேசொக்கட்டானை யாடுதற்கிசையச்செய்து
வண்டிறலவர்தங்கள் வாழ்வெலாங்கெலித்துத்தாரேன்.

வ-ம். கேளும் என்னுடைய மருமகனுன துரியோதனமகாராஜனே? புதிதாய் ஒரு அலங்காரமண்டபஞ்செய்து அதைப் பார்க்கும்படியாய் பாண்டவர்களை யழைப்பித்து அதைக் காண்பித்து போசனஞ்செய்தபின்பு பொழுதுபோகவேண்டுமென்று சொக்கட்டான் ஆடச்செய்து பாண்டவர்களைத் தோற்கடித்து அவர்கள் சேனை நாடுநகரம் பண்டாரங்களையெல்லாம் உனக்கேவரும்படியாகக் கெலித்துத் தருகிறேன் என் சாமர்த்தியத்தைப் பார் மருமகனே.

பொது விருத்தம்

வெற்றிசேர்கர்னன்சொல்லும் வினவியதம்பிசொல்லும்
மற்றவர்சொன்னசொல்லும் மறுத்தவன்மாமன்சொன்ன
குற்றமாஞ்சகுனிசொல்லை குருமொழியாகவெண்ணி
கொற்றவன்துரியனுரை கொள்ளுவான்துள்ளுவானே.

துரியோதனன் சகுனிக்குச்சொல்

தரு-இ-ம்-கண்டா-அடதாளம்-சாப்பு

கண்ணிகள்

உன்னாலேயல்லவோ நானுலகத்தையாள்வது சகுனிமாமா-இனி
உன்னையல்லால் எனக் குற்றதுணையுண்டோ சகுனிமாமா
என்னாலேயாகுமோ விந்தமோசஞ்செய்ய சகுனிமாமா-நான்
எண்ணினஎண்ணத்தை ஈடேறவைப்பாயே சகுனிமாமா
சம்பத்துக்கேற்றதருவெடுத்துச்சொன்னால் சகுனிமாமா-உன்
தந்திரஇந்திரஜாலமெவர்சொல்வார் சகுனிமாமா
நம்மைப்போல்பாண்டவர் நாடாளவாச்சுதே சகுனிமாமா-இனி
நாடுநகரமும் நாமாளவேணுமே சகுனிமாமா
சிங்காரமாயாகஞ் செய்தழைப்பித்தாரே சகுனிமாமா-நாம்
செல்வமாய்க்கூடிக்கொண்டெல்லோரும்போனோமே சகுனிமாமா
பங்காளியென்றெண்ணிப்பாராமற்போனாரே சகுனிமாமா-நம்மை
பத்திற்பதினொன்றாய் பார்த்திருந்தார்களே சகுனிமாமா

துன்னியபாண்டவர் சின்னஞ்செய்தார்களே சகுனிமாமா-அந்த
துற்சனர்க்கிப்போ துரைத்தனம்வந்ததே சகுனிமாமா
மன்னவனென்றெண்ணி மதியாமற்போனுரே சகுனிமாமா-என்னை
மரியாதைசெய்து வணங்காதிருந்தாரே சகுனிமாமா
பஞ்சவர்ஏளிதம் பண்ணதும்போதாமல் சகுனிமாமா-அந்த
பட்டிதுரோபதைஎன்னை பார்த்துநகைத்தாளே சகுனிமாமா
கொஞ்சமாயெண்ணி குலுங்கநகைத்தாளே சகுனிமாமா-அந்த
குக்கற்சிறுக்கியென் வெட்கங்கெடுத்தாளே சகுனிமாமா
நீலிபழிக்க நிலத்திலிருந்தேனே சகுனிமாமா-அதை
நினைக்கநினைக்க நெருப்பாயெரியுதே சகுனிமாமா
வேலிக்குமுட்போட காலுக்குதைத்ததே சகுனிமாமா-அந்த
வெஞ்சினந்தீர்த்திட வேளைகிடைத்ததே சகுனிமாமா
எத்துகளுஞ்சூது வித்தைகளுங்கற்ற சகுனிமாமா-என்னை
எப்படியாகிலு மீடேற்றவேண்டுமென் சகுனிமாமா
குத்திசெய்பாண்டவர் குடியைகெடுத்தாலென் சகுனிமாமா-உன்னை
குலதெய்வமாய்வைத்துக் கும்பிட்டிருப்பேனுன் சகுனிமாமா
சொக்கட்டான்பாண்டவர் தோற்றிடச்செய்தால் சகுனிமாமா-உன்னை
துரையாகவைத்துநான் சொன்னபடிகேட்பேன் சகுனிமாமா
கைக்குகண்ணுடிஎன்கண் ணுக்குகண்ணேஎன் சகுனிமாமா-என்னை
காத்தாலும்நீகரை சேர்த்தாலும்நீயேயென் சகுனிமாமா

பொதுவிருத்தம்

இப்படிதன்மனதி லிருந்திடும்பொறுமையெல்லாம்
ஒப்புடன் துரியன்சொல்ல உளமதுமகிழ்ந்துகேட்டு
தப்புறுசகுனிமுன்னே சாற்றியமந்திரத்தை
துப்புறவெவருங்கேட்கச் சொல்லுவான்சொல்லுவானே.

சகுனி துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

மண்டபமொன்றுண்டாக்கிப் பாண்டவாளை
வரவழைத்துக்காண்பித்து மகிழப்பேசி
உண்டுமுதலானபின்பு பொழுதுபோக
வொருதாஞ்சூதாடுவோமென் றுரைத்தோமானல்
தண்டிவருந்தருமனும்பின் வாங்கமாட்டான்
சபையினிற்சூதாடுதற்குச் சம்மதிப்பான்
வண்டிறலாயாடியபோ தென்சமர்த்தால்
வாழ்வையெல்லாமவர்தோற்க வகைசெய்வேனே.

வ-ம். கேளும் என்னுசை மருமகனை துரியோதன மகா ராஜனே? நான் சொன்னபடி ஒரு சபாமண்டப முண்டாக்கினையே யானல் அதனைக் காணும்படியாய்ப் பாண்டவாளை யழைப்பித்து போசனுதிகள் செய்தபின்பு பொழுதுபோக வேண்டுமென்று ஒரு

ஆட்டம் சொக்கட்டான் ஆடவேண்டுமென்றால் தருமராஜனும் சம்மதிப்பான். அப்போது பந்தயம் வைத்தாடுங் காலத்திலே அவர்கள் நாடு நகரம் ஆனை சேனை பண்டு பண்டாரம் ரொக்கரோசனை இது முதலாகியதெல்லாம் உனக்கே வரும்படியாய் கெலித்துத் தருகிறேன் பாரும் என் சமர்த்தை துரியோதனமகாராஜனே.

துரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

மிகுவிறல்சிறியதந்தை விதுரனேநின்றாட்போற்றி
சகுனியென்மாமன்சொன்ன தந்திரவுபாயத்தாலே
நலம்புகழைவர்நாடு நகரமுநாமேகொள்ள
தகுந்தகுமிதுவுமக்குச் சம்மதிதானேசொல்வீர்.

வ-ம். சரணம் சரணம் சிற்றப்பனான விதுரமகாராசனே? என் மாமனான சகுனி சொன்ன வுபாயத்தினாலே பாண்டவர்களுடைய செல்வத்தை நானே யனுபவிக்கப்போகிறதுபோல தோணுது இது உமக்குச் சம்மதிதானா தெரியச்சொல்லுமையா?

விதுரன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

பாதிநாடளித்தபின்பு பறித்திடநினைத்துவஞ்ச
சூதினால்வெல்வோமென்று சொல்வதுதருமந்தானோ
நீதியோநெறியோவையோ நீசொல்லுங்கொடியவார்த்தை
காதிலுங்கேட்கலாமோ கனவிலும்நினைக்கலாமோ.

வ-ம். கேளுமப்பா துரியோதனா? பாண்டவர்களுக்குப் பாதி நாடு கொடுத்தோமே இப்போதவர்களை இங்கேயழைப்பித்துக் கபட மார்க்கமாய்ச் சொக்கட்டானுடச்செய்து மறுபடியும் அவர்களுக்குக் கொடுத்துவிட்ட நாட்டை அபகரித்துக்கொள்ளுகிறது தருமமா? இதுநீதியா? அரி! அரி! இவ்வார்த்தையை காதிலுங்கேட்கப்போகாது கனவிலும் நினைவிலும் நினைக்கப்போகாது துரியோதனா.

துரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

தீதாகவெனதுவாழ்வுஞ் சிறப்பையுங்கொடுத்துநாங்கள்
மீதாகநினைக்குந்துஷ்ட விரோதிக்குக்கொடுத்தநாட்டை
வாதாடிபறித்துக்கொள்ள மனுநீதியிருக்கமேலும்
சூதாடிபறித்துக்கொண்டால் தோஷமென்றுரைக்கலாமோ.

வ-ம். ஆ! ஆ! நன்றாய்ச்சொன்னீர் பிழைத்துப்போகட்டுமென்று பாதிநாட்டைக் கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு அடக்கமாயிராமல் ஒருவராலுஞ் செய்யப்போகாத இராஜசூய யாகஞ் செய்யலாமா? ஒரு பெண்ணாய்ப்பிறந்தவள் விரலத்தனை சிறுக்கி அந்தத் திரௌபதை என்னைப்பார்த்து நகைக்கலாமா? நான் போனாலும் மரியாதை செய்யாமலிருக்கலாமா? அப்படிப்பட்ட துஷ்டருக்குக் கொடுத்த நாட்டை அடித்துப் பறித்துக்கொள்ளவேண்டும்.

அப்படிச் செய்யாமல் சொக்கட்டானடிப் பறித்துக்கொண்டால் இது தர்மமா? பளா பளா நன்றாச்சுது.

விதுரன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

காவானசூதுவேண்டாம் கருதிநாம்கொடுத்தநாட்டை
தரவேணுமெனக்கென்றுந்தன் தகப்பன்கையோலைபோனால்
பரிவாகநாட்டைவிட்டு பாண்டவர்வனம்போவார்கள்
உரமாகவுலகநீயே யொருமிக்கயாள்வாயப்பா.

வ-ம். கேளுமப்பா துரியோதனா? சொக்கட்டானடி உபாயமாய் நாட்டைப் பறித்துக்கொள்ளவேணுமென்று தேவையில்லை நாம் கொடுத்த நாட்டை மறுபடியும் கொடுத்துவிடச்சொல்லி உன் தப்பன் கையோலைபோனால், சந்தோஷமாகத்தானே நாடு நகரத்தையுங் கொடுத்துவிட்டு, பாண்டவர்கள் காட்டுக்குப் போய்விடுவார்கள். அப்படியே நீயே இந்த உலகத்தை யாளலாம்; மற்றபடி சூதாடிப் பறித்துக்கொள்ளுகிறது தருமமல்லவே துரியோதனா.

துரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

வாசலில்மரத்தைவைத்து வளர்த்திடமரம்வளர்ந்து
பேசவந்தெருவிற்போகும் பேர்க்கதுநிழல்தந்தாற்போல்
வாசமும்வாழ்வுமன்ன வஸ்திரமெல்லாமிங்கே
ஆசையுமன்புமங்கே யாகில்நீயதுவோசொல்வாய்.

வ-ம். கேளும் சிற்றப்பா? வாசலிலே நிழலிருக்க வேண்டுமென்று மரத்தைவைத்து தண்ணீர்வார்த்து வளர்த்தால் மரமுழுதும் வளர்ந்து விளைந்து தெருவிற்போகிறபேர்க்கு நிழல் கொடுத்தாற்போலிருக்கின்றது உன்னுடைய நடக்கை; அதெப்படியென்றால், உனக்கு அன்னமும் வஸ்திரமு மிங்கே, ஆசையு மன்பு மங்கே பாண்டவர்கள் பேரிலே அப்படியானால் இதுமாத்திரமா சொல்லுவாய் இன்னமும் அநேகஞ் சொல்லுவாய்.

விதுரன் துரியோதனுக்குச்சொல் விருத்தம்

உற்றதுசொன்னேனீங்க ளொருவருக்கொருவர்நெஞ்சில்
பற்றியபகையைக்கொண்டால் பாரில்மன்னவர்நகைப்பார்
மற்றுமுன்மொழிதடுத்து வஞ்சனைசொன்னேனென்று
குற்றமுமென்மேற்சொன்னாற் கூறுவதினிவேறுண்டோ.

வ-ம். கேளுமப்பா! துரியோதனா? பாண்டவர்களும் நீங்களும் ஒருவர்க்கொருவர் சண்டை சச்சரவுபட்டால் மற்ற ராஜாக்களெல்லாம் பழிப்பார்கள். நடக்கிற காரியத்தைசொன்னால், சொன்ன சொல்லுங் கேளாமல், வஞ்சனையாகச் சொன்னேனென்று சொன்னால் இனி நான் வேறென்ன சொல்லப்போகிறேன் துரியோதனா.

துரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

துன்னியகபடுஞ்சூதுந் துர்புத்தியதர்மமெல்லாம்
என்னிடத்தினிலேதானே யிருக்குதுமெய்தான்மெய்தான்
சொன்னசொல்மறந்துவிட்ட துஷ்டனுகையாலே
பொன்னடிகமலம்போற்றி பொறுத்துக்கொண்டேகுவீரே.

வ-ம். அப்பா சிற்றப்பா? அந்தமட்டிலேபோதும் என்னிடத்திலே கபடும் சூதும் துற்புத்தியும் அதர்மமுங் குடிகொண்டிருக்கிறது. பெரியோர்கள் சொல்லப்பட்ட வார்த்தையைத் தள்ளிவிடப்பட்ட துஷ்டத்தனமு மிருக்கிறது. ஆகையாலே என்குற்றத்தையெல்லாம் பொறுத்துக்கொள்ளவேண்டும் சரணம் சரணம் எழுந்திரும் போய்வாரும் போய்வாரும்.

விதுரன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

ஆன்றதோருன்குடிக்கு அஷ்டமச்சனிபோல்வந்து
தோன்றியசகுனிமாமா துற்புத்தியாலேயுந்தன்
ஏன்றநன்னரசுவாழ்வு மிழந்திடக்காலம்வந்தால்
ஊன்றியபெரியோர்வார்த்தை யுறைக்குமோவுறைத்திடாதே.

வ-ம். அடா! துரியோதனு? உன்னுடைய குடிக்கு அஷ்டமச்சனிபோல் வந்து வாய்த்த இந்த சகுனியுடைய துற்புத்தியினல் உன்னுடைய செங்கோலும் வாழ்வும் இழந்து போகிறதற்குக் காலம் வந்து சேர்ந்துதானல் நல்லோர்கள் வார்த்தை உன்செவிக் கேற்குமா ஏற்காது வந்ததெல்லாம் அனுபவிக்கவேணும் துரியோதனு.

பொது விருத்தம்

விதுரனுங்கொலுவைவிட்டு வெகுண்டுமேபோனபின்பு
கதிர்முடிவேந்தன்றானுங் கபடுசெய்சகுனிதானும்
சதிசெய்யுந்தம்பிதுற்சா தனனுமற்றவருங்கூடி
நிதிதருமண்டபத்தை நியமிக்கத்தொடங்கினரே.

துரியோதனன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்

தம்பிதுற்சாதனநீ தாமிஷமாயிராமல்
கம்பிதசிற்பநூலுங் கனவிசித்திரமுந்தோய்ந்த
உம்பருமகிழத்தக்க வொருசிற்பாசாரிதன்னை
நம்மிடகொலுவிற்குப்போய் நலமுடனழைப்பிப்பாயே.

வ-ம். அடாதம்பி! துற்சாதனு? இப்போது தாமிஷமாயிராமல் சிற்பசாஸ்திரமெல்லாம் நன்றாகக் கரைகண்டவனுக ஒரு சிற்பாசாஸ்திரியை யழைப்பியும் தம்பி துற்சாதனு.

துற்சாதனன்சொல் வசனம்

அப்படியே அழைப்பிக்கிறேன் அண்ணு.

துற்சாதனன் சேர்வைக்குச்சொல் விருத்தம்

ஆரடாசேர்வைக்காரா அதிசீக்கிரமாகவோடி
பாரடாபுகழைப்பெற்ற பார்த்தீபனழைத்தானென்று
சாரமாஞ்செரிந்தசிற்பா சாரியையிட்சணத்தில்
சீருடன்கொலுவுக்கிப்போ சீக்கிரமாய்வரச்செய்வாயே.

வ-ம். ஆரடா! சேர்வைக்காரா? இராஜாதிராஜனை துரியோதன மகாராஜ னழைத்தானென்று நம்முடைய சிற்பாசாரியை இந்த க்ஷணங் கொலுவுக்கு வரச்செய்யும் பிள்ளாய் சேர்வைக்காரா.

சேர்வைக்காரன் வசனம்

அப்படியே வரச்செய்கிறேன் சுவாமி.

சேர்வைக்காரன் சேவகனுக்குச்சொல் கவி

மற்புயவீரா சிற்பனையிப்போ
ஒப்புடனழைத்துக் கொப்பெனவாடா.

வ-ம். ஆரடா சேவகா? சிற்பசாஸ்திரியை அதிசீக்கிரத்தில் அழைத்துக்கொண்டு வாடா.

பொதுவிருத்தம்

விதித்தமுன்னூலும்பூண்டு விபூதியக்ஷதையுமிட்டு
துதித்தநீர்க்காவிசோமன் சொருசுடனுடுத்திநன்றாய்
மதித்திடுஞ்சிற்பநூலு மட்டநற்பலகையேந்தி
கதித்திடுஞ்சபையில்விசுவக் கர்மனும்வருகின்றானே.

கட்டியக்காரன்சொல் வசனம்

அகோதெப்படியென்றால் இராஜாதிராஜனை துரியோதனமகா ராஜன் கொலுவுக்கு சிற்பாசாஸ்திரி வருகிறவிதங் காண்க.

விஸ்வகர்மன் வருகிற தரு-சங்கராபரணம்- ஆதிதாளம்

பல்லவி

விசுவக்கர்மனேனே சிற்பாசாஸ்திர
விசுவக்கர்மனேனே

அநுபல்லவி

இசையும்பாரிலெட்டுத்திசையுங்கீர்த்திபெற்ற

சரணங்கள்

வேதியரெல்லோரும் செய்கின்றதொழில்களும்
வேள்வியு மென்னாலே
மேதினியாள்கின்ற வேந்தர்கைசெங்கோல்
விளங்குவ தென்னாலே
நீதில்லாநாளும்வைசியர்கள்செய்யுஞ்
சீவன மென்னாலே
திறமானசூத்திரர் யாவரும்போற்றிடும்
செல்வமு மென்னாலே

பூதலமீதில்தேவாலய மானதும்
புனல்சேர்தடாகப் பிரதிஷ்டைக ளானதும்
சோதிதருமாடமாளிகை யானதும்
சூக்ஷாதிசூக்ஷ துரைகளுண் டானதும்
ஈடுதெல்லா மென்னுலே-உலகம்
ஈரேழு மென்னுலே
தாதவிழ்மாலை குருகுலபாண்டவர்
தப்பிப்பிழைத்திட்டதந்திர மென்னுலே
ஆதலாலுள்ளது சொன்னேன் சொன்னேன் காணும்
ஓதினேன் பொய்யல்ல வுற்றுப்பார்க்கவேணும் விசு

சிற்பன் துரியோதனனுக்குப் போற்றிவிருத்தம்

மன்னர்கள்மன்னுபோற்றி மகுடாபிஷேகாபோற்றி
கன்னல்வில்மதனுபோற்றி கண்டகர்மிண்டாபோற்றி
பொன்னணிமார்பாபோற்றி பூச்சக்கிரவர்த்திபோற்றி
என்னையிங்கழைத்தசேதி யியம்புவீர்போற்றிபோற்றி.

வ-ம் சரணம் சரணம் இராஜமார்த்தாண்ட இராஜவுத்தண்ட ராஜகெம்பீரா! தேவரீர் அடியேனையழைப்பித்த காரியம் அருளிச் செய்யவேணும் சுவாமி.

துரியோதனன் சிற்பசாஸ்திரிக்குச்சொல் விருத்தம்

சிற்பனேகேளாய்நல்ல சித்திரவிசித்திரமாக
அற்புதமாகயாரு மதிசயப்படுவதாக
உற்பனமண்டபந்தா னென்றிங்கேசெய்யவேண்டும்
விற்பனமாகச்செய்தால் வெகுமதிசெய்வேன்பிள்ளாய்.

வ-ம். வாருமப்பா சிற்பசாஸ்திரி? இங்கே மகா உன்னதமாக ஒரு சபாமண்டபஞ் செய்யவேண்டும் அந்தப்படி செய்தால் உனக்கு நல்ல வெகுமதிகள் செய்வேன் பிள்ளாய்.

சிற்பசாஸ்திரி துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

மூவருமெச்சமற்ற முனிவருமெச்சவானிற்
றேவருமெச்சவெங்கள் தேவரீர்நீருமெச்ச
யாவருமெச்சநல்ல வெழில்மண்டபத்தைச்செய்வேன்
தாவருமெனதுசிற்ப சமர்த்தைநீர்பாருஞ்சுவாமி.

வ-ம். கேளும் சுவாமி? மும்மூர்த்திகளும் முனிவர்களுந் தேவர்களும் மற்றவர்களும் தாங்களு மெச்சும்படியாய்ச் சபாமண்டபஞ் செய்கிறேன் என்னுடைய சாமர்த்தியத்தைப் பாருஞ் சுவாமி.

துரியோதனன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்

அருமைதுற்சாதனுகே ளாசாரிமனதுக்கேற்ற
மருவியவெள்ளிபொன்னு மாணிக்கமுதலாயுள்ள

பெருநவரத்தினங்கள் பின்னும்வேண துகளெல்லாம்
ஒருகுறைவந்திடாம லொருமிக்கக்கொடுத்திடாயே.

வ-ம். தம்பி துற்சாதனு! இந்த சிற்பாசாஸ்திரிகேட்ட வெள்ளி பொன், மாணிக்கமுதலான நவரத்தினங்களும், மண்டபத்துக்கிசைந்த சாமான்களும், குறைவில்லாமல் கொடுப்பாய் தம்பி துற்சாதனு.

துற்சாதனன்சொல் வசனம்

அப்படியே கொடுக்கிறேன் என் அண்ணுவே.

சிற்பாசாஸ்திரி மண்டபஞ்செய்துவந்துசொல் விருத்தம்

செவ்வையாயுலகுசெங்கோற் செலுத்தியமன்னர்மன்னு
முவ்விதயுல நமெச்சு முழுநவரத்தினத்தால்
ஒவ்வியசித்திரமாக உன்னிதமிகவேநல்ல
திவ்வியமண்டபந்தான் செய்திதோமுடிந்துதையா.

வ-ம். கேளும் இராஜாதிராஜபரமேஸ்வரா? தேவரீர் உத்தாரப் படிக்கு மகாவுன்னதமாய் சபாமண்டபஞ் செய்து முடிந்தது சுவாமி.

துரியோதனன் சகுனிமுதலானவர்களுக்குச்சொல் விருத்தம்

தந்திரசகுனிமாமா தம்பிதுற்சாதனுசூழ்
சுந்தரகர்னவீஷ்ம துரோணரேசொல்லக்கேளீர்
விந்தையாய்ச்செய்துவந்த வியனுருமண்டபத்தை
புந்தியில்மகிழ்ச்சிகொள்ளப் போயுடன்பார்ப்போம்வாரீர்.

வ-ம். கேளும் என் சகுனிமாமா? தம்பி துற்சாதனு? கர்னராஜனே? ஐயா வீஷ்மரே? துரோணுச்சாரியரே? நாமெல்லோருஞ் சிற்பாசாஸ்திரிசெய்த மண்டபத்தைப்போய் பார்ப்போம் வாரீர் சபையோர்களே.

சபையோர் வசனம்

அப்படியேபோவோம் துரியோதனமகாராஜனே.

## திரியோதனன் ஓரடி


தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி

அதிசயத்தைப் பாரும்பாரும்-இந்த
அதிசயத்தைப் பாரும்பாரும்

சரணங்கள்

| | |
|---|---|
| சகுனிமாமாயிங்கே | வாரும்-சிற்பா |
| சாஸ்திரிசெய்ததைப் | பாரும் |
| பளிங்கினுற்றாணுக | ளமைத்தான்-மேலே |
| பவளத்தாற்போதிகை | வைத்தான் |
| இளங்கிளிபச்சையாற் | செய்தான்-அதி |
| னிடைக்கிடைதங்கத்தைப் | பெய்தான் |
| வச்சிரக்கொடுங்கையைச் | சேர்த்தான்-அதின் |
| வரம்பெல்லாம்பொன்னிறை | வார்த்தான் |



துரியோதனாதிகள் மண்டபம்போய்ப் பார்க்குதல்

உச்சிதபச்சையை நுழைத்தான்-அதி
ரேமெல்லாம்ரத்ன மிழைத்தான்
கொத்துச்சித்திரவேலே யடித்தான்-நாம்
குறித்தபடியே முடித்தான்
இத்தனையுமெத்த தொல்லே-நாம்
இதைப்போலெங்கும்பார்த்த தில்லே. (அதி)

துரியோதனன் சகுனிக்குச்சொல் விருத்தம்

சகுனியென்மாமாசிற்பா சாஸ்திரிகெட்டிக்காரன்
புகலும்நாம் நினைத்தாற்போலப் பொருந்தமண்டபத்தைச்செய் [தான்
திகழுமென்றம்பிவாடா சிற்பாசாஸ்திரிக்குவேண
வெகுமதியெல்லாந்தந்து மேன்மையாயனுப்புவாயே.

வ-ம். கேளும் என் சகுனிமாமா? இந்த சிற்பாசாஸ்திரி மெத்தக் கெட்டிக்காரன் நாம் நினைத்தபடியே வெகு சட்டதிட்டமாய் மண்டபத்தைச் செய்தான் அடா தம்பி! துற்சாதனு? இந்த சிற்பா சாஸ்திரிக்கு வேணுமென்ற வெகுமதியெல்லாங் கொடுத்துச் சந்தோஷமா யனுப்புவாய் தம்பி துற்சாதனு.

துற்சாதனன் சொல் வசனம்

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் அண்ணுவே.

துரியோதனன் சகுனிக்குச்சொல் விருத்தம்

மண்டபமுடிந்தவாறு மனதினில்நினைத்தவாறும்
தண்டகப்பாண்டவாளை சூதினுல்வெல்லும்வாறும்
கொண்டவன்பிதாவுக்கிதை கூறியேயவர்கையோலே
அண்டியேபாண்டவர்க்கு அனுப்பிடவேண்டும்வாரீர்.

வ-ம். கேளும் என் சகுனிமாமா? நாம் மண்டபங் கட்டினதும் பஞ்சபாண்டவர்களேச் சூதினுலே வெல்லவேணுமென்று நினைத்திருக்கிறதும் இதுகளையெல்லாம் என்பிதாவாகிய திருதராஷ்டிர மகாராஜனுக்குச் சொல்லி அவர்கைப்பட ஓலையனுப்பி பாண்டவர்களை யழைப்பிக்கவேண்டுமே ஆனபடியினுலே என் பிதாவினிடத்திற்குப்போவோம் வாரீர்.

சபையோர்கள்சொல் வசனம்

அப்படியே போவோம்வாரும் துரியோதனமகாராஜனே.

துரியோதனன் திருதராட்டிரனுக்குச் சொல்
போற்றி விருத்தம்

என்னையீன்றவனேபோற்றி யென்னையாண்டவனேபோற்றி
என்னையுமுலகையாள வெழில்முடிதரித்தாய்போற்றி
என்னையீடேற்றவேண்டி யாதொன்றும்தடைசொல்லாமல்
என்னுள்ளேநினைத்துவந்த வெண்ணத்தைமுடிப்பாய்போற்றி.

திரிதராட்டிரன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

ஐயனேவர்டாயெந்த னழகுகண்மணியேவாடா
வையகமுழுதுங்காக்கு மன்னர்மன்னவனேவாடா
துய்யதோர்குருகுலத்து துரைகள்ரத்தினமேவாடா
செய்யசெங்கோல்செலுத்துஞ் செல்வனேவாடாவாடா.

வ-ம். மகனே! துரியோதனா? என் சுவாமி உன்னுடனேகூட யார் வந்திருக்கிறார்களப்பா? (ஐயா துரோணாச்சாரி வந்திருக்கிறார்) தெண்டந்தெண்டமையா உட்காருங்கள். (வீஷ்மாசாரி வந்திருக்கிறார்) சரணஞ் சரணமையா உட்காருங்கள். (கர்னமகாராஜன் வந்திருக்கிறார்) வாடா! அப்பா? எங்கள் (சகுனிமாமா வந்திருக்கிறார்) அப்படியா அப்படியா அத்தானே வாரும்; எங்களத்தானிருக்கும் போது எங்களுக்கென்ன குறைச்சல் ஒரு குறைச்சலுமில்லையே.

துரியோதனன் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்

வல்லபிதாவேசித்திர மண்டபமொன்றுண்டாக்கி
எல்லையிற்பாண்டவாளை யெத்துசெய்தழைத்துக்காட்டி
தொல்லைசூதாடியைவர் துரைத்தனம்பறித்துக்கொள்ள
ஒல்லையில்நாங்கள்நல்ல யோசனைசெய்தோமையா.

வ-ம். கேளும் என்பிதாவே! நவரத்தினகசிதமாகிய ஒரு மண்டப முண்டாக்கி, பாண்டவாளை யழைத்துக்காண்பித்து, சூதாடும் படியாய்ச்செய்து, அவர்கள் வாழ்வையெல்லாம் பறித்துக்கொள்ள யோசனை செய்திருக்கிறோமையா.

திருதராட்டிரன்சொல் விருத்தம்

உசந்துபோனார்களெவ ரொடுங்கினார்மக்களென்று
இசைந்திராப்பகலுமையோ யேக்கங்கொண்டடிவயிற்றைப்
பிசைந்துகொண்டழுதுக்கொண்டு பிரட்டல்கொண்டாட்டைகொண்டு
அசைந்துநித்திரையில்லாமல் ஐயோநான்தவிக்கின்றேனே.

வ-ம். அடா! என் கட்டிமகனே! பாண்டவர்பேச்சு உயர்ந்து போச்சுதென்று, திகில் விழுந்து ஏக்கங்கொண்டு, அடிவயிற்றைப் பிசைந்துகொண்டு அழுத கண்ணீருஞ் சிந்தையுமா யிருக்கிறேன். அன்னமுண்டா! நித்திரையுண்டா! நீங்களிந்த யோசனை செய்தது சரி சரி தகும் தகும் ஆ! ஆ!! ஆ!!!

இதுவுமவன்சொல் விருத்தம்

உடந்தையாய்நீங்கள்செய்த யோசனைப்படிக்குத்தானே
நடந்தையேயானலிப்போ நமக்கிணையொருவருண்டோ
அடர்ந்திடுபாண்டவாளை யதோகெதியாக்கிநீயே
கடந்துலகாண்டாலெந்தன் கண்கள்வந்தாற்போலப்பா.

வ-ம். மகனே! துரியோதனா! நீங்கள் செய்த யோசனைப்படிக்குத் தெய்வகடாக்ஷத்தினாலே அப்படியேவந்தால், உலகத்திலே நம்

க்கு எதிருண்டா? பாண்டவர்களை ஓட்டிவிட்டு நீ ஒருத்தனுமே உலகத்தை யாள்வாயேயானால் எனக்குப்போன கண்கள் திரும்பி வந்ததுபோலல்லவா இந்தயோசனை ஆர்சொன்னார்களப்பா மகனே.

துரியோதனன் திரிதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்

போர்செய்வோமென்றான்கர்னன் பொருந்துமென்றுரைத்தான்தம்பி
சீர்செய்யுமற்றுளோரும் செய்யலாமென்றுசொன்னார்
கூர்செய்யுஞ்சூதாலவர் குடியைநான்கெடுப்பேனென்று
பேர்செய்யுஞ்சகுனிமாமன் பிரமாணிக்கமாகச்சொன்னார்.

வ-ம். கேளும் பிதாவே? கர்னமகாராஜா சண்டையினால் வெல்ல வேண்டுமென்று சொன்னார் தம்பி துற்சாதனனும் மற்றபேரும் அப்படியே செய்யலாமென்று சொன்னார்கள். அது கூடாதென்று எங்கள் சகுனிமாமன் சொன்னது சூதினால் பாண்டவர்களை ஊரைவிட்டு ஓடும்படியாய் செய்கிறேனென்று பிரமாணிக்கமாய் சொல்லியிருக்கிறாரையா.

திருதராட்டிரன் சகுனிக்குச்சொல் விருத்தம்

உச்சாயப்பாண்டவாளை யோட்டிவிட்டவர்கள்தன்னை
வைச்சாலுமுந்தன்பார மாய்ந்தாலுமுந்தன்பாரம்
பிச்சானபிள்ளையேயென் பிள்ளையுன்பிள்ளைகாணும்
மச்சானுன்னருளிருந்தால் வையகமகனேயாள்வான்.

வ-ம். ஓய்! மச்சானே? நானுள்ளபடியே சொல்லுகிறேன், அந்தப் பாண்டவாளை யோட்டிவிட்டு எங்களை பூமியிலேவைத்தாலும் உன்பாரந்தான்; மாய்த்தாலும் உன்பாரந்தான்; என் பிள்ளைகள் கள்ளங் கபடு சூது தெரியாத பிள்ளைகள்; என்பிள்ளைகளல்ல உன்பிள்ளைகள்; எப்படியாகிலும் இவர்களை முன்னுக்கு வரும்படியாய் செய்ய வேணும் அத்தானே.

சகுனி திருதராட்டிரனுக்குச்சொல் கவி

அத்தானுனையல்லால் உற்றாரினி யுண்டோ
இத்தாரணியெல்லாம் யெத்தால் வெல்வேனே.

திருதராட்டிரன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

பெருத்ததொட்டிலையுமாட்டி பிள்ளையுங்கிள்ளிகூட
திருத்தமாய்யிருப்பாரந்தத் திருடரைநம்பவேண்டாம்
வருத்தமென்சகுனிமாமன் வார்த்தையைத்தடுத்திடாமல்
கருத்துடநடந்துகொண்டாற் கடைத்தேறிப்போவாயப்பா.

வ-ம். கேளும் துரியோதனா? நம்மிடத்திலே பிள்ளையையுங் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறவர்போல இங்குமங்குமா யிருப்பவர்களுண்டு, அந்தத் திருடரை நம்பவேண்டாம், உன் சகுனிமாமன் சொன்னபடி நடந்துக்கொண்டாயேயானால் கடைத்தேறிப் போவாய் துரியோதனா.

துரியோதனன் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்

மந்திரமுனிவர்சொன்ன வார்த்தையைமறந்திட்டாலும்
தந்திரமாமன்சொல்லைத் தடுப்பனோதடுக்கமாட்டேன்
சுந்திரப்பாண்டவாளை சுருக்கினில்வரவேசொல்லி
எந்தையேயுன்கையோலை யெழுதியேயனுப்புவீரே.

வ-ம். கேளும் பிதாவே? சாபானுக்கிரக சாமார்த்தியரான மகாத்துமாக்களுடைய வார்த்தையைத் தடுத்தாலும் என் சகுனி மாமன் சொல்லைத் தடுக்கமாட்டேன் இப்போது பாண்டவாளை வரச் சொல்லி உன்கை ஓலையாக எழுதியனுப்பவேண்டும் பிதாவே.

திருதராட்டிரன்சொல் விருத்தம்

நல்லதப்படியேயாகட்டும் நாளையதினத்திற்குள்ளே
வல்லபாண்டவர்களிங்கே வந்திடச்செய்கிறேன்யான்
சொல்லுந்துற்சாதனாநீ தூதனையனுப்பிவைத்து
வில்லினில்வலுமைபெற்ற விதுரனைவரச்செய்வாயே.

வ-ம். கேளுமப்பா! துரியோதனா? உன்சொற்பிரகாரம் நாளைய தினத்திற்குள்ளே பாண்டவர்களை இங்கே வரும்படி செய்கிறேன்; அப்பா துற்சாதனா! நீ சீக்கிரமாய் ஒரு தூதனை யனுப்பி வில்லி னில் வல்லவனாகிய என்தம்பி விதுரனை யழைத்துவரச்சொல்லடா துற்சாதனா.

துற்சாதனன்சொல் வசனம்

அப்படியே யழைப்பிக்கிறேனையா

துற்சாதனன் சேவகனுக்குச் சொல் கவி

பேசியே வீரா வீசியேயோடி
பூசியே விதுர ராசனை யழைப்பாய்.

வ-ம். ஆரடா! அடா தூதா? எங்கள் சிறியதகப்பனை விதுர மகாராசனை யழைத்துக்கொண்டு வாடா.

சேவகன்சொல் வசனம்

அப்படியே யழைத்துவருகிறேன் சுவாமி.

திரிதராட்டிரன்சொல் விருத்தம்

மக்களேசகுனியெந்தன் மைத்துனாதுரியாகர்னா
மிக்கவேயிந்தசேதி வெளிப்படப்போகுதப்பா
அக்கரைபாண்டவாள்வந் தகப்படுந்தனிலுமீங்கள்
பொக்கெனக்கிணற்றில்கல்லைப் போட்டாப்போலிருங்களப்பா.

வ-ம். கேளும் என் மகனே! துரியோதனா? அப்பா! கர்னா? துற்சாதனா? சகுனி மைத்துனா? இங்கே ஆலோசனை பண்ணினது வெளிப்பட்டால் மோசம் மோசம் பாண்டவர்கள் நம்மிடகையில் அகப்படுகிறவரையிலும் கிணற்றிலே கல்லைப்போட்டதுபோ லிருங் கள் போய்வாருங்கள்.

துரியோதனன் சொல் வசனம்

சரணம் சரணம் அப்படியே போயிருக்கிறேனையா.

சேவகன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

துதிபெறுவிதரண சூராபோற்றி
விதிதருமநுவின் வேதாபோற்றி
கதிர்பெறுமறநெறி தாதாபோற்றி
மதிமிகுவிதுர மகிபாபோற்றி.

வ-ம். சரணம் சரணம் விதுரமகாராஜனே சுவாமி பராக்கு.

விதுரன் சேவகனுக்குச்சொல் கவி

வீரியசூரா காரியமென்ன
சீருடனுன்னை யார்வரவிட்டார்.

வசனம்

அடாதூதா? உன்னை யனுப்பிவைத்தது யார் சொல்லும் பிள்ளாய்.

சேவகன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

அத்தனேகேளாயுந்த னரவிந்தபாதம்போற்றி
இத்திசைமுழுதும்போற்று மிலங்குமுன் றமையனான
வித்தகன்திருதராட்டிர வேந்தனுனையிப்போது
மெத்தவுமாவலாக விரைவுடன்வரச்சொன்னரே.

வ-ம். கேளுமையா விதுரமகாராஜனே? இராஜாதிராஜ ராஜ பரமேஸ்வரா ராஜமார்த்தாண்ட உத்தண்ட கோலாகலனான திருதராட்டிரமகாராஜன் தங்களை அழைத்துக்கொண்டு வரச்சொன்னர் சுவாமி.

விதுரன் வருகிற தரு

இ-ம்-புன்னாகவராளி-மிசுரதாளம்

பல்லவி

சத்திய விதுரராஜன் வந்தான் படைசுற்றும் புடைசூழ
புவிமுற்றும் புகழ்படைத்த

சரணங்கள்

ஒருவருமெதிரில்லா வில்லான்-இந்த
உலகமுழுதினுலு மொருபொய்யுஞ் சொல்லான்
விரகுள்ள பேர்கள்முன் னில்லான் மேலும்
மெய்யானபொருளல்லால் வீண்பொருள் கல்லான்-சத்தி

தருமத்தைமறவாத சீலன்-ஒன்றும்
தவறில்லாநிலைபெற்ற சர்ஜ்ஜனர்க்கனுகூலன்
அருமைப்புகழினில் விசாலன் தினம்
அனைவர்க்குந் தாயான ஆப்தபரிபாலன்-சத்தி

வந்தவன் றன்னை யெள்ளாமல்-இது
மாயவார்த்தையென்று மறுவார்த்தைவிள்ளாமல்
சந்தேகமேதுங் கொள்ளாமல்
தமையனழைத்ததற்குத் தடைசொல்லித்தள்ளாமல்-சத்தி

விதுரன் திருதராட்டிரனுக்குப் போற்றி விருத்தம்

மண்ணெலாம்புகழு மகிபனேபோற்றி
கண்ணெலாமுறவாய்க் காண்பவாபோற்றி
எண்ணெலாம்படைத்த விறைவனேபோற்றி
தண்ணெலாம்போற்றுமென் தமையனேபோற்றி.

திருதராட்டிரன் விதுரனுக்கு வாழ்த்து கவி

கதிரர் முடிசேர் சதுராவாழி
மதுராமிர்தசொல் விதுராவாழி.

விதுரன்சொல் கவி

மின்னியநெடுவேல் வேந்தர்கள்வேந்தே
மன்னிலமுதல்வா மதிகுலவரசே
தன்மையான சபைதனிலிப்போ
என்னையுமழைத்த தியம்பிடுவீரே.

திருதராட்டிரன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

விதுரனேகேளாய்நீதான் விக்கினஞ்சொல்லவேண்டாம்
மதுரமாமோலையொன்று வாகுடனெழுதித்தாரேன்
இதமுடனோலைகொண்டே இக்ஷணம்நீதான்சென்று
பதமுடன்பாண்டவாளைப் பரிவுடனழைத்துவாராய்.

வ-ம். கேளுந் தம்பி! விதுரா? நீ யாதொரு தடையுஞ்சொல்லாமல் பாண்டவர்கள் இவ்விடம் வரும்படியாய் ஒரு ஓலை எழுதித் தரு கிறேன் அதை எடுத்துக்கொண்டுபோய் பாண்டவர்களை அழைத்து வரவேணுந் தம்பி.

விதுரன் வசனம்

அப்படியே யழைத்துவருகிறேன் அண்ணவே.

திருதராட்டிரன் இராயசக்கணக்கனுக்குச்சொல் கவி

பொழுதுபோமுன்னே தொழுதராயசனே
பழுதிலா ஓலை எழுதடாநீதான்.

இராயசக்காரன்சொல் வசனம்

அப்படியே எழுதுகிறேன் சுவாமி.

இராயசக்காரன் ஓலையெழுதி வாசிக்கும் விருத்தம்

சிரஞ்சீவிபாண்டவர்க்கு ஜெயங்கள்மென்மேலுமுண்டாம்
வரஞ்செறிதம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்

நிரஞ்சனமாகவந்து நீங்களும்பார்க்கவேண்டும்
தாஞ்செறிவிதுரான்பின்னே தடையின்றிவருகுவீரே.

திரிதராட்டிரன் வசனம்

ஆரடா! இராயசக்காரா? இவ்வோலையை செந்திரிகைப்போட்டு எங்கள் தம்பி விதுரராசன் கையில் கொடும் பிள்ளாய்.

இராயசக்காரன்சொல் வசனம்

அப்படியே கொடுத்தேன் சுவாமி.

---

## விதுரன் ஓலைகொண்டு போகுதல்

விசனப்படுகிற-தரு-இ-ம்-திரிபுடைதாளம்

பல்லவி

ஐயையோ இப்படியுஞ்செய்வாரோ துரோகம்
அரிஅரி இதைநினைந்தாலாறுமோ துரோகம்

அநுபல்லவி

ஐயையோ இதுசகுனியால்விளைந்த மூலமோ
அகமிகுந்தகவுரவர்க்குயுகமுடியு காலமோ

சரணங்கள்

கர்னன்துற்சாதனன்சகுனிதுரியோதான் சூது
கருதியவர்கொடிமுடிந்தகபடவஞ்ச மீது
சின்னஞ்சிறுபாண்டவர்க்கு இன்னங்கருத்தெரியாது
திருவுளமேதுணையல்லால்திக்கொருவரினி யேது-ஐயை

நத்துந்திரிதராட்டிரனுக்குநாவுதா னிரண்டோ
நம்பவைத்துக்கழுத்தறுக்கும்ஞாயமெதைக் கொண்டோ
குத்திரஞ்செய்சகுனிஇதைக்குறித்ததென்ன கண்டோ
கொலைசெய்துவாழ்ந்தவர்கள்குவலயத்தின் முன்பினுண்டோ-ஐயை

தருமபுத்திரனுக்கிரகசாரமும் பொல்லாதோ
சதிகாரர்தீவினைமுன் தருமமும்நில்லாதோ
அருமையெண்ணுப்பாவிகளை யக்கிரமம்வெல்லாதோ
அரசனன்றுகொன்றக்கால் தெய்வநின்றுகொல்லாதோ-ஐயை

பாண்டவர்கள் தேசத்திற்கு விதுரான்போகும்போது
தூதர்கள்முன்னோடி தருமராசனுக்குச்
சொல்லுகிற விருத்தம்

தாரணியிலுதித்தோர்க்கெல்லாந் தாயகமாயிருந்து
கருணையால்குளிக்கும்பஞ்ச கர்த்தனேநின்றருள்போற்றி

திருவெல்லாம்படைத்தவுங்கள் சிற்றப்பன்விதுரராஜன்
வருகிறுரையாவுங்கள் மலர்ப்பதம்போற்றிபோற்றி.

வ-ம். சுவாமி! பாராக்கு உங்கள் சிற்றப்பனுன விதுரமகாராஜன் அஸ்திஞபுரத்திலிருந்து தங்களிடத்திற்கு இதோ வருகிறுர் சுவாமி.

பாண்டவர்கள் விதுரனுக்குப்போற்றி விருத்தம்

காவியக்கடலேபோற்றி கார்முகத்தலைவாபோற்றி
கோவியல்முழுதுந்தேர்ந்த குற்றமற்றவனேபோற்றி
மேவியெங்களைரட்சிக்கும் வித்தகாபோற்றிதர்ம
தேவதையானதெங்கள் சிற்றப்பாபோற்றிபோற்றி.

விதுரன் பாண்டவர்களுக்கு வாழ்த்து விருத்தம்

மெய்வருநீதிதோய்ந்த மிகுவிதரணரேவாழி
கைவருஞ்சிலையில்வெற்றி கண்டவீரர்களேவாழி
பொய்வருமொழிசொல்லாத புருஷவுத்தமரேவாழி
ஐவரும்வாழியெந்த னருமைமைந்தர்களேவாழி.

துரோபதை விதுரனுக்குப்போற்றி கவி

நேமாகருணைநிதியோபோற்றி மாமாஅடியார்வாழ்வேபோற்றி
பூமாதகலாப்புயனேபோற்றி மாமாஉன்றன்மலர்த்தாள்போற்றி

விதுரன் துரோபதைக்கு வாழ்த்து விருத்தம்

கற்பினுக்கரசேயெந்தன் கண்ணினுண்மணியேவாழி
மற்பொருமைவர்சிந்தை மகிழ்குலக்கொழுந்தேவாழி
பொற்பனுமாவர்க்கெல்லாம் பொருந்துபூஷணமேவாழி
சொற்பொருளுணர்ந்தநல்ல துரோபதைத்தாயேவாழி.

பாண்டவர்கள் விதுரனுக்குச்சொல் விருத்தம்

நீதியுநெறியுநல்ல நிலைமையுநிசமுமன்பும்
ஓதுமிதெல்லாமுள்ள வுத்தமநின்றுள்போற்றி
தீதில்லாதவனேயிந்த சிறியோரைப்பொருட்டாயெண்ணி
ஏதுகாரணமாய்வந்தீ ரெங்கையேபுரைசெய்வீரே.

வ-ம். கேளும் எங்கள் சிறியதகப்பனுன விதுரமகாராசனே? எங்கள்பேரில் கடாட்சம்வைத்து வந்தகாரியமென்ன? தேவரீர் சொல்லவேண்டுமையா.

விதுரன் பாண்டவர்களுக்குச்சொல் விருத்தம்

பாலரேசொல்லக்கேளீர் பாண்டுராஜனுக்குமூத்த
சீலனுன்பெரியதந்தை திருதராட்டிரமகிபன்
மேலுமுங்களையழைத்து விரைவுடன்வரவேசொல்லி
வோலையுமெழுதித்தந்தா ருள்ளடிவேறேகண்டாய்.

வ-ம். கேளும் பாண்டவர்களே? உங்கள் தகப்பனுக்கு நேர் மூத்த திருதராஷ்டிரமகாராஜன் உங்களை அதிசீக்கிரமாயழைத்து வரச்சொல்லி ஓலையு மெழுதிக்கொடுத்தார் சிறிது உங்களுக்குள் வினையும் நடந்திருக்கிறது பாண்டவர்களே.

தருமர் விதுரனுக்குச்சொல் விருத்தம்

தகப்பனாரழைத்தனுப்ப தடையதுசொன்னோமானால்
நகைப்பரேயுலகிலுள்ளோர் நல்லதப்படியேபோவோம்
வகைசுபசோபனங்கள் மற்றதேதேனுமுண்டோ
துகைபடவரவேசொன்ன சூட்சியையுரைசெய்வீரே.

வ-ம். என் சிற்றப்பனான விதுரமகாராஜனே? எங்கள் பெரிய தகப்பனாரான திருதராட்டிரமகாராஜன் வரச்சொன்னால் அதற்குத் தடைசொன்னால் உலகம் பழிக்காதா? அப்படியே போவோம் ஆகிலும் இப்போது எங்களை யழைப்பித்தகாரியந் தெரியச்சொல்ல வேண்டுமையா.,

விதுரன் பாண்டவர்களுக்குச்சொல் ஆசிரியவிருத்தம்

நீசெய்யும்யாகந் தனக்கு வந்திருந்து
நின்புகழ் பெருமையுங் கண்டு
நெடுமுடி துரியோதனன் கெடுசகுனி
நெஞ்சினிற் பொறாமையை யெண்ணி
மாசிலாப் பெரிய மண்டபஞ்செய்து
மகிழ்ந்ததிற் குடிபுகுந் தினத்தில்
மைந்தரே யும்மை யதில்வரவழைத்து
மாயசூ தாடியே யுங்கள்
தேசமுமரசுஞ் செல்வமும் பறிக்க
திருட்டுஆலோ சனைகள் செய்து
சிறந்தவுன்பெரிய தகப்பனுக் கிதுகள்
செப்பினு ரவருஞ் சம்மதியாய்
ஆசையாயென்னை வரவழைத்து நீயேபோ
யைவரை யழைத்துவா வென்றே
யடைவுடனெழுதிக் கொடுத்தவுன் பெரிய
வப்பன்கை யோலையி தப்பா.

தருமர் அருச்சுனனுக்குச்சொல் விருத்தம்

தொந்தரையெவர்செய்தாலும் சூதுகளெவர்செய்தாலும்
தந்திரமெவர்செய்தாலுந் தருமமேசெயமென்றெண்ணி
அந்தமேமிகுந்ததம்பி யர்ச்சுனவாடாமூத்த
எந்தையாரனுப்புமோலை யெடுத்திதைப்படித்திடாயே.

வ-ம். கேளடாதம்பி! அர்ச்சுனா? நமக்குப் பகையாளியா யிருக்கிறபேர்கள் எத்தனை தொந்தரவுகள் செய்தாலும் சூதுகள் செய்

தாலும் கபடவஞ்சனைகள் செய்தாலும் தருமமே ஜெயம் ஆகையால் அர்ச்சுனா நம்முடைய பெரியதகப்பனார் எழுதிவரவிட்ட ஓலையை யெடுத்து வாசியடா தம்பி.

அர்ச்சுனன் ஓலையைவாசிக்கும் விருத்தம்

சிரஞ்சீவிபாண்டவர்க்கு ஜெயங்கள்மென்மேலுமுண்டாம்
வரஞ்செறிதம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்
நிரஞ்சனமாகவந்து நீங்களும்பார்க்கவேண்டும்
தாஞ்செறிவிதுரன்பின்னே தடையின்றிவருகுவீரே.

தருமர்சொல் விருத்தம்

நன்மையும்புகழுநல்ல ஞானமும்வளவும்வாழ்வும்
வன்மையுமழகுநீதி மார்க்கமுங்குலமுஞ்சீரும்
மென்மையும்விரலுமோங்கும் வெற்றியுமெய்யுஞ்சார்ந்த
தொன்மையுமுடையோரையோ சூதாடநினைப்பதுண்டோ.

வ-ம். நலமும் - கீர்த்தியும் - தயாளமும்-ஞானமும்-செல்வமும்-வலுமையும் - அழகும் - நீதியும் - குலமும்-சிறப்பும்-பராக்கிரமமும்-வெற்றியும்-சத்தியமும் உள்ளவர்கள் சொக்கட்டான்முதலான சூதுகளாட நினைப்பார்களோ இதென்னகாரணம் அரி! அரி! வாசுதேவா.

பீமன்சொல் விருத்தம்

வகையுள்ளோர்தர்மர்துஷ்டர் வஞ்சகமானமில்லார்
சுசிகரமில்லாயீனர் சூதாடநினைப்பதல்லால்
இசையுள்ளோர்சூதமாட மிசைவரோயிதனிலுந்தான்
சசிதருகள்ளுங்கொண்டு கள்ளையுங்குடிக்கலாமே.

வ-ம். பழிக்கஞ்சாதவரும் துஷ்டரும் வஞ்சனைசெய்வோரும் மானமில்லாதவரும் சத்தியமில்லாதவரும் சொக்கட்டான் முதலான சூதுகளாட நினைப்பார்களேயல்லாமல் நல்லவர்கள் ஒருக்காலும் நினைப்பார்களா? இதைவிட கள்ளை சுட்டுக்கொண்டு கள்ளைக் குடிக்கிறது மெத்த நல்லது.

தருமர்சொல் விருத்தம்

பஞ்சபாதகத்திலிந்த பகடையுமொன்றேயென்று
மிஞ்சியவேதசாஸ்திர விற்பனர்விலக்கிவிட்டார்
சஞ்சலசூதுவித்தை தனக்கெதிரிருந்தேயாட
நெஞ்சினிலென்னைத்தானே நினைப்பதுசகுனிமாமன்.

வ-ம். அரி! அரி! நாராயணா!! சொக்கட்டான் முதலான சூதுக்கு பஞ்சமாபாதகத்திலே இதுவுமொன்றென்று பெரியவர்கள் தள்ளி விட்ட இந்த சூதுவித்தையை ஆடவேணுமென்று நினைத்தால் தனக்கெதிராக இருந்து தன்னுடன் ஆடுகிறதற்கு என்னைத்தானா நினைக்க வேண்டும் நம்முடைய சகுனிமாமன்.

அர்ச்சுனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

பொல்லாததுஷ்டரிந்த புத்தியைமனதிற்கொண்டு
மல்லாடுங்கடுஞ்சூதாட வரச்சொல்லியெழுதினும்
வில்லாலுமறிவினலு மிகுந்தசிறப்பாயிந்த
கல்லாதசிறியோர்க்குந்தன் கருத்தென்னவுரைசெய்வீரே.

வ-ம். நல்லது அந்த துஷ்டர்தான் இப்படிப்பட்ட துற்புத்தியை நினைத்து வரச்சொன்னாலும், உம்முடைய திருவுளத்துக்குச் சரியா யிருக்கிறதா? சொல்லுமையா எங்கள் தகப்பனரான விதுர மகாராஜனே.

விதுரர் தருமருக்குச்சொல் விருத்தம்

வாதாடுந்துரியனுக்குச் சகுனிக்குங்கர்னனுக்குஞ்
சூதாடலாகாதென்று சொன்னதுகோடியுண்டு
காதாரச்சொன்னதெல்லாங் கருத்தினில்நினைந்திடாமல்
ஏதோவுன்பிதாவைக்கொண்டு வென்னையுமனுப்பினரே.

வ-ம். கேளுங்கள் மக்களே? துரியோதனனுக்கும் சகுனிக்கும் கர்னனுக்கும் சூதாடுகிறதொழில் நீங்கள் நினைக்கவேண்டாமென்று அனந்தம் நீதிகளைச்சொன்னலும், கேளாமல் உங்களுக்குள்ளே உன் பெரிய தகப்பனை திருதராட்டிர மகாராஜனுக்குச் சொல்லி, அவரைக்கொண்டு எனக்குத் தெரியப்படுத்தி, உங்களை அழைத்துக் கொண்டு வரும்படியாய்ச் சொன்னார்கள்; அப்படியிருக்கிறது அவ்விடத்திய ஆலோசனை மக்களே.

பீமன் தருமருக்குச்சொல் விருத்தம்

வாவியில்வசியைநட்டு மடிந்திடச்செய்தான்முன்பு
நீவியமாளிகையில் நெருப்பிட்டுக்கொல்லப்பார்த்தான்
மேவியசூதாலிப்போ வென்றிடநினைத்தானந்தப்
பாவிதன்முகத்தைநாமும் பார்த்திடலாமோஅண்ணே.

வ-ம். ஆதியிலே ஜலத்தில் வசியைநட்டுக் கொல்லப் பார்த்தான், மேலும் அரக்குமாளிகையில் நம்மைவைத்து நெருப்பிட்டுக் கொல்லப் பார்த்தான்; அதுவும் போதாமல்; இப்போது சூதாடி நம்மைப் பதாதியாக்க நினைத்திருக்கின்றான், அப்படிப்பட்ட மகா பாவியான துரியோதனன் அழைத்தால் நாம் போகலாமா அண்ணவே.

அர்ச்சுனன் தருமருக்குச்சொல் விருத்தம்

வழிமறைநூல்கற்றோரு மருவுதண்ணீருமூன்று
பிழைபொறுத்திடுவதல்லாற் பின்னையும்பொறுப்பதுண்டோ
முழுதிலும்மோசம்போற முறைமைகொண்டழைத்தானந்த
வொழுவிலாப்பகைவர்தங்க ளுறவினிவேண்டாமண்ணே.

வ-ம். கேளும் அண்ணாவே? தருமசாஸ்திரமறிந்தபேரும், தண்ணீரும் மூன்றுபிழை பொறுப்பதல்லாமல் மேலும் பொறுத்திடாது; நாம் நாள்தோறும் அவர்கள் செய்யப்பட்ட மோசத்துக்கெல்லாம் உட்படுகிறபடியினாலே இப்போதும் அழைக்கிறார்கள்; அவர்களுறவும் நமக்குவேண்டாம் நாமும் அங்கே போகலாகாது அண்ணாவே.

நகுலன் தருமருக்குச்சொல் விருத்தம்

விதித்தொருபாவஞ்செய்தால் மேலதையனுபவிப்பார்
பகைத்திடாதிருந்தேபின்னம் பார்த்திடுவோமென்றாலும்
உதைத்தகாற்புழுக்குமுன்னே வுளப்புமேபொறுக்கொணாது
மதித்தவர்நட்புவேண்டாம் வருந்துயர்நமக்குவேண்டாம்.

வ-ம். கேளும் அண்ணாவே? அவரவர்கள் செய்த பொங்குக்குப் பின்னால் அனுபவிப்பார்களென்றாலும் உதைத்தகால் புழுக்கிறதற்கு நாட்செல்லும்; அதுவரையிலும் உளப்புபொறுத்து முடியாது? அது போல் அவர்களிடத்திற்கு போனால் ஏதாகிலும் ஒரு பொல்லாங்கு விளையும்; ஆகையினால் நாமும் போகவேண்டியதில்லை ஒரு பொல்லாங்கும் வரவேண்டியதில்லை அண்ணாவே.

சகாதேவன் தருமருக்குச்சொல் விருத்தம்

பூனைவாயெலியும்வேங்கைப் புலியின்வாய்மானுங்காட்டில்
ஆனைவாய்தழையும்பொல்லா வரவின்வாய்தேரைபோல
மானமும்வலிவுங்கெட்டு வையகமிழந்துபொல்லா
ஈனமும்வருநாமங்கே ஏகவொண்ணாதுசொன்னேன்.

வ-ம். பூனைவாய் எலியைப்போலப் பதைத்தலும், புலியின்வாய் மான்போல அலைச்சலும்; ஆனைவாய்த் தழைபோலக் குழைதலும், பாம்பின்வாய்த் தேரைபோல மெலிதலும், அனுபவிக்க வேண்டியதாய்வரும் ஆகையால் நாமங்கே போகக்கூடாது அண்ணே.

தருமர் தம்பிமார்க்குச்சொல் விருத்தம்

எரிபடவண்டகோள மிடிந்தாலுமாழிபொங்கி
பிரளயம்வந்திட்டாலும் பிதாவாக்கியந் தள்ளலாமோ
வருவதுவருமெப்போதும் வாராதுவாராதென்றுந்
திருகொன்றுஞ்சொல்லவேண்டாம் சென்றுநாம்வருகுவோமே.

வ-ம். இந்த பிர்மாண்ட கடாகமிடிந்து விழுந்தாலும் சத்தசமுத்திரம் பொங்கி ஜலப்பிரளயமானாலும், பிதாவாக்கியத்தைத் தள்ளலாமோ? நாம் போகாமலிருந்தாலும் வருகிறதுவரும் வாராதது வாராது நாம் எப்படியும் போய் வருவோம் தம்பிமார்களே.

தருமர் சேர்வைக்காரருக்குச்சொல் விருத்தம்

பொரிபுலிசேர்வைக்காரா புகழஸ்தினபுரிக்கு
பரிவுள்ளவிதுரன்பின்னே பயணமாய்ப்போகவேணும்

தாணியிலரசரோடுஞ் சதுரங்கசேனையெல்லாம்
விருதுபேரிகைமுழக்கி விரைவுடன்வரச்செய்வாயே.

வ-ம். ஆரடா! பொற்புமி சேர்வைக்காரா? விதுரராஜர் பின் அஸ்தினுபுரிக்குப் போகவேணும், பிரயாணபேரிகை முழக்கிச் சகல ராஜாக்களும் ரதகஜதுரக பதாதிகளும் வரும்படியாய்ச் செய்யடா சேர்வைக்காரா.

(சேர்வைக்காரன்-வசனம்) அப்படியே செய்கிறேன் சுவாமி.

சேர்வைக்காரன் தருமருக்குச்சொல் விருத்தம்

துதிபெறுகுருகுலத்துத் துரைகள்ரத்தினமேயுந்தன்
பதுமபொற்பாதம்போற்றி பராக்குஎச்சரிக்கைசுவாமி
மதிபெறுநமதுதேச மன்னருமற்றுமுள்ள
சதுரங்கசேனைவந்து சபையோடுசேர்ந்தாரையா.

வ-ம். கேளும் ராஜாதி ராஜபரமேஸ்வரா? பராக்கு சகலதேசத் தரசர்களும் வந்தார்கள். சதுரங்கசேனைகளுந் தயாராயிருக்கிறார்கள் சுவாமி.

---

## தருமர் அஸ்திஞபுரிக்கு வருதல்

தரு-இ-ம்-கல்யாணி-திரிபுடைதாளம்

பல்லவி


இராஜராஜன் மதிமரபினில்வரு மதிபதிதரும
ராஜன் வந்தானே.

அநுபல்லவி

மாசில்லாநல்ல மநுநெறிமுறையறிகுண சேகரன்
தேசுலாவிய நயகுணரசமிலகு சுதாகரன்
வீசுபுகழ்பாண்டு புத்திரனவமித்திர னெவர்களும்
பேசவியமலர் மத்திரன் சுபசித்திரன் பரியள
வாசமிகுந்தாரன் உருவில் மாரன்
அதுலசூர பிரபல தீரன்
வருப்பிரசண்ட திண்டிரல் மநுநெறி
தருமகண்ட மண்டலபதி மக (ரா)

சரணங்கள்

மருமலரின்வளர் திருமருவு நெடுமாலை நமஸ்கரித்து-நல்ல
வருசூரெனப் பிரபைதகதகென்ன வொளிமா முடியைத்தரித்து
பொருவிலிருபுய மதனிலிணையுறுபுஜகீர்த்தியைப் பொறுத்து-நல்ல
புதியநவமணி வடமிரமதனில் புனிதமொடு திருத்தி
மருவர்களெதிர்திரைகொடு கிடுகிடென்று தாழ
வருமகபதிக ளருமையினிருமருங்கு சூழ



பாண்டவர்களும் துரோபதையும் அஸ்தினபுரிக்கு வருதல்

அரிவையர்களொயிலாய் வெண்சாமரை போட
வைரிகள்பலபேர் பண்பாயிசை பாட
அம்புவிமதிக்க தம்பியர்கதிக்க
வம்பனர் துதிக்க சம்பிரமமுதிக்க
அந்தரமதிர துந்துமிகவுரிகள்
கொம்புகள்நிறை பம்பைகள்கவரிகள்
வண்டிறல் செயங்கண்டுகள் கிடுகுகள்
மங்கலமிகு சங்குகள் சவுரிகள்
ஆரபாரபேரிகை மிர்தங்கம்
தாரைவீரை பூரிகை றவுண்ட
மல்லரிபல சில்லரி கருவிகள்
அலைகடலிடையெழுநடு மெலியென
அடர்மழைமுகிலதிர தரு கலியென
அகமுழங்க விருதுகள் பலர்சொல
மிகமகிழ்ந்து சுபகர குருகுல ராஜ

பாண்டவர்கள் திருதராட்டிரனுக்குச்சொல் போற்றிவிருத்தம்

சந்திரகுலத்தில்வந்த தயாபராபோற்றிபோற்றி
மைந்தர்மேல்கனிவுகூர்ந்த மன்னவாபோற்றிபோற்றி
விந்தைசேர்வேந்தர்க்கெல்லா மேருவேபோற்றிபோற்றி
தந்தையேயுந்தன்செம்பொற் றுளிணைபோற்றிபோற்றி.

திருதராட்டிரன் பாண்டவர்களுக்கு வாழ்த்து கவி

பூவிலைவரும் பூரணயுசாய்
கோவியற்கையிற் குறைவிலாமையாய்
ஆவியானயென் னருமைமைந்தரே
மேவியேநீங்கள் மென்மேலும்வாழ்கவே.

துரோபதை திருதராட்டிரனுக்குப் போற்றி-கவி

பூமானென்னப் பொறுமைபடைத்த
நேமாஇந்த நிலம்புகழ்வெற்றி
தாமாயார்க்குந் தலைவாவேந்தன்
மாமாஉந்தன் மலர்த்தாள்போற்றி.

திருதராட்டிரன் துரோபதைக்கு வாழ்த்து-கவி

அறுமையுமறிவுமன்பும் ஒருமையுமிகவுமுள்ள
திருமகள்நிகரதான மருமகளேநீவாழி.

திருதராட்டிரன் பாண்டவர்களுக்குச்சொல் விருத்தம்

வழுவிலாவரசுநல்ல வலுமையும்வாழ்வுஞ்சீரும்
அழகுடன்பெற்றிருங்க ளலங்காரசம்பிரமத்தை
தழுவுமென்தம்பியுங்கள் தந்தையாம்பாண்டுராஜன்
பழுதறக்காணும்வாறும் பாக்கியஞ்செய்திலேனே,

வ-ம். கேளுங்கள் மக்களே! உங்கள் துரைத்தனத்தையும் பராக்கிரமத்தையும் செல்வத்தையும் அழகையும் உங்கள் பிதாவான என் தம்பி பாண்டுமகாராஜன் கண்களிக்கப் பார்த்து சந்தோஷப்படுதற்கில்லாமல் போச்சுதே? அதுதான் எனக்கொரு குறை. பின்னொருகுறையுமில்லை மக்களே.

தருமர் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்

தூயநீர்க்குமிழிவானில் தோன்றியமின்னல்போலும்
மாயுமிவ்வுடலமென்றால் வருந்துவதினியேதையா
தாயுமென்றந்தையாக தருமமாய்நீயிருக்க
சேயராமெங்களுக்குச் சிந்தையிற்குறைவேறுண்டோ.

வ-ம். கேளும் எங்கள் பெரிய தகப்பனாரான திருதராட்டிர மகாராஜனே? எங்கள் வைபோகத்தையெல்லாம் எங்கள் தகப்பனாகிய பாண்டுமகாராஜன் பார்க்கிறதற்கில்லாமல் போச்சுதென்று சொல்ல வேண்டியதில்லை; சகலத்துக்கும் நீரே தந்தையாயிருக்க எங்களுக்கு வேறொரு தாழ்வுண்டோ பிதாவே.

திருதராட்டிரன் பாண்டவர்களுக்குச்சொல் விருத்தம்

மனமகிழ்ந்தம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்
கனமிகநீங்கள்வந்து காணவேவேண்டுமென்று
நினைவுகொண்டழைத்தேனப்பா நீங்களும்வந்துவிட்டீர்
இனிதுடனவரும்நீரும் இஷ்டமாயிருங்களப்பா.

வ-ம். கேளுங்கள் என்னுடைமக்களான பாண்டவர்களே? உங்களைக் காணுகிறதற்கு எனக்குக் கண்ணில்லாமற் போனாலும் உங்கள் வசனத்தையாகிலும் இந்த காதிலே கேட்கிறதற்கு எனக்கு ஆசையாயிருக்கிறது? அதுவுமல்லாமல், உங்கள் தம்பிமார்கள் ஒருமண்டபஞ் செய்தார்கள். அதை நீங்கள் பார்க்கவேணுமென்கிற ஆசையாய் அழைப்பித்தேன்: கண்டு கலந்து பேசி ஒருமையாய் இருங்களப்பா மைந்தர்களே.

திருதராட்டிரன் பாண்டவர்களுக்குச்சொல் கவி

வளஞ்செழுமுங்கள் வரவுகண்டுநான்
உளங்களிகூர்ந்தேன் னொருமைமைந்தரே
விளங்கியதாயையும் வீஷ்மர்தம்மையுங்
களங்கமில்லாமற்போய் கண்டுகொள்வீரே.

வ-ம். என் பிள்ளைகளைப் பார்க்கிலும் இஷ்டமான பிள்ளைகளே? இங்கே வந்துவிட்டீர்கள் அதுவேபோதும்; வீட்டிற்குப்போய் உங்கள் தாயார் காந்தாரியை முன்னே கண்டுகொள்ளுங்கள்! பீஷ்மர் துரோணர் முதலானபேரையுங் கண்டுகொள்ளுங்கள் போங்கள் என்னுடைமக்களே.

பாண்டவர்கள் வசனம்

அப்படியே கண்டுகொள்ளுகிறோம் பிதாவே.

பாண்டவர்கள் காந்தாரிக்குப் போற்றிகவி

வயமிகுவாசர் வாழ்வேபோற்றி
ஜெயமிகுகமலத் திருவேபோற்றி
வியமிகுமுலக விளக்கேபோற்றி
தயமிகுபெரிய தாயேபோற்றி.

காந்தாரி பாண்டவர்களுக்குச்சொல் கவி

பன்றியானதுதான்சும்மா பலகுட்டிபோட்டாற்போலே
கன்றுடநூறுபிள்ளை கணக்குக்குப்பெற்றேனப்பா
ஒன்றிலுந்திறமையில்லை வுங்கள்போல்வலுமையில்லை
நன்றுநானினியென்செய்வே னன்றாகயிருங்களப்பா.

வ-ம் பன்றியானது பலகுட்டிப் போட்டாற்போலே கணக்குக்கு நூறுபிள்ளைகளைப் பெற்றேன் ஒன்றுக்காகிலும் புத்தியுண்டா! திறமையுண்டா! சௌரியமுண்டா! தாஷ்டீகமுண்டா! உங்களைப் போல் கீர்த்தி பெற்றதுண்டா! ஆ, குடுப்பா! கெட்டேனே? ஏதாகிலு முண்டா அது என்னுடைய வயறுசெய்த கொடுமை! எப்படியாகிலும் நன்றாயிருங்களப்பா.

துரோபதி காந்தாரிக்குச்சொல் விருத்தம்

இ-ம்-வசந்தபைரவி

திறமுடன்திறமுமிக்க செல்வமுஞ்சிறப்புஞ்சீரும்
பொருவிலாவளமுநல்ல புத்திரபாக்கியமும்பெற்று
ஒருவருமிணையில்லாத வுத்தமியென்றுசொல்லு
மருவியபெரியமாமி மலர்ப்பதம்போற்றிபோற்றி.

காந்தாரி துரோபதைக்குச்சொல் விருத்தம்

எருமைகள்கூட்டம்போ லெனக்குவாய்த்திடு
மருமகப்பெண்களென் மக்கட்கேர்வையோ
ஒருமையாயுன்னைப்போ லொருபெண்காண்கிலன்
எரியுதுயென்செய்வே னெழுந்திராய்பெண்ணே.

வ-ம். எருமைக்கூட்டம்போலே இத்தனைபேர் மருமக்களிருந்தும் என்னத்துக்கு ஆச்சுது! ஒரு நாரிக்காவது ஒரு சித்துவித்தைகள் தெரியுமா? உன்னைப்போலே மருமகள் ஒருத்தியில்லாமற் போனாளேயென்று என் வயிறெரியுது என்னசெய்வேன் எழுந்திரம்மா எழுந்திரு.

தருமர் துரோபதிக்குச்சொல் விருத்தம்

மங்கைதுரோபதியேயுந்தன் மாமியாரிடத்திற்றானே
சங்கையில்லாமல்நீ தான் சதிருடனிருந்தையானால்
துங்கமாம்பீஷ்மர்கிருபர் துரோணரைமற்றுள்ளோரை
பொங்கமாய்பணிந்துபோற்றி பொருந்தவேவருகுவோமே.

வ-ம். கேளும்பெண்ணே துரோபதி! நாங்கள் பீஷ்மர் துரோ ணர் கிருபாசாரியரை கண்டுவருகிறோம் அதுவரையிலும் உங்கள் மாமியாரிடத்தி லிருப்பாய் பெண்ணே.

துரோபதிசொல் வசனம்

அப்படியே யிருக்கிறேன் சுவாமி.

துரியோதனன் சேர்வைக்காரனுக்குச்சொல் விருத்தம்

திண்டிறல்சேர்வைக்காரா சீக்கிரமாகவோடி
மண்டபந்தன்னைப்பார்க்க வரச்சொன்னேனென்றுசொல்லி
எட்டிசைபுகழுகின்ற எழிற்பஞ்சபாண்டவாளை
கொண்டுஇக்கொலுவுக்கிப்போ கொப்பெனவழைத்துவாடா.

வ-ம். ஆரடா! சேர்வைக்காரா! இந்திரபிரஸ்தத்திலேயிருந்து பாண்டவர்க ளைந்துபேரையும், இந்தமண்டபத்தைப்பார்க்க நான் அழைத்தேனென்று அதிசீக்கிரமா யழைத்துவாடா சேர்வைக்காரா.

சேர்வைக்காரன்சொல் வசனம்

அப்படியே யழைத்துவருகிறேன் சுவாமி.

சேர்வைக்காரன் தருமருக்குச்சொல் விருத்தம்

மன்னர்கள்மன்னுபோற்றி மனுமுறைதெரிந்தாய்போற்றி
தன்னிகரில்லாபோற்றி தருமபூபாலாபோற்றி [து
பொன்னின்மண்டபத்தைப்பார்க்கப் பொருந்தியுங்களையிப்போ
நன்னயராஜராஜன் நலமுடன்வரவேசொன்னார்.

வ-ம். இராஜாதி இராஜபரமேஸ்வரா? இராஜமார்த்தாண்ட சத் தியராஜேந்திரா? சத்தியபிரபுடீகா! சத்திய பரிபாலகா? தருமபுத்திர மகாராஜனே? சுவாமி பராக்கு! துரியோதன மகாராஜன் உங்களை யழைத்துவரச் சொன்னார் சுவாமி.

தருமர்சொல் வசனம்

அப்படியே வருகிறோம் பிள்ளாய்.

தருமர் துரியோதனனைத் தழுவிக்கொள்ளும் விருத்தம்

திருவருளுலகமூன்றுந் திறமுடன்றுதித்துப்போற்றும்
தருமபுத்திரனேயெந்தன், தமையனேசரணம்வாரும்
பெருமையும்புகழும்வாழ்வும் பெருந்துரியோதனுவுன்
அருமைசேர்தம்பிமார்க ளனைவரும்நீயும்வாழி.

துரியோதனன் தருமருக்குச்சொல் விருத்தம்

வழுவுறவுங்களுக்கு மயனென்றதேவதச்சன்
தழுவுறச்செய்துவந்த சபையிலுமதிகமாக
செழுநவரத்தினத்தாற் சிறக்கநான்செய்துவைத்த
அழகியமண்டபத்தி னலங்காரம்பாராயண்ணே.

வ-ம். கேளும் அண்ணா தருமபுத்திரரே முன்னாலே உங்களுக்கு மயனென்னுந் தச்சன் செய்துகொடுத்த சபையைப் பார்க்கிலும் அதிக உன்னதமாகச் செய்துவைத்தேன் இந்த மண்டபத்தினுடைய அலங்காரத்தைப் பாரா யண்ணே.

தருமர் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

சுந்தரமிகுந்ததம்பி துரியோதனாநீகேளாய்
அந்தமாமண்டபங்க ளநேகநான்பார்த்ததுண்டு
விந்தையிதென்னசொல்வேன் விளங்குமூவுலகந்தன்னில்
இந்தமண்டபத்தைப்போலே யெங்குநான்கண்டிலேனே.

வ-ம். தம்பி துரியோதனா! நான் அநேக மண்டபங்களைப் பார்த்திருக்கிறேன், ஆனாலிந்த சொர்க்க மத்திய பாதாள திரிலோகத்திலேயும் இப்படிப்பட்ட உன்னதமான மண்டபத்தை நான் எங்குங் கண்டதில்லை; வெகு லக்ஷணமாயிருக்கின்றது தம்பி துரியோதனா.

சகுனி துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

நூதனமாகச்செய்து நுட்பமாயலங்கரித்து
சோதிசேர்மண்டபத்தில் துரைமக்கள்வந்துகூடி
போதவேமகிழ்ச்சியாகப் பொழுதுபோம்படியாயிங்கே
ஏதொருகாலக்ஷேப மில்லாமலிருக்கலாமோ.

வ-ம். கேளும் என்னுசை மருமகனான துரியோதனா? இந்த அலங்கார மண்டபத்திலே, உங்களைப்போலொற்ற துரைமக்களெல்லாம் வந்து சும்மாயிருக்கிறது நன்றாயிருக்கவில்லை; பொழுது போம்படியாய் ஏதாகிலும் ஒரு காலக்ஷேபம் பண்ணவேணுங்காணும் துரியோதனமகாராஜனே.

துரியோதனன் தருமருக்குச்சொல் விருத்தம்

ஆமிதுமெய்தான்மெய்தா னண்ணாகேளொருவிண்ணப்பம்
நாமெல்லாம்போஜனத்துக் கெழுந்துபோந்தனிலுமிங்கே
மாமனுநீயுமாக மகிழ்ச்சியாயெதிரிருந்து
தோமறவேயோராட்டஞ் சொக்கட்டானாடுவீரே.

வ-ம். ஆ ஆ மெய்தான் மெய்தான் மெய்தான் மாமா! சபாசு நன்றாய்ச் சொன்னீர்! அண்ணா தருமபுத்திர மகாராஜனே? நாமெல்லோரும் போஜனத்திற்குப் போகுமுன்பாக மாமாவும் நீயும் ஒரு ஆட்டம் சொக்கட்டான் போடுங்களண்ணே.

தருமர் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

வேதநாலிருக்குஞானம் விளங்குநாலிருக்கநல்ல
நீதிசாஸ்திரமிருக்க நிபுணர்கள்பலரிருக்க
நூதனமாகச்செய்த நுவலுறுமண்டபத்தில்
சூதுதுமடையர்செய்யுந் தொழிலையோசெய்யவேண்டும்.

வ-ம். கேளுந் தம்பி துரியோதனா! வேதங்கள் சாஸ்திரங்கள் மனுவிக்கியானங்கள் இதுமுதலான தருமசாஸ்திரங்களிருக்க, இந்த

அலங்காரமண்டபத்தில், முதல் முதல் புத்தியில்லாதவர்கள் ஆடப் பட்ட சொக்கட்டா னடவேணுமா! வேறொரு தொழிலில்லையா தம்பி துரியோதனா.

வீமன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

சண்டையும்பகையும்வாதுஞ் சாற்றியபிழையும்பொய்யும்
கண்டிதமொழியும்பொல்லாக் கவலையுங்குடியிருப்பார்
கொண்டுளசூதுவித்தை கொற்றவர்க்கடாதேயிந்த
மண்டபந்தன்னிலின்ன மற்றொன்றைச்செய்யலாமே.

வ-ம். சண்டைக்கும் பகைக்கும், அசத்தியத்திற்கும் பொய்க் கும் கோபத்துக்கும் ஏதுவாயிருக்கப்பட்ட இந்த சொக்கட்டானை இங்கே ஆடவேணும், இது இராஜசபைக்கு யோக்கியமல்ல! வேறே ஒரு காலக்ஷேபஞ்செய்யலாம் துரியோதனமகாராஜனே.

அர்ச்சுனன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

மனதினிலொன்றைவைத்து வாக்கினிலொன்றைப்பேசி
துனிவருந்துரோகஞ்செய்வோர் சூதாடநினைப்பதல்லாற்
றனதுபாராட்டிதம்பி தமையனென்றொருமையுள்ளோர்
கனவிலுஞ்சூதமாடக் கருத்தினினினைந்திட்டாரே.

வ-ம். கேளும் துரியோதனா! மனதிலொன்றுநினைத்து வாக்கில் ஒன்றைச்சொல்லி ஒருவருடையபொருளை அபகரிக்கவேண்டுமென்று நினைக்கப்பட்ட சாமத்துரோகிகள் இந்தச் சொக்கட்டா னடுவார்களே யல்லாமல் தன் தாய் அண்ணன் தம்பிகளென்று ஒருமையா யிருக்கப் பட்டவர்கள் ஒருக்காலும் இந்தச் சூதாட நினைக்கமாட்டார்கள் துரியோதனா.

தருமர் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

மனத்தில்வஞ்சனைநினைந்த மாமனையெதிரியாக்கி
சினத்தசூதாலேயெங்கள் செல்வத்தைபழிக்கலுற்றாய்
நினைத்துநீயெதுகேட்டாலு நிமிஷத்திற்றருவேனிந்த
அனர்த்தமாஞ்சொக்கட்டானை யாடுவதொழித்திடாயே.

வ-ம். கேளுந் துரியோதனா! சகுனிமாமனை எனக்கு எதிரியாக்கி கபடச்சூதாடி எங்கள் செல்வத்தைப் பறித்துக்கொள்ளவேண்டிய தில்லை. நீ எதைக்குறித்துக் கேட்டாலுந் தடையில்லாமல் நான் தரு கிறேன், இந்தச் சூதாடுகிறதை நிறுத்தவேணுந் தம்பி துரியோதனா.

சகுனி தருமருக்குச்சொல் விருத்தம்

சுந்தரமாயோராட்டஞ் சொக்கட்டானடைச்சொன்னால்
சிந்தையிநடுநடுங்கி திகிற்படநீதானுமேல்
புந்தியினினைந்துகேட்ட பொருளெலாந்தருவேனென்றாய்
பந்தமாய்நீகொடுக்கும் பவுஷிதோதெரிந்துபோச்சே.

வ-ம். கேளுந் தருமராஜனே? ஓராட்டஞ் சொக்கட்டானுடுவோ மென்று சொன்னமாத்திரத்திலே, பயந்து நடுநடுங்கி திகிற்பிடித்து, கழகழ வழவழ பசபசவென்று முழிக்கிறீர்! நீதானு? துரியோதன மகாராஜன் கேட்டதெல்லாங் கொடுக்கப்போகிறுய்? நீ கொடுக்கப் போகிற பவுஷு இதிலே தெரிந்துபோச்சுதே? போ! போ! ஆ! ஆ! தருமபுத்திரமகாராஜனே.

கர்னன் தருமருக்குச்சொல் விருத்தம்

கதித்தசூதாடிவெல்லக் கையிலாகாதநீதான்
எதிர்த்தபோர்க்களத்தினின்று யாரைநீர்வெல்லப்போதீர்
விதித்ததம்பியரும்நீரும் விலவிலத்துளறிக்கொண்டு
பிதத்துறீர்விட்டுவிட்டோம் பிராணனைக்காத்துக்கொள்வீர்.

வ-ம். கேளுந் தருமராஜனே? சொக்கட்டாடி வெல்லப் போருய் அதுவெளிச்சந்தான்? இவ்வளவுக்கே உன் தம்பிமாரும் நீயும் விலவிலத்து கலகலத்து கிடுகிடென்று நடுக்கி முன்பின் தோன் றுமல் பினத்துகிறீர்கள்! நல்லது உங்களை விட்டுவிட்டோம்! நீங்கள் அடங்கலும் உங்கள் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள் போங் கள்! போங்கள்!!

அர்ச்சுனன் கர்னனுக்குச்சொல் விருத்தம்

வஞ்சனைநினைத்தழைத்து மாயசூதாடச்சொல்லி
கொஞ்சமென்றிகழ்ச்சிசெய்து குதிக்கிறுயடாகர்ன
நஞ்சினையிகழ்ச்சிசொன்ன நாக்கையுமறுத்துவுந்தன்
நெஞ்சினைப்பிளந்துவெட்டி நிணக்குடலெடுப்பேன்பாராய்.

வ-ம். கேளடா! அடா கர்ன? கபடமார்க்கமாக யெங்களை யழை த்துவந்து சூதாடச்சொல்லி, இகழ்ந்துபேசுகிற உன்னுக்கையறுத்து, நெஞ்சைப்பிளந்து, நிணக்குடலெடுக்கிறேன்; இதோ அஸ்திரம் வரு கின்றது இதைப்பிடித்துக்கொள்ளடா கர்ன.

தருமர் அர்ச்சுனனுக்குச்சொல் விருத்தம்

அறுத்தறுத்தென்சொன்னுலும் அடாதம்பிஅர்ச்சுனகேள்
பொறுத்தவர்பூமியாள்வார் பொறுபொறுபதறவேண்டாம்
தடுத்துநாம்சொல்வதென்ன தருமமேஜெயமென்றெண்ணி
வொறுத்திடுமாமனோடே யோராட்டமாடுவோமே.

வ-ம். கேளாய் தம்பி அர்ச்சுன? 'பொறுத்தவர் பூமியாள்வார் பொங்கினவர் காடாள்வார்' என்ற வார்த்தையை நீ கேட்டதில்லையா! அவர்கள்தான் அதர்மம் பண்ணினுலும், இகழ்ந்து பேசினுலும், உனக்குக் கோபம் வரலாமா? பொறு! பொறு! பதறுதகாரியஞ் சித றுது நல்லது 'தருமமேஜெயம் ஒரு ஆட்டந்தான் போடுவோம் திரு வுளமிருக்குது.

துரியோதனன் தருமருக்குச்சொல் விருத்தம்

இதுசரிநன்றுய்ச்சொன்னீர் இன்றுன்னைமெச்சிக்கொண்டேன்
சதிசெய்வேனென்றுசொல்லி சற்றுநீயஞ்சவேண்டாம்

நிதியில்நீதோற்றதெல்லாம் நீதானேகொடுக்கவேணும்
பதியிலென்மாமன்தோற்ற பந்தயம்நானேதாரேன்.

வ-ம். இதுவே சரி! சபாசு! இப்படியல்லவோ துணியவேணும்; அண்ணா தர்மபுத்திரரே? இப்போது நான் உன்னை மெச்சிக்கொண்டேன்; முன்னேதானே சம்மதிக்கலாகாதா! நாம் பாலும் தேனும் போல இருக்கிற அண்ணன் தம்பிகளுக்குள்ளே; ஏதாகிலுமொரு வஞ்சனை நடக்குமா! நடக்காது; ஆனால் நீர் தோற்றதேயுண்டானால் நீரே கொடுக்கவேண்டும்; என்மாமன் தோற்றபொருளை நானே கொடுக்கிறேன்; போடுங்கள் பார்ப்போம்.

தருமர் சகுனிக்குச்சொல் விருத்தம்

உந்தனுக்கெதிரியாக யிருந்திந்தகெடுசூதாட
தொந்தமாய்வாயுங்கையுந் துடிக்கின்றசகுனிமாமா
விந்தையாய்நூறுகோடி விலைபெற்றமுத்துமாலை
பந்தயமாய்க்குறித்து பண்புடன்வைத்தேன்பாராய்.

வ-ம். என்னுடனேகூட சொக்கட்டானடுகிறதற்கு வாயுங் கையுந் துடிக்கின்ற சகுனிமாமா இதோ நூறுகோடி பொன்பெற்ற முத்துமாலையை இதோ பந்தயமாகக் கட்டிவைத்தேன் பாரும்.

துரியோதனன் தருமருக்குச்சொல் விருத்தம்

சாந்தமாங்குணத்தின்மிக்க தர்மபுத்திரரேகேளாய்
வேந்தனென்மாமன்வைக்க வேண்டும்பந்தயத்துக்காக
போந்திடும்நூறுகோடி பொன்பெற்றவளையமித்தைப்
பந்தயமாயெவரும்பார்க்கப் பந்தயம்வைத்தேன்பாராய்.

வ-ம். கேளாய் அண்ணே! தருமபுத்திரரே? என் சகுனிமாமன் வைக்கவேண்டிய பந்தயத்துக்காக இதோ நூறுகோடி பொன்பெற்ற வாகுவலயத்தை எதிர்பந்தயமாக வைத்தேன் இதோபார்த்தீரா!! இதோ பார்த்தீரா.

---

## முதலாவது ஆட்டம்


சொக்கட்டான் ஆடுகிறது

தருமர்சொல்-தரு-புன்னுகவராளி-அடதாளம்

| | |
|---|---|
| ஸ்ரீகிருஷ்ணஅரிகிருபை | யாளா-யுந்தன் |
| செயலல்லவோ இது | தீனதயாளா-ஸ்ரீகிரு |

சகுனி வசனம்

ஓய்! தருமராஜாவே? மூணத்தொண்ணு முதலில் விழுந்தபடியினாலே உம்மிட ஆட்டந் தோற்றுப்போகும் நான் போடுகிறேன் பாரும்.



தருமரும் சகுனியும் சூதாடுதல்

சகுனிசொல் தரு

ஓடிவாடாகுட்டிச் | சாத்தான்-எந்தன்
உருட்டுக்கும்பிரட்டுக்கும் உதவிசெய்காத்தான் ஓடி

வ-ம். பன்னிரண்டு பத்து காய்வைத்தபிறகு.

தருமர்சொல் தரு

சத்தியமேதுணை தருமமே ஜயம்
சத்தியமேதுணையென்றுந் தர்மமேஜயமென்றும்
உற்றுநினைத்தபேர்க்குவுண்டோவுண்டோ லயம் சத்தி

வ-ம். நாலத்தோரஞ்சு.

தந்திரமேதுணையென்றுஞ் சமர்த்தேஜயமென்றும்
இந்திரஜாலம்கற்ற எனக்கென்னமோ லயம் தந்

இதுவும் சகுனிசொல் தரு

அக்கிரமந்துணையென்றும் அதற்கேஜயமென்றும்
தக்கவித்தைகள்கற்ற சகுனிக்கென்ன பயம் அக்கி

வ-ம். ஒருபன்னிரண்டு எட்டு இரிக்காலொன்பது.

தருமர்சொல் தரு.

பதருமலேயாடுங்காணும் மாமா
பதருமலேயாடுங்காணும்
பதருமற்பாச்சிகைபக்குவமாய்ப் போட்டு
பந்தயம்விழுந்ததைப்பார்த்தாட வேணும் பதரு

வ-ம். நாலுமூணேழு.

சகுனிசொல் தரு

சுறுக்காகத்தாணுடவேணும் ஆட்டம்
சுறுக்காகத்தாணுடவேணும்
சுறுக்காகபாச்சிகை வெறுக்காமலேபோட்டு
நிறுக்காகவேயாடு குறுக்காகப்பேசாதே சுருக்

வ-ம். இரண்டெட்டு இரண்டுதுகை பத்து.

தருமர்சொல் தரு

விழுபன்னிரண்டொருபத்து ஆ-ஆ
விழுபன்னிரண்டொருபத்து
விழுபன்னிரண்டொருபத்து விழுந்தாக்கால்
முழுதுங்குங்குமக்காயால் முன்னேகட்டலாஞ்சோடு விழு

வ-ம். மூணத்தொண்ணு.

சகுனிசொல் தரு

நான்கட்டுவேன்முன்னேசோடு தம்பி
நான்கட்டுவேன்முன்னேசோடு
நான்கட்டுவேன்சோடு நமக்குமுண்டோஈடு
கான்பட்டகுங்குமக்காயைரெண்டையுங் குத்தி நான்

வ-ம். இரிக்கால் எட்டு பன்னிரண்டு ஒன்பது.

தருமர்சொல் தரு

பத்தும்பகடையும்வேணும் இப்போ
பத்தும்பகடையும்வேணும்
பத்துடனேயொருபகடையும் வீழ்ந்தாக்கால்
குத்தினகாய்நட்டுக்குங்குமங் கட்டலாம் பத்து

வ-ம். நாலத்தோரஞ்சு.

சகுனிசொல் தரு

கட்டினஜோடுபோரவேணும் இப்போ
கட்டினஜோடுபோரவேணும்
கட்டினஜோடுபோர்த்துக்காயுமோயில் போட்டு
எட்டிக்குங்குமத்திஎட்டுபோடவே வேணும் கட்டி

வ-ம். இரண்டு பன்னிரண்டு பத்து.

தருமர்சொல் தரு

என்கையிற்பந்தயங்காணோம் மாமா
என்கையிற்பந்தயங்காணோம்
என்கையிற்பந்தய மேமோ விழக்காணோம்
முன்கையிலாறெண்ணு மூணத்தோ ணல்லாமல் என்

வ-ம். ஆறெண்ணேழு.

சகுனிசொல் தரு

பனிரண்டுதுகையெட்டும்வேணும் இப்போ ஒரு
பனிரண்டுதுகையெட்டும்வேணும்
பனிரண்டுதுகையெட்டுபந்தயம்விழுந் தாக்கால்
பலிக்கும்நமதாட்டம் கெலிக்கும்கெலிக்கு மொரு பனி

வ-ம். இரிக்கால், துகை, பன்னிரண்டு, எட்டு, பத்து,

சகுனியும் துரியோதனனும் சந்தோஷப்பட்டுச் சொல் விருத்தம்

என்னுசைமருமகனே யெழில்துரியோதனனேகேள்
மன்னனதர்மர்முத்து மாலையைநான்கெலித்தேன்
பொன்னனமாமாவுன்னைப் புகழ்ந்திடவென்னலாமோ
முன்னனவலக்கைதாரும் முத்தம்நான்தருகுவேனே.

சகுனி வசனம். என்னுடைய மருமகனுன துரியோதன மகா ராஜனே! தருமராசன் பந்தயமாகவைத்த முத்துமாலையை நான் கெலித்தேன்.

துரியோதனன் வசனம். ஆ ஆ சகுனிமாமா? உன் சமர்த்தை என்னாலே சொல்ல முடியுமோ! எதோ? உமது வலக்கையைத்தாரும் ஒரு முத்தங் கொடுக்கிறேன்.

சகுனி தருமருக்குச்சொல் விருத்தம்

மதியுள்ள தருமபுத்திரா மனதுநீ தளரவேண்டாம்
முதல்முதல்தோற்றபேர்கள் முற்றிலுங்கெலிப்பாருந்தன்
ரதகஜதுரகநாடு நகரத்தைக்குறித்துமேலும்
இதமுடனினியோராட்ட மின்னமுமாடுவோமே.

வ-ம். கேளுந் தருமராசனே! நாம் தோற்றுப்போனுமென்று நினைக்கவேண்டாம். முதல் தோற்கிறது நல்லது; இனிமேல் நீ கெலிப்பாய்; ஆகையால் உன்னுடைய ஆனை சேனை நாடு நகரம் பரிவார மிவைகளைக்குறித்து பந்தயங்கட்டி இன்னுமொருதரம் ஆடுவோம் வாருந் தருமராசனே.

தருமர் வசனம். அப்படியே ஆடுவோம் வாரும் மாமா.

## இரண்டாவது ஆட்டம்

சகுனிசொல் தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-மீசுரதாளம்

நானேகெலிக்கிறேன்பார் இந்த-ஆட்டமும்
நானேகெலிக்கிறேன்பார்
கோனுனதருமர்கொடித்தேருங் குதிரையும்
ஆனையுஞ்சேனையுமவராளுந் தேசமும் நானே

வ-ம். துகை, இரிக்கால், எட்டு, பனிரண்டு பத்து.

தருமர்சொல் தரு

தர்மமேசத்தியம் அரி அரி
தர்மமேநித்தியம்
இம்மையிற்கோடி இடறுகள் வாய்த்தாலும்
நன்மைசேர்நாடு நகரத்தைத் தோற்றாலுந் தர்ம

வ-ம். துகை நாலத்தோரஞ்சு.

சகுனிசொல் தரு

இனிவிடுவேனே நான்கொஞ்சத்தி
லெழுந்திருப்பேனே
சனியாயேழரைநாட்டுச்சனிபோலவே பிடித்து
முனிவாயெதிர்ப்பந்தயமுழுதுமோடி யடித்து நானே

வ-ம். பன்னிரண்டு பத்து.

தருமர்சொல் தரு

விட்டுவிட்டாலும் விடாமல்கான்
கட்டுபட்டாலும்
குட்டுபட்டாலும் குறைவந்து நேர்ந்தாலும்
நஷ்டப்பட்டாலும் நடுக்கம்வந் திட்டாலும் (தர்)

வ-ம். இரிக்கால் பத்து.

சகுனிசொல் தரு

ஏற்கவே சூது வழவமென்று
விகற்கெலிப்பேது
பார்க்கினிலெனதுகைப் பகடைப் பொக்கிஷத்தொட்டி
மூர்க்கமாய்த்துடை தட்டிமுன்னே ஜோடுகட்டி ஏற்க

வ-ம். பன்னிரண்டு துகை பத்து.

தருமர்சொல் தரு

சூதுசெய்தாலும் எண்ணமலிப்
போதுவைதாலும்
காதகஞ்செய்தாலுங்கபடமே செய்தாலும்
தோதகஞ்செய்தாலுந் தொந்தரை செய்தாலும் (தர்)

வ-ம். ஆறெண்ணேழு.

சகுனிசொல் தரு

பாண்டவர் சாரை சகுனியென்னும்
பாம்பின்வாய்தேரை
பாண்டவரென்னைப் பழித்துச் சொல்லாவண்ணம்
மூண்டது சூதுமுடிந்தது என்னெண்ணம் (நானே)

வ-ம். பன்னிரண்டு எட்டு ஆறு நாலு பத்து.

தருமர்சொல் தரு

மிக்கவே யின்று எங்களையிவ்
வித்திலும் வென்று
சொக்கட்டாணுடித் துஜங்கட்டி யாண்டாலும்
இக்கட்டாலெங்களுக் கிடர்வந்து மூண்டாலும் (தர்ம)

வ-ம். மூணத்தொண்ணு.

சகுனி சந்தோஷப்பட்டு துரியோதனனுக்குச்சொல் கொச்சகம்

அஞ்சுபேருந்தவிர யானைபரிசேனைரதம்
இஞ்சவுள்ளநாடுநக ரின்பமிகுசெம்பொன்மணி
வஞ்சவுப்புசட்டி வரவோடுமில்லாமல்
பஞ்சவரைப்பஞ்சாய்ப் பறக்கடித்தேன்பார்த்தீரோ.

வ-ம். ஆ ஹா! கேளும் என்னுடைய மருமகனான துரியோதன மகாராஜனே இந்தப் பாண்டவர்கள் ஐவர்தவிர இவர்களுக்குள்ள ரத

கஜ துரக பதாதிகளையுங் கெலித்து, உப்புசட்டி வாவோடுங்கூட இவர்களுக்குச் சுதந்தரமில்லாமல் பஞ்சவரை இலவம்பஞ்சாய்ப் பறக்கடித்தேன் பார்த்தையோ துரியோதனமகாராஜனே.

துரியோதனன் சகுனிக்குச்சொல் விருத்தம்

இத்துடன்விடலாகாது இவர்க்குள்ள தம்பிமாரும்
அத்துடனிவருமாக வைந்துபேரையுங்குறித்து
எத்துடனினியோராட்ட மிசையவேநன்றுயாடிக்
கொத்துடன்கெலித்தாலெந்தன் குலதெய்வம்நீயேமாமா.

வ-ம். கேளுங்காணும் ஓய் மாமா! அதிலே மகிழ்ந்துபோருய் வீமன்-அர்ச்சுனன்-நகுலன்-சகாதேவன் இன்னம் நாலுபேரிருக்கவில்லையா? இந்த தருமராஜாயிருக்கவில்லையா? ஆக ஐந்துபேரையுங் குறித்து, இனியோராட்டம் போட்டாலல்லவோ சரி.

சகுனி துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

நகைமொழிசொன்னீர்முட்ட நனைந்தவர்க்கீரமுண்டோ
சகலமுந்தோற்றவீரர் தமைத்தோற்கவஞ்சுவாரோ
அகமகிழ்ந்தாடுவோமென் றவர்களேசொல்லுவார்கள்
தருமருமகனேசும்மா சற்றேநீயிருந்துபாராய்.

வ-ம். ஆ ஆ மருமகனே! முட்டநனைந்தவர்களுக்கு ஈரமுண்டா? நாடு-நகரம்-ஆனை-சேனை-பரிவாரம் இதுகளையெல்லாந் தோற்றுவிட்ட மகா ரோஷக்காரரான பாண்டவர்கள், தங்களஞ்சுபேரையுங்குறித்து ஆடுகிறதற்குப் பின்வாங்குவார்களா? அவர்கள் தானே வலிய ஆடப் போகிருர்கள் பாரும் திரியோதனமகாராஜனே.

சகுனி தருமருக்குச்சொல் விருத்தம்

தருமபுத்திரனேநீதான் சற்புத்திரனுகையாலே
மருவுமென்வார்த்தைதன்னை மனதினில்நிசமென்றெண்ணி
ஒருமையுன்தம்பிமாரு முன்னையுங்குறித்தேயின்னம்
அருமையாய்நாமோராட்டம் ஆடுவோமாடுவோமே.

வ-ம். கேளுந் தருமபுத்திரனே! நீ சற்புத்திரனுனபடியால் என் சொல்லைத் தள்ளமாட்டாய். இப்போது உன் தம்பிமாரையும் உன்னையும் ஆக ஐந்துபேரையுங்குறித்து, இன்னமோராட்டம் ஆடுவோம் வாருந் தருமராஜனே.

தருமர் சகுனிக்குச்சொல் விருத்தம்

ஆவதுந்தெய்வத்தாலே யழிவதுந்தெய்வத்தாலே
மேவியநம்மாலிங்கே வேறென்றுநடப்பதில்லை
தாவியெங்களையுங்கூட தனைக்குறித்தாடவென்றீர்
கோவியில்முறையைச்சொன்னீர் கொப்பெனவாடுவோமே.

வ-ம். ஓய் மாமா! தோற்புங் கெலிப்பும், நன்மை துன்மையும், ஆகிறதும் அழிகிறதும் திருவுளச்செயலே யல்லாமல் நம்முடைய

செயலல்ல. எல்லாந் தோற்றுப்போன எங்களையுங் குறித்து ஆடு மென்று சொல்லுகிறீர்; நல்லநீதி அப்படியே யாடுவோம் வாரும்.

சகுனி துரியோதனனுக்குச்சொல் வசனம்

ஆ ஆ மருமகனே! தருமபுத்திரன் மகா புத்திசாலி ஐந்துபேரை யுங்குறித்து ஆடுகிறதற்குப் பின்வாங்கமாட்டான் என்று முன்னே தானே சொன்னேன் பார்த்தீரா அதற்குத் திருஷ்டாந்தம்.

---

## மூன்றாவது ஆட்டம்

சகுனிசொல் தரு இ-ம்-சங்கராபரணம்-தாளம்-மிசுரம்

அஞ்சுபேரையுமிப்போ கெலிக்கிறேன்-நமக்
கடிமைத்தொழில்புரிய வலிக்கிறேன்
கொஞ்சம்பரியுந்தேரும் குடையும்படையும்போச்சு
தஞ்சநாடுநகரஞ் சகலமும்நம்மதாச்சு (அஞ்)

வ-ம். மூணு-பன்னிரண்டு-எட்டு-இரிக்கால்-நாலத்தோரஞ்சு.

தருமர்சொல் தரு

உங்களுக்கேசெல்வம் பெருக்கட்டும்-நாங்க
ளோடுங்கினாலுந்தர்ம மிருக்கட்டும்
எங்களுக்கினியில்லா யிடறுகள்வந்தாலும்
அங்கங்குன்றியுங்கட் கடிமையாய்ப்போனாலும் (உங்)

வ-ம். நாலத்தோரஞ்சு.

சகுனிசொல் தரு

கடலெல்லாந்தாண்டியோர் கால்வாயைத்தாண்டவென்
கையிலாகாதென்று விடுவேனோ-பெருங்
கட்டையெல்லாம்வெட்டி சுட்டுப்போட்டுவொரு
கரும்பைவெட்டப்பயப் படுவேனோ-இந்த
அடியிலெதிரிக்காக அடர்ந்தபந்தயம்போட்டு
அத்தித் தத்திப்பற்றி சுற்றிக் கொத்திக் குத்தி (அஞ்)

வ-ம். நாலெட்டு-இரண்டு-பனிரண்டு-இரிக்கால்-துகை - நாலத் தோரஞ்சு.

தருமர்சொல் தரு

பேரும்ஊரும்வாழ்வும் பெண்டு பிள்ளையும்நாம்
பிறந்தபோதுகூடப் பிறந்ததோ-இந்தப்
பேதகஞ்செய்துஅன் னீதஞ்செய்துமன்னர்
பெற்றசெல்வமும் பின்சிறந்ததோ-மாமா
நேருமிரவுதன்னில் நிலவுஞ்சிலதுகாலம்
ஆருமுளநடுங்கு மிருளுஞ்சிலதுகாலம் (உங்)

வ-ம். நாலத்தோரஞ்சு.

சகுனிசொல் தரு

மலைகளெல்லாங்கையால் வாரியுண்டுருண்டு
மணியைக்கண்டுபயப் படுவேனோ-பகை
வந்துநேர்ந்தபோது வேரைக்கெல்லிடாமல்
வழுவமெழன்றுவிட்டு விடுவேனோ-இதோ
மெலியுமெதிரிற்சாரை வெளியிற்புறப்படாமல்
வெட்டிக் கிட்டிக் குட்டித் தட்டிக் கொட்டிக் கட்டி (அஞ்)

வ-ம். இரண்டு - பன்னிரண்டு - இரண்டெட்டு - தகை - மூணத்தொண்ணு.

தருமர்சொல் தரு

போகாதபொருள் தன்னைப் போவென்றுசொன்னாலும்
போகாமலொன்றுபத் தாகுமோ-விட்டு
போகும்பொருள் தன்னைப் போகாமலிருக்கவும்
புதைத்துவைத்தாலுந்தா னிருக்குமோ-மா
வாகானவுலகத்தில் மழையுஞ்சிலதுகாலம்
வேகமானகோடை வெயிலுஞ்சிலதுகாலம் (உங்)

வ-ம். மூணத்தொண்ணு.

சகுனிசொல் தரு

முன்னேவைத்தகாலைப் பின்னேவைத்துஎன்னால்
முடியாதென்றால்சகுனி யாவேனோ-எண்ண
முடியுமட்டுமொரு காலில்நின்றேயதை
முடிக்காமலெழுந்துநான் போவேனோ-நான்
சொன்னசொல்லுக்கொரு சின்னம்வந்திடாமல்
குட்டிக்கூட்டிபோட்டுக் காட்டி மூட்டி வாட்டி (அஞ்)

வ-ம். நாலெட்டிரண்டிரிக்கால்-தகை-ஒன்பது.

தருமர்சொல் தரு

கபடமெண்ணிப்பொல்லா துரோகஞ்செய்துவெறுங்
கனத்தைத்தேடுவதென்ன புத்தியோ-மாமா
கதறிக்கதறிக்கள்ள கயிறுருட்டிப்பகடைக்
காயில்வெல்லுவதென்ன வெற்றியோ-மாமா
குவியுங்கடலினீரைக் குடத்திலடைக்கலாமோ
குடிக்கும்வம்பரைப்போலத் துடிக்குஞ்சகுனிமாமா (உன்)

வ-ம். நாலத்தோரஞ்சு.

சகுனிசொல் விருத்தம்

தருமபுத்திரன்செருக்கும் தம்பிவீமன்கொழுப்பும்
மருவுயர்ச்சுனன் துடிப்பு மற்றிருவர்கள்பதைப்பும்

அரிவை துரோபதைநொடிப்பு மவள்சிரித்திடுஞ்சிரிப்பும்
ஒருநொடியிலென்கையா லொடுங்கிப்போனதைக்கண்டீரோ.

வ-ம். பார்த்தீர்களா! பார்த்தீர்களா! தருமபுத்திரன் செருக்கும், தம்பி வீமன் கொழுப்பும், அர்ச்சுனனுடைய துள்ளலும், இந்தப் பசங்களுடைய முறுக்கும், அந்த துரோபதியினுடைய குலுக்கும் பலுக்கும் கெலிப்பும் சிரிப்பும் எல்லாம் ஒரு சகுனிகையிலே வந்து ஒடுங்கிப்போனதை பார்த்தீர்களா ஆ! ஆ!!

துரியோதனன் தருமருக்குச்சொல் விருத்தம்

தெய்வத்தின்செயலோநான்முன் செய்தபுண்ணியமோநீங்கள்
ஐவருந்தோர்த்திரெங்கட் கடிமையாய்ப்போனீரிப்பால்
மைவருங்கண்ணளந்த மாதுதுரோபதையைவைத்து
கைவரவினியோராட்டங் கருத்துடனாடுவீரே.

வ-ம். கேட்டீரோ தருமபுத்திரரே? நீங்கள் ஐவருந் தோற்று எங்களுக்கு அடிமையாய்ப் போனதினாலே, நீங்கள் ஐந்துபேரும் தொட்டுப்பார்க்கிறீர்களே? அந்த அழியாதபத்தினியைக்குறித்து ஓராட்டம் போடுங்கள்.

பொது வ-ம். இந்தப்படியாய் துரோபதியைக்குறித்து ஆடச் சொல்லி துரியோதனன் சொல்ல, திருதராட்டிரனைப்பார்த்து விதுர மகாராசன் சொல்லுகிறவிதங் காண்க.

விதுரன் திருதராட்டிரனுக்குச்சொல் கவி

ஐயையோ கெடுவாயிந்த வன்னீதமுலகிலுண்டோ
நையவுன்குடிக்குநாச காலமும்வந்துதோதான்
பொய்வளையண்ணன்றேவி பெற்றதாயாச்சேயந்த
தையலைக்குறித்தேயாடத் தகாதென்றுசொல்லொணாதோ.

வ-ம். கேளாய் அண்ணா! திருதராட்டிரமகாராசனே? இவ்வனியாயம் உலகத்திலுண்டோ! உன்னுடைய சமஸ்தானத்துக்கு என்ன கேடுகாலம் வந்துதோ! உன் மகனுக்கு அந்தத் துரோபதி தமயன் பாரியாளானபடியால், தாய்க்குச் சமானமாச்சுதே! அவளையும் வைத்தாடச்சொல்லி, உன்மகன் சொல்வதைக்கேட்டு, நீ சும்மாயிருக்கலாமா? உன்சொல்லைத் தள்ளிப்போடுவானா? வேண்டாமென்று ஒரு வார்த்தையைச் சொல்லலாகாதா? ஐயையோ அண்ணே.

சகுனி விதுரனுக்குச்சொல் விருத்தம்

தோற்றுப்போனவர்களொன்றுஞ் சொல்லாமலிருக்கமேலும்
வார்த்தைசொல்லாமல்மற்ற மன்னவர்பார்த்திருக்க
ஆற்றமாந்தலையிரக்க முனக்கிப்போவந்ததென்ன
ஏற்றவுன்ஞாயமிங்கே யிருக்கட்டும்போம்போங்காணும்.

வ-ம். தோற்றுப்போன பாண்டவர்கள் மாணிக்கம்போல் வாயைத் திறவாமலிருக்க, மற்றவர்களுஞ் சிடுக்குப்பொடுக் கெண்ணுமலிருக்க, உனக்குத் தலையிரக்கம் வந்ததென்னகாணும், இப்போ ஞாயம்பேச வந்தாய்.

விதுரன் சகுனிக்குச்சொல் வசனம்

ஓய்! சகுனிமாமா? உன்னாலேதானிந்த சமஸ்தானம் வெட்ட வெளிச்சம் பட்டப் பகலாகப் போகப்போகிறது, உன்பேச்சுக்கு வரவில்லை? நீர் சும்மாயிரும்.

விதுரன் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்

பிள்ளைகள் தீங்குசெய்தால் பிதாநல்லபுத்திசொல்லி
தள்ளவேவேணுமந்தத் தன்மையுன்னிடத்திலில்லை
உள்ளநாளுள்ளமட்டும் ஓரவஞ்சனையேசெய்தாய்
எள்ளுந்தண்ணீருநாளை யாருனக்கிறைக்கப்போறார்.

வ-ம். கேளும் அண்ணா திருதராட்டிரமகாராஜனே? பிள்ளைகள் ஒரு பொல்லாங்குசெய்தால் தகப்பன் நல்ல புத்திமதியைச்சொல்லி, அதைத் தடுக்கவேண்டும். அந்த நடத்தை உன்னிடத்திலில்லை; எப்போதும் உன் தம்பிபிள்ளைகளுக்கு ஓரவஞ்சனையேசெய்தாய், உன் பிள்ளைகள் நாளை எள்ளுந் தண்ணீரு மிறைக்க உதவவேணுமே அண்ணே.

இதுவும் விதுரன்சொல் விருத்தம்

தம்பிபிள்ளைகளைமூத்த தமையன்பிள்ளைகள்கெலித்து
கொம்பனையாளைக்கூட குறித்தாடச்சொல்லலாமோ
வெம்பியுன்மகனுரைத்த வேலையேநடக்குமானால்
நம்புவியரசும்வாழ்வும் நாசமாய்ப்போகும்சொன்னேன்.

வ-ம். தம்பிபிள்ளைகள் கூடப்பிறந்த தமையன் பிள்ளைகளடிமையாக்கிக் கொள்ளுகிறது அவர்கள் பெண்சாதியைக்கூட, ஏது நிமித்தியம் அடிமையாக்கிக்கொள்கிறது; உன்மகன் சொல்லுகிறது உனக்குச் சரியாயிருக்குதா? அப்படி நடக்குமானால் இந்த ஆதீனத்துக்குக் கெடுதிவரும் சொன்னேன் சொன்னேன்.

சகுனி தருமருக்குச்சொல் வசனம்

தம்பி தருமபுத்திரா? அந்தக்கிழவனும் இந்தக்கிழவனும் ஏதோ பேசிக்கொள்ளுகிறார்கள்; இந்தக்கிழவன்பேச்சு இந்தத் துரியோதனனை கிண்ணாரக்காரனுக்கு ஏற்கப்போகிறதா? துரோபதையைக் குறித்து நாம் ஓராட்டம் போடுவோம் வாரும்.

தருமர் வ-ம். அப்படியே செய்வோம்.

---

## துரோபதையை வைத்தாடுகிறது
## நான்காவது ஆட்டம்

சகுனிசொல் தரு இ-ம்-புன்னுகவராளி-அடதாளம்

என்மருமகனுக்கு இதிலல்லவோ நாட்டம்
எப்படியாகிலுங்கெலிக்கிறே னிந்தாட்டம்

சகுனி வசனம்

இரண்டு-பனிரெண்டு, இரண்டெட்டு, இரண்டிரிக்கால், துகைபத்து

துரியோதனன்சொல் வசனம்

ஆ ஆ ஆ ஆ ஓய் கர்னமகாராஜனே! பார்த்தீரா? எங்கள் சகுனி மாமன் கையேகை. மற்றபேர்கை உலக்கைதான் அடுக்கடுக்காய் பந்தயம் விழுகிற சொகுசை நானென்ன சொல்வேன். ஓய் மாமா உன் கையை இப்படிதாரும் என் கண்ணிலே ஒற்றிக்கொள்ளவேணும்.

தருமர்சொல் தரு

ஐயையோ ஈதெல்லாமரசற்குத் தருமமல்ல
அன்னீதஞ்செய்தாலதற்குநானென்ன சொல்ல

சகுனிசொல் வசனம்

ஆஆ விளங்கினதே பழையபந்தயம்தான், மூணத்தொண்ணுதான்.

சகுனிசொல் தரு

நன்மையிலுஞ்சில துன்மையிலு மந்த
நாளையிலுமெந்தவேளையிலும் பார்க்கில் (என்)

சகுனிசொல் வசனம்

மூன்று பனிரெண்டு, மூன்றெட்டு, மூன்றிரிக்கால், மூன்று துகை, பத்து.


தருமர்சொல் தரு

மெய்யானமூர்க்கமும் பொய்யான மார்க்கமும்
வீச்சுகளுங்கொஞ்சம் பேச்சுகளும்பார்த்தால் (ஐயை)

தருமர்சொல் வசனம். துகை-நாலு-மூணேழு.

சகுனிசொல் தரு

அஞ்சுபேரையுங்கூடகெலித்ததும் பெரிதல்ல
அடிமையாக்கிக்கொண்டதும்பெரி தல்ல
ஆனைகளும்பரிசேனைகளுமவர்
அஸ்திரங்களுநல்ல வஸ்திரங்களும்ரத்ன
ஆரங்களுஞ்சுத்த வீரங்களுமாத
ராடைகளுஞ்சித்ர மேடைகளுங்கட்டிடும்
ஆடைகளும் ரொக்கசாடிகளுமவர்
அட்டிகளுஞ்சப்ர கட்டில்களுமவர்
ஆட்டங்களுமாதர் கூட்டங்களுந்திர



தருமர் துரோபதையை வைத்து சூதாடுதல்

ளாடுகளும்பசுமாடுகளும்மவர்
ஆஸ்திகளும்சிலபாஸ்திகளுமிது
வெல்லாம்வலித்தோமேயெல்லாங்கெலித்தோமே
அதுவும்பெரிதல்லஇதுவும்பெரிதல்ல. என்

தருமர்சொல் தரு

சொக்கட்டானுடவேயோசனைபண்ணதும்
தோர்க்கடிப்போமென்றுமனதினிலெண்ணதும்
தோதகமும்வஞ்சபேதகமுமொன்றைச்
சூட்டுவதுங்கோபமூட்டுவதும்பல
தொடுவழக்கும்பொல்லாப்படுவழக்கும்வெகு
துற்புத்தியுங்கெடுவிற்புத்தியுமிந்த
சொற்பனையுங்கதிசற்பனையும்பேய்போல்
துள்ளுவதுமாடிக்கொள்ளுவதுமிந்த
சொற்பிரட்டுங்கள்ளக்கைப்பிரட்டுமிந்திர
சுழலுகளுமுழுதும்பழுதுகளிங்கெட்ட
சூதுகளும்வீண்வாதுகளும்பார்க்கில். ஐயை

துரியோதனன் வீஷ்மருக்குச்சொல் விருத்தம்

தரித்திரனுந்தர்மபுத்திரன்பாவந்தானோ
தம்பிமார்செய்தவினை தாழ்வுதானோ
சிரித்துக்கலுக்கெனக்குலுக்கிக்குலுக்கும்பச்சை
சேயிழையாள்துரோபதைசெய்தீங்குதானோ
பொருத்தமுள்ளவென்யாமன்சகுனிசெய்த
புண்ணியமோநான்செய்தபூசைதானோ
வருத்தமின்றிப்பாண்டவர்கள்வந்தவாறும்
வந்தவிடத்தினில்விடிந்தவாறும்பாரீர்.

வ-ம். கேளும் எங்கள் பாட்டனாகிய வீஷ்மரே? இந்த தருமபுத்திரன்செய்த அதர்மமோ? தம்பி அழகப்பமாருடைய தவக்குறையோ அல்லமலும் அங்ஙனே சிரித்து அங்ஙனே நொடித்து அப்படி முறுக்கி இப்படி திருப்பி கலுக்கென்று குலுக்கி மொளுக்கென்று முறிஞ்சிப்போறுளே அந்தத் துரோபதையான தேவடியாள் செய்த பொல்லாங்கோ? என் சகுனிமாமனுடைய புண்ணியமோ? என் பாக்கியவசமோ? ஆ! ஆ! இந்தப்பாண்டவர்கள் அங்கேயிருந்து வந்ததும் இங்கே வந்தவிடத்திலே இவர்கள் அதோகதியாய்ப்போன போக்கும் பார்த்தீரா பாட்டனாரே.

வீஷ்மர் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

நமதுகுலம்பிறர்நகைக்குங்குலமேயல்ல
நராதிபருக்கிதுகளெல்லாம்ஞாயமல்ல
சமரசமாம்பாண்டவர்களன்னியரல்ல
சகோதரரைக்கெடுக்கிறதுதருமமல்ல

அமிர்தகுண . ரஞ்சாலியற்பமல்ல
அவள்சபித்தாலுன்னைவிட்டுப்போறதல்ல
விமலமில்லாவட துரியாவையோவிந்த
விபரீதகுணமுனக்குவேண்டாமப்பா.

வ-ம். ஆ! ஆ! அடா துரியோதனு? என்னடா நம்முடைய குலம் பிறர் நகைக்கப்பட்ட குலமல்லவே அந்தப் பாண்டவர்கள் அன்னியர்களல்லவே, சகோதரர்களுக்கு ஒருகேடு நினைக்கிறது தருமமல்லவே? அந்த ராஜபத்தினியான துரோபதை அற்பசொற்பமல்லவே அவள் வாக்கினலே ஒன்றைச்சொன்னுல் உன்னை விட்டுப் போகிறதல்லவே ஐயையோ இந்த விபரீதகுணமான வார்த்தையும் வசனமும் வேண்டாமப்பா துரியோதன.

துரியோதனன் வீஷ்மருக்குச்சொல் விருத்தம்

பெருத்தவென்னப்பனென்னைப் பெற்றவன்திருதராஷ்டிரன்
ஒருத்தனேயெந்தன்வார்த்தைக் குடன்பட்டுநடப்பாரிந்த
நரைத்தலைக்கிழவரெல்லாம் நானென்றுசொன்னுலத்தை
யிருத்தவேறென்றைச்சொல்வதெப்போதும்வழக்கந்தானே.

வ-ம். சரி சரி! சரி சரி!! ஆ ஆ! இதிலே குறைச்சலில்லை ஏது காணும் என்னப்பனென்னைப்பெற்றவன் திருதராட்டிரமகாராஜனே தரும் நானெப்படிசொன்னுல் அப்படியே கேழ்க்கவும் நடக்கவும் இந்த வீஷ்மர் விதுரன் துரோணர் என்று சொல்லப்பட்ட நரைத்தலைக் கிழவரெல்லாம் நானென்று சொன்னுல் அதைத்தடுத்து வேறென்று சொல்லுகிறது எப்போதும் வழக்கந்தானே சிற்றப்பா நல்லதாகட்டும்.

துரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

சிற்றப்பாசிலபேரை அனுப்பியவர்
தேசமெல்லாந்தோரணங்கள்கட்டச்சொல்லும்
வற்றவுப்புசட்டிவரவோடுங்கூட
வைக்காமலிங்கெடுத்துவரவேசொல்லும்
குற்றமுள்ள இவரையெழுந்திருக்கச்சொல்லும்
கொத்தடிமையானதொழிற்செய்யச்சொல்லும்
சித்தினிதுரோபதையைசபையிலிப்போ
சீக்கிரமாயெழுந்துவரச்சொல்லுவாயே.

வ-ம். அப் சிற்றப்பா? இனி முன்பின் யோசனைபண்ணவேண்டியதில்லை சிலபேரை யனுப்பி பாண்டவர் தேசமெல்லாம் தோரணங் கட்டச்சொல்லும் அவர்கள் வீட்டிலே யிருக்கப்பட்ட உப்புசட்டி வரவோடுங்கூட பாக்கியில்லாமல் எல்லாம் என் வீட்டிலே கொண்டு வந்து போடச்சொல்லும், இந்த பாண்டவர்களைந்துபேரையு மெழுந்திருக்கச் சொல்லி அடிமைவேலை செய்யச்சொல்லும், அந்த சித்தினி சிறுக்கியான துரோபதையை இங்கே இழுத்துவரச்சொல்லும் எழுந்துபோம் சிற்றப்பா.

விதுரன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

எந்தகாரியஞ்செய்தாலு மெவர்களெனென்செய்தாலும்
அந்தக்கற்புடையாளான அரிவைதுரோபதையைமன்னர்
மந்திரசபையிலிப்போ மானமில்லாமற்பேசும்
நிந்தையைமறந்தாயானல் நீடூழிகாலம்வாழ்வாய்.

வ-ம். அப்பா! துரியோதனா நீ செங்கோல் செலுத்தப்பட்டவன் செங்கோலுக்குமுன்னே சங்கீதமாகுமா நீ யாரை என்னசொன்னாலும் எதை எப்படிசெய்தாலும் செய் அதிலும் தன்மானம் பிறர்மானமென்றும் பாராமல் அந்த மகாகற்புடையவளான துரோபதையை இந்தசபையிலே சின்னமாய் இகழ்ந்து பேசுகிறையே அது நலமல்ல அதை மறந்துவிட்டாயானல் கற்பகோடிகாலம் வாழ்வாயப்பா.

துரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

நற்பயனன்றாய்ச்சொன்னீர் நாலஞ்சுபேரைநித்தஞ்
செப்பமாய்க்கூடிக்கூடித் திரிந்ததுரோபதையாளுக்கு
கற்பேதுமானமேது கணக்கேதுகாரியமேது
சொற்பனத்தினிலுமந்த தோகையைமறந்திடேனே.

வ-ம். சிற்றப்பா? நன்றாகச்சொன்னீர் சுருக்குபையில் அரிவாளை வைத்தாப்போலிருக்கிறது நீர் சொல்லுகிறது ஏதுகாணும் நித்தம் ஐந்துபேருடன் கூடப்போகிற வேசி அவளுக்குக் கற்பா? மானமா காரியமா கணக்கா பளாபளா அந்த ராஜசூயயாகத்திலுன்னையல்ல பார்த்து நகைத்தது. அது என்மனதிலே யிருக்கின்றது அவளை விடுவேனே.

விதுரன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

திறமையில்லாவிகடதுரியோதனாநான்
சேதியொன்றுசொல்லுகிறேன்தெளிவாய்க்கேளும்
பொறுமைதனிலேமிகுந்தபூமிதேவி
பூமிபாரம்பொறுக்கமாட்டேனென்று
திறமுடையமாயனுடன்சொன்னதை
தீர்க்கிறேனென்றுசொல்லிநெடியமாலும்
தரைதனில்வந்தவதரித்தானதற்கேற்றாப்போற்
சக்கிமுக்கிதட்டாதேசதையப்போறாய்.

வ-ம். கேளுமப்பா! துரியோதனா? பூமியிலே அக்கிரமம் மிகுந்து பூமிதேவியானவள் பூமிபாரம் பொறுக்கமாட்டாமல் மகாவிஷ்ணுவுடன் முறையிட்டாள் அந்த மகாவிஷ்ணுவும் அந்த பூமிபாரத்தைத் தீர்க்கிறேனென்று நம்மிலே ஒருவராகவந்து அவதரித்திருக்கின்றார் ஆகையினாலே ஏதோ ஒருவிபரீதம் விளையப்போகிறது அதற்கேற்றாப்போலே நீயுஞ் சக்கிமுக்கி போடுகிறாய் வேண்டாம் வேண்டாம் மோசம்வரும் சொன்னேன் சொன்னேன்.

துரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

பின்னையுநலமேயிந்தப் பிரகாரம்நடக்குமானல்
தின்னுஞ்சர்க்கரைப்பந்தல்மேல் தேன்மாரிபொழிந்தாப்போல்தான்
கொன்னிகும்பிடப்போய்தெய்வம் குறுக்காகவந்தாப்போல்தான்
துன்னிநானினைத்தகாரியம் சுருக்காகநடத்துவேனே.

வ-ம். ஆ ஆ ஆ ஆ பின்னையுஞ் சந்தோஷந்தான் அப்படியே நடக்குமானல் சர்க்கரைப்பந்தலிலே தேன்மாரிபொழிந்தாற்போலும் கும்பிடப்போன தெய்வங் குறுக்காக வந்ததுபோலுந்தான் ஆனல் நினைத்தகாரியத்தை எல்லாஞ் சுருக்காய்முடிப்பேன்.

துரியோதனன் பிரதிகாமியனுக்குச்சொல் விருத்தம்

பிறிச்சதுஇதுதானப்பா பிரதிகாமியனேவாடா
தறிச்சநீள்மரங்கள்போல சபையிலேநிற்பதாக
பறிச்சபாண்டவர்களின்று பகடையில்வைத்துத்தோற்ற
முறிச்சிறிக்கியைநீபோயென் முகத்துமுன்னிழுத்துவாடா.

வ-ம். அடா! பிரதிகாமியா வாடா? இங்கே பாண்டவர்கள் சபையிலே வைத்து தோற்றூர்களே அந்த முறிச்சிறிக்கியை இங்கே இழுத்துக்கொண்டு வாடா.

பிரதிகாமியன் துரியோதனனுக்குச்சொல் கவி

வெற்பகமென்னு-மற்புயமன்ன
பொற்புடன்சொன்ன-சொற்படிசெய்வேன்

பிரதிகாமியன்போய்த் திரும்பிவந்து
துரியோதனனுக்குச்சொல் கவி

திடம்பெறுமன்ன-அடர்ந்தனனங்கே
தொடர்ந்தொருவழக்கு நடந்ததுகேளும்

வ-ம். அழைக்கப்போனவிடத்திலே நடந்ததைக்கேளும் சுவாமி.

துரியோதனன் பிரதிகாமியனுக்குச்சொல் கவி

கன்னியைஇழுத்துக்கொண்டு-முன்னமேவரச்சொன்னல்
துன்னியவழக்குண்டென்று-என்னடாசும்மாவந்தாய்.

வ-ம். துரோபதையை யிழுத்துக்கொண்டு வரச்சொன்னல் என்னடா வழக்கென்று சொல்லுகிறுய்.

பிரதிகாமியன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

என்னைமுன்தோற்றபின்பு எழிலவர்தோற்றிட்டாரோ
பின்னுமைவர்கள்தோற்று பிறகென்னைத்தோற்றிட்டாரோ
முன்னமேயென்னைத்தோற்றல் மொழியுண்டுபின்னேதோற்றல்
அன்னீதமெனையழைக்க வடுக்குமோலாசர்க்கென்றுள்.

வ-ம். என்னை முன்னே தோற்று பிறகு ஐந்துபேர்களுந் தோற்றூர்களா? ஐந்துபேருந் தோற்று அதின் பிறகு என்னைத் தோற்றூர்

களா? அப்படியில்லையா, முன் என்னைத்தோற்றால் பேச்சுண்டு ஐந்து பேருந் தோற்றபிறகு என்னைத் தோற்றபடியினாலே அது நியாயமல்ல அந்தச் சபையிலே அழைக்கிறது தருமமல்லவென்று அந்தம்மாள் சொல்லுகிறாள் சுவாமி.

துரியோதனன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்

கொம்பிலேகொம்புபட்டு குதிரைக்குமுளைத்தெதன்றால்
நம்பும்பாண்டவரைப்போலே நம்மையுமெண்ணிக்கொண்டாள்
தம்பிதுற்சாதனாவோர் தாண்டிலேநீபோயந்த
வம்பிதுரோபதையையிங்கே மயிர்பிடித்திழுத்துவாடா.

வ-ம். அடா தம்பி! துற்சாதனா? கேட்டையா அந்த சிறுக்கி கொண்ட அகம் முன் தோற்றவர்களென்றும் பின் தோற்றவர்களென்று மொரு வழக்குண்டாக்கினாள். குதிரைக்கு கொம்பிலே கொம்பு முளைத்ததென்றால் தன்னுடைய வெச்சக்காரர்கள் நம்புவார்களே அப்படி நம்மையுமெண்ணிக் கொண்டாப்போ லிருக்கிறது அவளைப்போய் மயிர்பிடித்து இழுத்துவாடா தம்பி.

துற்சாதனன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

தாட்சண்யமெண்ணமாட்டேன் தயவையுமெண்ணமாட்டேன்
நாட்சென்றவைரமெல்லா நானிப்போதீர்த்துக்கொள்வேன்
வாட்சென்றமன்னரெல்லா மருவியகொலுவின்முன்னே
சூட்சியாய்க்கொண்டுவந்து சுருக்கினில்விடுவேனண்ணே.

வ-ம். அண்ணா? தாட்சண்ணியமுள்ளவர்கள் முகத்தைக்கூடப் பார்க்கமாட்டேன் எனக்கா தயை தாட்சண்யமிருக்கும் இந்த அடியிலே அவளை யிழுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன் பாரு மண்ணே.

## துற்சாதனன் சொல்லிக்கொண்டுபோகிற தரு

இ-ம்-மோகனம்-மிசுரதாளம்

பல்லவி

| | |
|---|---|
| அப்படியவள்சொல்ல | லாச்சா-எங்க |
| ளடிமையாய்ப்போனபின் | பேச்சா |

அநுபல்லவி

| | |
|---|---|
| தப்பிலிசிறிக்கியைத்தவிடாக்கொழிக் | கிறேன் |
| தடுத்துச்சொன்னால்வாயை | பிடித்துக்கிழிக்கிறேன் (அ) |

சரணங்கள்

| | |
|---|---|
| புலியைபூனைகள்வந்து | வெல்லுமா-இவள் |
| பொங்கெல்லாமினிஇங்கே | செல்லுமா |
| நலியமயிர்பிடித்து | நானேயிழுக்கிறேன் |
| ஞாயமெடுத்துச்சொன்னால் | நாக்கையறுக்கிறேன் (அ) |

செத்தமாடுபுல்லைத் தின்னுமா-இவள்
சித்திரக்கதையிங்கே மின்னுமா-எந்தன்
சத்தங்கேட்டவுடன்வந்தாலே பார்க்கிறேன்
தடங்கல்சொன்னால்சக்கை சக்கையாய்ப்பேர்க்கிறேன் (அ)

பெண்பெண்ஜாதிக்கிந்த வார்த்தையா-ஓகோ
பிரதிகாமியனேநீ பார்த்தையா
எண்படும்வேசியையிப்போ தழைக்கிறேன்
இகலெடுத்துச்சொன்னால் சிகைபிடித்திழுக்கிறேன் (அ)

துற்சாதனன் துரோபதைக்குச்சொல் விருத்தம்

மதித்ததுரோபதைநீயேதான் மானமுள்ளவளேயானால்
விதித்தநூற்றொருவரன்பு வேணுமென்றவளேயானால்
கொதித்தவென்னண்ணனுன்னைக் கொலுவினிலழைக்கச்சொன்னார்
எதிர்த்துவுந்தாஞ்சொல்லாம லெழுந்திருந்தென்பின்வாராய்.

வ-ம். கேளாய் துரோபதையே? நீ நல்ல மானமுள்ளவளே யானால் எங்கள் நூறுபேருடைய தயவுவேணுமென்றவளேயானால் மறுவார்த்தை சொல்லாமல் எங்களண்ணன் கொலுவுக்கு சீக்கிரமாய் எழுந்துவா.

துரோபதை துற்சாதனனுக்குச்சொல் கொச்சகம்

மட்டுமருக்கு மரியாதையில்லாமல்
பொட்டனவேவந்தழைத்த புத்தியில்லாமைத்துனரே
தொட்டமுடியுங்களண்ணன் சூழுஞ்சபையிலென்னை
இட்டுவரச்சொன்னவிதம் இன்னதென்றுசொல்வீரே.

வ-ம். மருக்கு மரியாதையில்லாமல் வந்தழைத்த மைத்துனரே? ராஜராஜாக்கள் நிறைந்தசபையில் உங்களண்ணனென்னை அழைத்து வரச்சொன்ன விதத்தை இன்னதென்று தெரியச்சொல்லவேணும் மைத்துனரே.

துற்சாதனன் துரோபதைக்குச்சொல் கொச்சகம்

மன்னியதருமபுத்திரன் வலியசூதாடியையோ
முன்னிலைநகரம்நாடு முழுதுமேதோற்றானப்பால்
தன்னையுந்தோற்றான் தம்பி மாரையுந்தோற்றான்பின்னே
உன்னையுந்தோற்றானெல்லா மொடுக்கினான்வந்துபாராய்.

வ-ம். என்னத்தை சொல்லுகிறது தர்மராசா ஒரு ஆட்டம் சொக்கட்டா னடுவோமென்று சொன்னான் அது நமக்கு யோக்கிய மல்லவென்று சொன்னோம் அப்படியல்லவென்று ஆடி நாடு நகரமுத லானதுகளும் தோற்றான் அப்பால் தம்பிமாரையுந் தோற்றான் பிறகு தன்னையுந் தோற்றான் ஏறுங்கடைசியில் உன்னையும் தோற்றான் ஓடிப் பாடி ஒடுங்கி உட்கார்ந்துக்கொண்டிருக்கிறான் அவர்களை வந்து பார்த்து வருவாய்வா.

துரோபதை துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்

என்னையுஞ்சொக்கட்டானி லிசையவேவைத்துத்தோற்ற
மன்னவரெனக்குச்சொல்லி வரவழைத்திடுவார்கண்டாய்
உன்னையார்கண்டாருங்க ளண்ணனையார் தான்கண்டார்
பின்னமாய்ப்பேசவேண்டாம் பேசாமல்நடந்திடாயே.

வ-ம். என்னைச் சூதாடித்தோற்ற என்பிராணநாயகர் என்னை வரவழைப்பார் உன்னை யார்கண்டார் உங்களண்ணனை யார்கண்டார் அதிகமாய் பேசவேண்டாம் நடநட.

துற்சாதனன் துரோபதைக்குச்சொல்விருத்தம்

நடக்கத்தான்வந்தேனிந்த நாழிகைதனிலேயுன்னை
அடக்கத்தான்வந்தேனெங்க ளண்ணன்முன்கொண்டுபோய்
விடுக்கத்தான்வந்தேனந்த வேந்தர்கள்சபையில்வெட்கங்
கெடுக்கத்தான்வந்தேன்போடி கெர்வமேனெழுந்துவாடி.

வ-ம். நடக்கவா நடக்கவும் உன்கெர்வத்தை யடக்கவும் எங்க ளண்ணன்முன்னே கொண்டுபோய் விடுக்கவும் அந்தச்சபையில் உன் வெட்கத்தைக் கெடுக்கவுந்தான் வந்தேன் அறியாயோ என்னை.

துரோபதை காந்தாரிக்குச்சொல் விருத்தம்

மாமிநீபாராயுந்தன் மகன்செயுமனியாயத்தை
தாமதமன்னர்சூழும் சபைதனில்வரவேசொல்லி
காமிகள்போலேயெந்தன் கைபிடித்திழுக்கவந்தான்
பூமியிலிதனைப்போலும் பொல்லாதகொடுமையுண்டோ.

வ-ம். ஆ மாமி! இந்த அனியாயமுண்டா? அந்த ராஜசபைக்கு வரச்சொல்லி உன்மகன் கையைத்தொட்டிழுக்கவந்ததைப் பார்த் தாயா மாமி.

துற்சாதனன்சொல் விருத்தம்

கொடுமையென்றுரைத்தாய்நீங்கள் கொத்துடனெங்களுக்கு
அடுமையாய்ப்போனால்நாங்க ளாளாமல்விடுவதுண்டோ
கடுமையாய்யென்தாய்பின்போய் கட்டிக்கொண்டதினாலே
விடுவனோஉன்னைச்சும்மா மினுக்காதேநடந்துவாடி.

வ-ம். கொடுமையென்னடி சும்மா குலுக்கிறாய் நீங்கள் ஆண் பெண் அடங்கலும் எங்களுக்கு கொத்தடிமையாய் விட்டால் சும்மா விடுவதுண்டோ எங்களுடைய தாயைப்போய் கட்டிக்கொண்டதி னாலே விட்டுப்போவேனோ வாடி வா.

துரோபதை காந்தாரியிடத்தில் புலம்பல் தரு

இ-ம்-கண்டா-மீசுரதாளம்-கண்ணிகள்

ஐயையோநானென்னசெய்வேன் மாமி-இந்த
அனியாயந்தானுண்டோ மாமி

செய்யும்வாறேதுஎன் மாமி-எந்தன்
சிந்தைகலங்குதே மாமி

தஞ்சமும்நீயேயென் மாமி-பெற்ற
தாயாரும்நீரேயென் மாமி
வஞ்சனைசெய்யாதே மாமி-என்
மானங்காக்கவேணும் மாமி-இவனைக்

கண்டவுடனேயென் மாமி-எந்தன்
கால்களும்நடுங்குதே மாமி-உன்
அண்டையில்வந்தேனே மாமி-என்னை
ஆதரிக்கவேணும் மாமி-நீ

காட்டிக்கொடாதேயென் மாமி-என்னைக்
காப்பாற்றவேணுமே மாமி-உந்தன்
வீட்டினில்வந்தேனே மாமி-என்னை
வெளியிலேதள்ளாதே மாமி-நல்ல

பெண்ணாய்ப்பிறந்தாயே மாமி-என்போற்
பெண்ணையும்பெற்றாயே மாமி-இந்த
மண்ணாளும்வேந்தர்களுக்கு மாமி-இது
மரியாதையோசொல்லு மாமி-நாறு

பிள்ளைகளைப்பெற்ற மாமி-என்னைப்
பேதகஞ்செய்யாதே மாமி-என்னை
தள்ளிவிட்டாலேயோ மாமி-இவன்
தள்ளிக்கொண்டுபோவான் மாமி-இப்போ

நம்பினேனுன்னையே மாமி-என்னை
நடுங்கப்பண்ணாதேஎன் மாமி-சும்மா
வெம்புதேயென்னுள்ளம் மாமி-இந்த
வேளைகாக்கவேணும் மாமி

காந்தாரி துரோபதைக்குச்சொல் விருத்தம்

காகங்கள்சென்றாலோடி கணவனைக்கட்டிக்கொண்டு
ஓசையாயழுதகீலி யுனையல்லால்வேறேயுண்டோ
வாகைமைத்துனன்மார்மற்ற மாமன்மாருற்றார்பெற்றார்
ஏகமாய்நிறைந்தசபைக்கு ஏகவொண்ணாதோபோடி.

வ-ம். அடிகுடுப்பா? என்னடி ஆம்பிடையானை யறியாமல் ஆயிரம்பேருடனே போகிறவளொருத்தியாம் அவள் காகங் கர் என்று கத்தினால் அங்ஙனேயோடி ஆம்பிடையானை அப்பாவென்று கட்டிக் கொள்ளுவாளாம் அவளே நீ அதற்கென்ன மாமன் மைத்துனன் உற்றார் பெற்றா ரிருக்கிற சபைக்குப் போகிறதற்கு என்னடி போடி போ மாதங்கி.

### துற்சாதனன் துரோபதைக்குச்சொல் விருத்தம்

பிழையுடன்தினமுமைந்து பேருடன்போறவேசி
தழையுறுமன்னர்சூழுஞ் சபைக்குநீவரப்போகாதோ
குழையுறுய்குழைந்துசும்மா குலுக்கிறுய்செல்வங்கொஞ்சி
இழையுறுயென்னடியுன் னெத்துநானறிவேன்வாடி.

வ-ம். அடி ஒருத்தரல்லவே? ஐந்துபேருடனே நாள்தோறும் இணங்கி, குளிர்விட்டுப்போன தாசிதானே? நீர் எங்களண்ணன் முன்னே வரலாகாதா? குழைஞ்சிக் குழைஞ்சிப் போகிறுயே? என்னடி நானிந்த வித்தையெல்லாம் அறிவேன் வாடி.

## துற்சாதனன் துரோபதையைத் தொடவந்தபோது

### துரோபதி-தரு

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-மிசுரம்

துரோகியிதுவென்ன சொல்லடா-என்னை
தொடவேண்டாம்நீதூர நில்லடா
துரோகியெனதர்ம துரைகளறிந்தாக்கால்
தூக்கிப்போட்டுசொன்னநாக்கை யறுப்பாரே (துரோ)

### துற்சாதனன்சொல்-தரு

தொட்டிழுக்காமல்நான் போவேனே-போனல்
துரியோதனன் தம்பி யாவனே
பட்டியுன்பாண்டவர் பரதேசியானுரே
படிவாங்கிசோறுண்டடிமையாய்ப் போனுரே (தொட்)

### துரோபதிசொல்-தரு

சக்கட்டமிங்கே படிக்கிறுய்-உந்தன்
சமர்த்தெல்லாஞ்சொல்லித் துடிக்கிறுய்
முக்காலுங்காக முழுகிக்குளித்தாலும்
கொக்காகுமோபோடா வாக்காகுமோஅடா (து)

### துற்சாதனன்சொல்-தரு

என்னடிஎண்ணுமற் பேசுறுய்-உனக்
கேற்றபடியெல்லாம் வீசுறுய்
மன்னியுன்னிக்காலை பின்னிநாணிக்கொள்ள
சின்னபின்னமாக முன்னும்பின்னுமாக ()

### துரோபதிசொல்-தரு

முழுதுமெண்ணுமல்நீ மலைக்கிறுய்-வெறி
முண்டைநாயைப்போலே குலைக்கிறுய்
கழுதைக்குபதேசம் காதிலேசொன்னுலும்
அவயக்குரலல்லாமலங்கில்லை யென்சொல்வாய் (து)

துற்சாதனன் சொல்லல்

ஆட்டத்திலுனை வைத்து தோற்றாரே-நீ
அடிமையாய்ப்போனதும் பார்த்தாரோ
ஆட்டிமீட்டிப்பூச்சிகாட்டி சொல்லாதேயென்
வீட்டுக்குச்சொந்தவெள் ளாட்டியாய்போனபின்

துற்சாதனன் துரோபதியை மயிரைத்தொட்டபோது

## துரோபதி புலம்பல்

இராகம்-கெண்டா-மீசுரதாளம்

ஐயையோபாவி தெய்வமேயிந்த
வனியாயந்தானுண்டோ தெய்வமே-எந்தன்
மன்னவர்கோதி மலர் சூடுங்கூந்தலை
மடையன்தொடலாமோ தெய்வமே-எந்தன்
போர்வீரர்தொட்டு புகழுமென்கூந்தலை
புலையன்தொடலாமோ தெய்வமே-எந்தன்
கண்ணாளர்தொட்டு கலைக்குமென்கூந்தலை
கடையன்தொடலாமோ தெய்வமே-அந்த
முனைவீரர்கோதிமுடிக்கின்றகூந்தலை
மூடன்தொடலாமோ தெய்வமே-நல்ல
சுத்தவீரர்மலர் சூடுமென்கூந்தலை
துஷ்டன்தொடலாமோ தெய்வமே-நல்ல
மல்லிகைசூடி மணக்கின்றகூந்தல்
மண்மேற்புரளுதே தெய்வமே-நல்ல
சம்பங்கியெண்ணெய் தடவியகூந்தல்
தரையிற்புரளுதே தெய்வமே-நல்ல
சீப்பிட்டுவாரித்திகழுமென்கூந்தல்
தெருவிற்புரளுதே தெய்வமே

துற்சாதனன்சொல் விருத்தம்

பஞ்சவர்கைகளுன்மேற் பட்டமாத்திரத்திற்பொல்லா
வஞ்சகியுன் னுடம்பு மணக்குமோவளர்ந்துபோமோ
மிஞ்சியென்கைப்பட்டா லுன் மினுக்கெல்லாம்குலைந்துபோமோ
அஞ்சுடனாறுகட்டு மதற்கென்னவெழுந்துவாடி.

வ-ம். ஓ ஓ என்னடி! உன்னிட வெச்சக்காரர் ஐந்துபேருடைய கை, உன்பேரில் பட்டமாத்திரத்தில், கமகமவென்று மணக்குமா? பூரிக்குமா? வளர்ந்துபோமா? மிஞ்சி என் கைபட்டால், உன் தேவடியாள்தனமெல்லாஞ் சிந்திப்போமா? அதற்கென்ன ஐந்து பேருடன் ஆறுவதாயிருக்கட்டும் எழுந்துவாடி வா.

துரோபதிசொல் கண்ணிகள்-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

பேசாதெல்லாம்பேசிப்பேய்போலத் துள்ளுறாய்
பெண்டுகள்மெச்சபெருமையைக் கொள்ளுறாய்
நீசனே நீதத்திநிலத்தில் விழுகிறாய்
நிந்தையென்றெண்ணாமல் நெருப்பில்விழுகிறாய்
பேதகனே துஷ்ட காதகனேகெட்ட
சாதகனேரொணபாதகனே அடாசீச்சீ பினத்தாதே
[அடா துஷ்டா சீச்சீபினத்தாதே

துற்சாதனன்சொல் தரு

மெத்தமெத்தத்துள்ளிவிழுகிறா யென்னடி
மேல்வரம்பெண்ணாமல்பேசுறா யென்னடி
கற்றசமர்த்தெல்லாங்காட்டுறா யென்னடி
கண்ணீருதிர்த்துக்கதறுரா யென்னடி
கத்துக்கள்ளிபோடி யெத்துக்கள்ளிஇந்திர
சித்துக்கள்ளியடி வித்தைக்கள்ளி சும்மாநடந்துவாடி கொலு
[வுக்கு நடந்துவாடிவாடி

துரோபதி-கண்ணிகள்-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

ஐயையோபாவி தெய்வமேநானிந்த
அவதிபடவிட்டாயோ தெய்வமே

ஐவர்க்குங்கைகொடுத்து அருமையாயிருந்தேனே
அதற்கோவிப்படிசெய்தாய் தெய்வமே

மணவாளருடன்கூடி மகிழ்ச்சியாய்விளையாடி
வலக்கரமாயிருந்தேனே தெய்வமே

வந்தவிடந்தனிலே இந்தவிதியெனக்கு
வருமென்று மறியேனே தெய்வமே

துற்சாதனன்சொல் விருத்தம்

வந்திடுமிடத்திற்பொல்லா மாரீசக்கள்ளிதேகஞ்
சிந்திப்போனதுதானென்ன சிணுங்கிநீயழுவதென்ன
முந்திவில்வளைத்தபோது முடிமன்னர்சபைக்குநீதான்
வந்ததுமில்லையாசும்மா மசக்கிறாயெழுந்துவாடி.

வ-ம். வந்தவிடத்தில் என்ன, தேகம் சிந்திப்போனது ஆதியிலே வில்லை வளைத்து மாலையிடுகிறபோது வந்த ராஜாக்களெல்லாம் விழித்தகண் சிமிட்டாமல் பார்க்கும்படியாய் அந்த ராஜசபையில் நின்று அங்ஙனே முறுக்கி, குலுக்கி, மினுக்கின தேவடியாள்தானே? நீ இப்போது மாமன் மைத்துனன்மார்களிருக்கிற சபைக்கு வருகிறதற்கு சும்மா மசக்கிறாய் எழுந்து வாடிவா.

துரோபதிசொல்-கண்ணி

பத்தினிவாக்குபலியாமற் போகாது
பார்மன்னருக்கிந்த துற்புத்தியாகாது
தத்திவிழுந்தாற்றரையும் பொறுக்காது
தையலர்தீங்குக்குதெய்வம் வெறுக்காது
பட்டவனேகுறையிட்டவனேநிறை
விட்டவனேகடைகெட்டவனே அடசிச்சீபினத்தாதே

துற்சாதனன்சொல்-கண்ணி

பத்தினிவாக்குநான் பார்க்கிறேன் வாவுந்தன்
பட்டிமிரட்டைமிரட்டாதே வாவுந்தன்
வித்தைகள்சொல்லிவிளக்காதே வாடிநீ
வெந்நீரிலேவீடுவேகாது வாசும்மா
பாஷிக்கிறுயென்னைத்தூஷிக்கிறுயுன்னைப்
பூசிக்கிறுய்சும்மாரேசிக்கிறுயடி நடந்துவாடிவா

துரோபதி புலம்பல்-இ-ம்-கண்டா-ஆதிதாளம்-கண்ணிகள்

கொடிகொம்பிருக்கும்போதே கொடிவிழுந்தலைந்தாற்போல்
குலையவிட்டாயோஐயோ தெய்வமே-எந்தன்
கொற்றமன்னருக்கு மற்றபெரியோருக்கும்
குறையென்னசெய்தேனே தெய்வமே
ஒருதாயில்லாதவர்க்கு ஊரெல்லாந்தாயென்றசொல்
உண்மைஎனக்கில்லையோ தெய்வமே
ஒருதுணை இல்லாதவர்க்குத் திருவுளந்துணையென்றசொல்
உலகவார்த்தையும்பொய்யோ தெய்வமே

துற்சாதனன்சொல் விருத்தம்

கண்ணுக்குக்கலநீர்சிந்தி கதறியேயழுகின்றுய்நீ
ஒண்ணுக்கிரண்டுசொல்லி யுதாசினம்பேசுகின்றுய்
பெண்ணுக்குளுன்னைப்போலே பிரட்டுளதிருட்டுநீலி
மண்ணுக்குள்கண்டதில்லை மாரீசம்போதும்வாடி.

வ-ம். கண்ணுக்குக் கலநீர் சிந்தியழுகிறுய், நான் ஒன்றைச் சொன்னுல் இரண்டாய்ச்சொல்லி எடுத்தெறிந்துபோடுகிறுய். ஆ! ஆ! ஓ! ஓ! உன்னுடையதிருட்டு மாரீசத்தனமும், சித்துகளும், இந்த வித்தைகளும், எங்கே கற்றுயடி எழுந்துவாடி வா.

துரோபதிசொல்-கண்ணி

மயிரைப்பிடிக்கிறுய் மண்மேல்விழுகிறுய்
வம்புகள்பேசியுன்வாயேன் புழுக்கிறுய்
உயிரைப்பறிக்கிறுய்ஒட்டாரங் காட்டுறுய்
ஒருக்காலேஎன்சும்மாஒடிந்து முறிக்கிறுய்
ஓகோகெடுவாய்ஐயோகெடுவாய்பிறகேகெடுவாயிப்போ கெடு
ஐயோபோடாபடுபாவிஉனக்கென்ன போங்காலமோபாவி

துற்சாதனன்சொல் கண்ணி

விண்ணனம்பேசிமினுக்கிறு யென்னடி
வேசிகள்போலேகுலுக்கிறு யென்னடி
ஒண்ணுலெட்டாய்முடிக்கிறு யென்னடி
ஓகோகோசம்மாநொடிக்கிறு யென்னடி
ஒட்டாதேயென்யுன்சொல் கட்டாதேயென்சொல்
தட்டாதேசும்மாதிட்டாதேயடி
பேசாமால்நீவாடி கொலுவுக்குப்பேசாமல்நீவாடி

துரோபதி புலம்பல்-தரு-இ-ம்-கண்டா-சாப்புதாளம்

பல்லவி

ஆவிதியே ஐயோ் விதியே ஓ

அநுபல்லவி

பாவிநானென்ன பாவஞ்செய்தேனே இந்தப்
பாவிகையிற்சிக்கப்பாதவிப்பதும் (ஆவிதி)

சரணங்கள்

ஆருக்குநானொரு அக்கிரமஞ்செய்தேனே-விதியேநான்
ஆரையடித்துவலங்கோலஞ்செய்தேனே (ஆவிதி)

பாரினிலேஇந்தப்பாடுபடவோ நான்
பஞ்சபாண்டவர்க்குப்பாரியாளானதும் (ஆவிதி)

துற்சாதனன்சொல் விருத்தம்

நீலிகளானபேர்க்கு நிமையிலேகண்ணீரென்பார்
ஓலமிட்டழுகுமுனக்கு உடம்பெலாங்கண்ணீர்கண்டாய்
கோலங்கீழ்நுழைபுமென்தன் குணத்தைபுமறிந்துயிந்திர
ஜாலஞ்செய்யாதேசும்மா தடுக்காதேயெழுந்துவாடி.

வ-ம். ஆ! ஆ! நீலிக்கு நிமையிலே கண்ணீரென்று சொல்லுகிறது; உனக்கு உள்ளங்கால் முதல்கொண்டு உச்சந்தலைமட்டும் கண்ணீரானல், அந்த நீலியும் உனக்கிணையல்ல! சும்மா அழுதகினுல் உன்னைவிட்டுப்போவேனே! நீ பாயின்கீழே நுழைகிறவளானல் நான் கோலத்தின்கீழ் நுழைகிறவனென்றறியாயா வாடிவா.

துரோபதிசொல் கண்ணி

பெண்ணுடன் கூடப்பிறந்தது மில்லையோ
பெண்சாதியைவைத்துவாழ்ந்தது மில்லையோ
தண்ணருள்சற்றுந்தயாளமு மில்லையோ
பட்டவனே துயரிட்டவனேமுறை
விட்டவனே கேடுகெட்டவனே அடாபோடாபடுபாவி

துற்சாதனன்சொல் கண்ணிகள்

மாட்டுக்காரப்பையல்போலெண்ணிப் பேசாதே
மாதங்கிநீகற்றவீச்செல்லாம் வீசாதே
நீட்டியாட்டியுந்தன்நீட்டெல்லாங் காட்டாதே
நிமிஷம்போனால்மானம்நிலைநிற்க மாட்டாதே
சளுக்காதேமெய்போல்தளுக்காதேகொஞ்சிக்
குலுக்காதேமிஞ்சிப்பலுக்காதேயடி
பேசாமல்நீவாடி கொலுவுக்கு பேசாமல்நீவாடி.

## துரோபதை புலம்பல்

ஆவிதியே ஐயையோ விதியே

என்போலும்பெண்களுக்கிடரென்னசெய்தேனோ விதியே-இது
எந்தன் தலையெழுத்திப்படிதானோ விதியே
இன்பமாய்ப்பாஞ்சாலனெந்தனைப்பெற்று
எடுத்துவளர்த்ததுமிதற்குத்தானோ (ஆவிதியே)
வல்லரவின்வாயில்தேரைபோலானேனே விதியே
வேடன்வலையிலகப்பட்டமான்போலுமானேனே விதியே-இந்த
பொல்லாதநிர்மூடப்புலையன்கையிற்சிக்கிப்
புலம்பிப்புலம்பிசும்மாய்ப்புலம்பித்தவிப்பதும் (ஆவிதியே)

துற்சாதனன்சொல் விருத்தம்

விதிநல்லவிதியேயானால் வில்வளைத்திட்டபோது
மதியிலென்னண்ணனுக்கு மணமாலைசூட்டாயோ
கதியில்லாப்பாண்டவாளை கதியென்றுநம்பிக்கெட்டால்
இதினுடன்போமேயின்ன மிருக்கிறதனந்தம்வாடி.

வ-ம். ஆ ஆ! விதியினுலென்ன யிருக்குதடி? எல்லாம் மதியினால் தான் இருக்கிறது. ஆதியிலே வில்வளைத்து மாலையிடுகிறபோது அந்த அர்ச்சுனராஜனுக்குப்போட்ட மாலையை, எங்கள் அண்ணனை துரியோதனமகாராஜனுக்குப் போட்டுவிட்டால், இத்தனை பாடெல்லாம் வராதே? பாண்டவர்கள் பாண்டவர்களென்று பாண்டவர்களை நம்பி கெட்டபடியினாலே, இத்துடன் போச்சுதா? இன்னமும் அநேக மிருக்கிறது எழுந்து வாடிவா.

துரோபதிசொல் கண்ணி

பாண்டவராலேநீ பட்டுவிழுவாய்-என்
பாவமிடிந்துபாழாகவே போவாய்
மூண்டநரகத்தில்மூழ்கிக் கிடப்பாயுன்
மூர்க்கமெல்லாமிப்போயார்மேல் விடுவாய்-சும்மா
அலைக்காதேகோர்வம்நிலைக்காதே பேய்போல்
மலைக்காதேநாய்போல் குலைக்காதே அடா
போடாபடுபாவிஉனக்கென்ன போங்காலமோ-பாவி

துற்சாதனன்சொல் கண்ணி

பாண்டவர்பேச்சுபகலே முடிந்தது
பழியெல்லாமுந்தன் தலைமேல் விடிந்தது
தாண்டியென் னுள்ளம்தணலா எரியுது
சபையிலேநீவந்தாலெல்லாந் தெரியுது
படிக்காதேவீங்கிவெடிக்காதேகல்வி
நொடிக்காதேசொல்லித்துடிக்காதே அடி
நடந்துவாடிகொலுவுக்குநடந்துவாடிவாடி

துரோபதி புலம்பல்-இ-ம்-முகாரி-ஏகதாளம்-கண்ணிகள்

ஓகோயிதென்னகொடுமையோவையையோ மன்னர்களே-ஒரு
கோதில்லாமன்னர்கள்நீதியிதுதானோ மன்னர்களே
வாகோயிதுவோமனுநீதியே' வையோ மன்னர்களே-அபி
மானமுஞ்செங்கோல்நிதானமுமில்லையோ மன்னர்களே
பெண்களைப்பெற்றபெரியோர்களில்லையோ மன்னர்களே-என்னை
பேதகஞ்செய்தாற்பெண்பாதகமல்லவோ மன்னர்களே-ஒரு
பெண்ணுடன்கூடப்பிறந்தவரில்லையோ மன்னர்களே-ஒரு
பெண்ணைகப்பாரில்பிறந்ததும்நான்தானோ மன்னர்களே
மனையாளுடன்கூடிவாழ்வாருமில்லையோ மன்னர்களே-பெண்
மானமென்றால்யார்க்குமானமேயல்லவோ மன்னர்களே-இந்த
அநியாயம்போலவேயவனியிலுமுண்டோ மன்னர்களே-இது
அரசாக்ஷிசெய்யும்அரசர்க்குத்தர்மமோ மன்னர்களே-எங்கள்
ஐயாதுரோணரேஅசுவத்தாமரேயென் ஐயமாரே-இந்த
அநீதம்போலேயவனியிலுண்டோ ஐயமாரே-இந்த
பொய்யாதவேதம்புராணம்படித்தயென் ஐயமாரே-இந்த
பொல்லாங்கைப்போலேபூமியிலுண்டோ ஐயமாரே-இந்த
வையகம்போனாலும்வாழ்வெல்லாம்போனாலும் ஐயமாரே-இந்த
மன்னர்சபையிலென் மானம்போகலாமோ ஐயமாரே-இந்த
மெய்யானமனுவிக்கியானந்தெரிந்தஎன் ஐயமாரே-எந்தன்
மேலென்னகுற்றம்விளங்கக்கண்டீரோயென் ஐயமாரே
பாரம்பரியம்பலவுந்தெரிந்தயென் பாட்டனாரே-இந்த
பாவிகொடுமையைப்பார்த்திருக்கின்றீரோ பாட்டனாரே
தாரமொன்றில்லாமல்தள்ளிவிட்டீர்களே பாட்டனாரே-அந்த
தன்மையினால்தயைதாட்சண்யமில்லையோ பாட்டனாரே-பெண்
அருமையறியாரருகிலிருக்கின்ற பாட்டனாரே-உங்கள்
அன்பிலாப்போனாலும்பெண்பாவம்போகுமோ பாட்டனாரே-இந்த
உரகக்கொடியோனுரைத்திடும்வார்த்தைக்குப் பாட்டனாரே-நீ
உடன்பட்டிருக்கஉன்னுள்ளங்குளிர்ந்ததோ பாட்டனாரே
ஆதரவாகயழைத்துவந்தீரேயென் மாமனாரே-எந்தன்
அபிமானம்போக வலையவிட்டீரேஎன் மாமனாரே
மாதாபிதாகுருநீயென்றிருந்தேனே மாமனாரே-என்னை
மன்னவர்சபையில்வரவழைத்தீரேயென் மாமனாரே

குருகுலமன்னர்குலமுறைகண்டயென் மாமனுரே-உங்கள்
குலத்தினிலிந்தகொடுமையடுக்குமோ மாமனுரே
பெரியோரிருந்தும்பிழைகளைச்செய்தாலென் மாமனுரே-மழை
பெய்யுமோவையகமுய்யுமோவையையோ மாமனுரே

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி

கொஞ்சமுமிறக்கமில்லாக் கொற்றவர்சபையினுள்ளே
தஞ்சமென்பவரிலாமல் தரையில்வீழ்ந்தழும்பாஞ்சாலி
கஞ்சமென்முகங்கள் வாடி கைகட்டியெதிரேநிற்கும்
பஞ்சபாண்டவரைப்பார்த்து பதறுவாள்கதறுவாளே.

வ-ம். அகோதெய்வமே யென்றால், தயை, தாட்சண்ணியம், ஈவு, இரக்கம் யாதுமில்லாத துரியோதனன் சபைதனிலே, துரோபதி புரண்டு அழுது பாண்டவர்களைப்பார்த்து தெய்வத்தை நினைந்து புலம்புகிற விதங்காண்க.

## துரோபதி புலம்பல்

இ-ம்-காம்போதி- ஆதிதாளம்-கண்ணிகள்

என்செய்வேனினிஎப்படியாறுவேன் தெய்வமே-ஓகோ
என்பிராணநாதருக்கிப்படிவந்ததோ தெய்வமே-ஒரு
துஞ்சியவஞ்சகதுரோகமறியோமே தெய்வமே-ஓதர்ம
துரைகளுக்கித்தனை துன்பம்வரலாமோ தெய்வமே-ஓஐயோ
சத்தியமில்லையோதர்மமுமில்லையோ தெய்வமே-ஓநிறை
சத்தியமும்நல்லதர்மமும்போய்த்துதோ தெய்வமே-ஓநல்ல
புத்திநெறியில்லாபுல்லர்க்குக்காலமோ தெய்வமே-ஓஅந்த
புல்லர்நடத்தைக்குப்பூமிபொறுக்குமோ தெய்வமே-ஓஎன்னை

பாண்டவர்களைப்பார்த்துப் புலம்பல்

சின்னவயதினில்தேடிமாலையிட்டீர் பாவிகளா-இப்போ
தெருவிலலையதிகைக்கவிட்டீர்களே பாவிகளா-என்னை
கன்னிவயதினிற்கலியாணஞ்செய்தீரே பாவிகளா-இன்று
காட்டிக்கொடுத்துகடக்கப்போய்நின்றீரே பாவிகளா-என்னை
வர்னக்கிளிபோலே வைத்திருந்தீர்களே பாவிகளா-பூனை
வாய்க்கிரைகொடுத்தாற்போலாக்கிவிட்டீர் பாவிகளா-உங்கள்
வீரம்குலைந்ததோவில்லுமுறிந்ததோ பாவிகளா-அந்த
மெய்கெட்டவேந்தன்முன்கைகட்டிநின்றீரே பாவிகளா
தாரத்தைவைத்துச்சபையிலேசூதாடினாலும் பாவிகளா-உங்கள்
தாஷ்டீகவீரத்தனத்தையுந்தோர்த்தீரோ பாவிகளா
ஆதீனமெல்லாஞ்சூதாடிப்பறித்தாலும் பாவிகளா-உங்கள்
ஆண்மையைக்கூடஅடித்துப்பறித்தாரோ பாவிகளா

நீதியில்லைமை நிச்சும்பொய்யாச்சுதோ பாவிகளா-இந்த
நீசர்க்குங்கைகட்டிப் பேசவும்வாய்ச்சுதோ பாவிகளா

பீமன் தருமருக்குச்சொல் விருத்தம்

சேயிழைதனையிழுத்து திகழ்சபைதனிலேவிட்ட
தீயவஞ்சகரையென்கை தெண்டாயுதத்தினாலே
வாயினைப்பிளந்துகொத்தி மணிக்குடலெடுத்துமண்டை
ஆயிரஞ்சுக்கலாக அடிக்கிறேன் பாராயண்ணே.

வ-ம். கேளும் அண்ணே? நம்முடைய மனையாளான துரோபதியை, இந்த ராஜசபையினில் பங்கப்படுத்திச் சபையினில் வரும்படியாய்ச் செய்தவனையும், இட்டுக்கொண்டு வந்தவனையும், வாயைப் பிளந்து, மணிக்குடலெடுத்து, அவர்கள் மண்டையை ஆயிரஞ்சுக்கலாக இதோ அடிக்கிறேன், நீர் சும்மாயிரும் அண்ணாவே.

அர்ச்சுனன் தருமருக்குச்சொல் விருத்தம்

மானமில்லாமலிந்த மாதினையிழுத்துவந்த
ஈனரைஎன்கையம்பா லிட்சணத்திலேதானே
கானகந்தீப்பட்டாற்போற் கடிந்தநிர்த்தூளியாகத்
தானிதோவடிக்கிறேன்பார் தடங்கல்சொல்லாதேயண்ணே.

வ-ம். கேளும் என் அண்ணாவே? நம்முடைய மனையாளான துரோபதியை, இந்த ராஜசபைக்கு வரும்படியாகச்செய்த துஷ்டரை செங்காடு தீப்பட்டாற்போலே, நிர்த்தூளிப்படலமாக இதோ அடிக்கிறேன், தடங்கல் சொல்லாதே அண்ணாவே.

தருமர் தம்பிமாருக்குச்சொல் விருத்தம்

சினத்தமன்னவர்கள்வாழ்வுஞ் செல்வமுஞ்சிலதுகாலம்
குனித்தியதுன்பம்வந்து குறைவதுசிலதுகாலம்
அனித்தியகாலம்வந்தா லடியோடேபோகுங்கண்டாய்
இனித்தியதம்பிமாரே இன்னமும்பொறுங்களப்பா.

வ-ம். கேளும் தம்பிமார்களே? இராஜர்களிடசெல்வமும், செருக்கும், ஓடுகிறது சிலதுகாலம், ஒடுங்குகிறது சிலகாலம், அதுகளுக்கு அனித்தியகாலம் சம்பவித்தால் அடியோடே போய் விடும்; இன்னமும் பொறுங்களப்பா.

துற்சாதனன் துரோபதியைப் பார்த்துச்சொல் விருத்தம்

மச்சினமாமன்மார்கள் மாதவமுனிவருந்தன்
வெச்சக்காரர்களெவர் மேவியசபையல்நிற்க
அச்சமென்னடியுனக்கு யழுகிறாயொழுகிப்போறாய்
கைச்சணிவேசியர்க்குக் கண்ணீர்க்குக்குறைச்சலுண்டோ.

வ-ம். அடி மச்சினமார், மாமன்மார், குருக்கள்மார், உன் வெச்சக்காரர்களெந்துபேரும், இவர்கள்தானே இச்சபையி லிருக்

கின்றார்கள்; இங்கே உன்னையிட்டுக்கொண்டுவந்ததில், உன் மானத்துக்கு குறைவு வந்துவிட்டதா? என்னடி சும்மா அழுதழுது ஒழுகிப் போகிறாய்? கைகண்டதாசிக்குக்கண்ணீரில் குறைச்சலா? நில்லடி நில்.

விகர்னமகாராசன் சொல் விருத்தம்

பண்ணூற்றும்பாவைதன்னைப் பங்கமாய்ப்பேசக்கேட்டு
பெண்ணூற்றுந்தெரிந்தோரெல்லாம் பேசாமலிருக்கலுற்றீர்
தொண்ணூற்றொன்பதுபேர்பின்னே தோன்றியவிகர்னன்சொல்லும்
எண்ணுற்றும்வார்த்தையுங்கட் கேற்குமோயேற்கிடாதே.

வ-ம். கேளும் ராஜராஜர்களே? மகாபதிவிரதையான துரோபதியை, இச்சபையிற் பங்கமாய்ச்சொல்ல, அதைக்கேட்டு எல்லாந் தெரிந்த பெரியோர்கள் யாவரும் ஊமைகள்போல வாயை மூடிக்கொண்டு சும்மாவிருக்கின்றீர்களே? துரியோதனன் முதலாகிய தொண்ணூற்றொன்பது பேர்க்குப் பின்னேபிறந்த, விகர்னனாகிய ஒரு சிறுபிள்ளையான நான் சொல்லும் வார்த்தை உங்கள் செவிக்கு ஏற்குமா? ஏற்காது ஆகிலுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்.

இதுவும் விகர்னன்சொல் விருத்தம்

அஞ்சுபேர்தமக்கோமான மனைவற்குமில்லையாமானம்
இஞ்சொல்சேர்மனையாளென்ப தெல்லார்க்குமுண்டுகண்டாய்
மிஞ்சிநல்லருந்ததிக்கு மிகுந்தகற்புடையாள் தன்னை
கொஞ்சமாய்சொல்லும்வார்த்தை கொற்றவர்க்கடுத்திடாதே.

வ-ம். கேளுங்கள் மகாசபையோர்களே? இந்தப் பாண்டவர்கள் ஐந்துபேருக்குத்தானா மானம். அந்தமானம் அனைவருக்குமில்லையா? அவனவன் பெண்சாதியைவைத்து, வாழ்கிறவனே யல்லாமல் வேறல்லவே? அந்த அருந்ததிக்குச் சமானமான மகா பதிவிரதையான துரோபதியை இந்த ராஜசபையிலே, வேசியென்றும், தாசியென்றும் பேசுகிறது ராஜாக்களுக்குத் தர்மமா? நீதியா? ஐயையோ! என்னபாவம்!!

துரோபதிசொல் விருத்தம்

துன்னியசபையிலுள்ள தொழும்பெரியோரேபோற்றி
என்னைமுன்தோற்றபின்பு யெழிலவர்தோற்றிட்டாரோ
மன்னவர்முன்னேதோற்று மற்றென்னைத்தோற்றிட்டாரோ
நன்னிலைநடிக்கண்டோர்கள் ஞாயமாய்ப்பேசுவீரே.

வ-ம். கேளுங்கள் இந்தச் சபையிலுள்ள புண்ணியவான்களே! பாண்டவர்கள் முன்னேதோற்று, பிறகு என்னைத் தோற்றார்களா? என்னை முன்னேதோற்று, பிறகு ஐந்துபேருந் தோற்றார்களா? இதிலே கண்ணிற்கண்டதை நியாயமாய் பேசவேணும் பெரியோர்களே.

விகர்னன்சொல் விருத்தம்

நிலத்தினிற்சூரியோரான நெடுமுடியைவர்தேவி
கலக்கமுற்றழுதுவிம்மிக் கதறியேபுலம்பிக்கேட்டால்
நலத்தினில்மிகுந்தநீதி நியாயத்தைத்தெரிந்துநல்லோர்
குலத்தினிற்பிறந்தோரானாற் கூசாமற்பேசிடாரே.

வ-ம். இந்தக் கடல்சூழ்ந்த பூமிக்கெல்லாம் அதிபதியான பாண்டவர்களுக்கு, அபிஷேகபத்தினியான துரோபதியானவள், இச்சபையில் முறையிட்டு அலறி அழுது நியாயத்தைக் கேட்டால் நீங்கள் சத்தியம்-நீதியும்-தாட்சண்யம் - நற்குலத்திற் பிறந்தவர்களுமானால் எதார்த்தத்தைப் பேசலாம் சபையோர்களே.

இதுவும் விகர்னன்சொல் விருத்தம்

நண்ணுங்கற்புடையாளிங்கே நடந்ததைக்கேட்டாலெங்கள்
அண்ணன்தன்முகத்துக்கஞ்சி யந்நீதஞ்சொல்லப்போறீர்
மண்ணின்மேல்நின்றுபண்ணின் வழக்கோரஞ்சொல்லொண்ணாது
கண்ணிற்கண்டதனைஎள்ளுக் காய்பிளந்தாற்போற்சொல்வீர்.

வ-ம். பின்னும் அந்தப் பதிவிரதாரத்தினமான துரோபதி முறையமிட்டு, இந்தச்சபையில் நடந்ததை, யதார்த்தமாய்ச் சொல்லச்சொன்னால், எங்கள் அண்ணன் துரியோதனமகாராஜன் முகத்துக்கஞ்சி அசத்தியமாகச் சொல்லப்போகிறீர்கள். மண்ணின்மேல் நின்று வழக்கோரஞ் சொல்லலாகாது கண்ணில் கண்டதை எள்ளுக் காய் பிளந்தாற்போல் சொல்லுங்கள் சபையிலுள்ள பெரியோர்களே.

சகுனி விகர்னனுக்குச்சொல் விருத்தம்

கிரிகைகெட்டவனே நூற்றைக்கெடுத்ததுகுறுணியென்று
உரையுடனுலகந்தன்னிற் சொல்லுவாரதனைப்போலே
விரல்மிகுநூறுபேரில் விஷத்தைப்போல்நீயொருத்தன்
குறைசொல்லப்பிறந்திட்டாயே குலமினிவிளங்குமப்பா.

வ-ம். கேளாய் என் இளைய மருமகனான விகர்னனே? நூற்றைக் கெடுத்தது குறுணியென்று உலகத்திலே சொல்லுவார்கள். அது போல நூறுபேரில் நீயொருத்தன், இந்தக் குலத்தைக் கெடுக்கப் பிறந்தாய் உன்னால் உங்கள் அண்ணன்பேர் நன்றாய் விளங்கும்.

விகர்னன்சொல் விருத்தம்

பார்புகழ்தருமராஜன் படைத்தவெப்பொருளுந்தோற்று
சார்புதம்பியரைத்தோற்று தன்னையுந்தோற்றுவிட்டு
சோர்வுகொண்டொருவருக்குத் தொண்டனாய்ப்போனபின்பு
தார்குழலிவளைத்தோற்கத்தகாதென்று சொல்லொண்ணாதோ.

வ-ம். கேளுங்கள் இராஜாக்களே? இந்தத் துரோபதி என்னைத் தோற்றபிறகு, ஐவருந் தோற்றார்களா? அல்லது ஐவருந் தோற்ற பிறகு, என்னைத் தோற்றார்களாவென்று கேட்டால், நீங்கள் பேசாம லிருப்பது தருமமா? தருமராஜன் தன்னிட நாடு நகரமெல்லா முன்னே தோற்று, பிறகு தம்பிமாரையுந் தோற்றான்; பின்பு தானுந் தோற்று, அடிமையாய்ப் போனான். ஒருவருக்கு அடிமையாய்ப் போனவன் இந்தத் துரோபதியைவைத்து ஆடுகிறது தருமமல்ல. துரோபதியை தோற்றதில், ஈடல்லவென்று சொல்லுங்கள் சபையி லுள்ள பெரியோர்களே.

விதுரன்சொல் விருத்தம்

நரைத்தென்ன வயதுசென்று நாட்பட விருந்தாலென்ன
தரித்திடுசாஸ்திரங்கள் சதகோடிகற்றாலென்ன
பொறுத்திடுஞ்சிறியோரேனும் புத்தியுள்ளவனே தக்கோன்
விரித்தவிகர்னன்வார்த்தை விகிதந்தான்மெய்யேமெய்யே.

வ-ம். நாம் நரைத்துப்போனதினா லென்ன? நாட்பட இருந் துதானென்ன? சகல சாஸ்திரங்கள் படித்துதானென்ன? சிறுபிள்ளை யானாலும் புத்தியுள்ளவனே பெரியவன். இந்த விகர்னன் சொன்ன வார்த்தையே சரி. நன்றாய்ச் சொன்னான்.

கர்னன் விகர்னனுக்குச்சொல் விருத்தம்

ஒஞ்சரிவழக்குச்சொல்ல உன்னையாரழைத்தாரிங்கே
நெஞ்சொடுநீதிசாஸ்திரம் நீதானாகற்றுக்கொண்டாய்
கஞ்சிலைவடிக்கக்கற்றாய் கற்றாப்போல்பேசலுற்றாய்
பிஞ்சிலேபழுத்துப்போனாய் பேசாதேநீவிகர்னா.

வ-ம். ஓய் தம்பி விகர்னா? ஒருதலைவழக்குப் பேசவேண்டாம் உன்னை யழைக்கவில்லை; தருமசாஸ்திரமெல்லாம் நீதானா படித்துக் கொண்டாய். சபையி லுன்னிலும் பெரியவர்களில்லையா? வடித்த கஞ்சியில் வடிக்கவும், கல்லாமை கற்றுப்பேசவும் பிஞ்சியில் பழுத்த வன் நீ ஒருவன் புறப்பட்டாய்; பேசாமல் சும்மாயிரு விகர்னா.

இதுவும் கர்னன் சபையிலுள்ளவர்களுக்குச்சொல் விருத்தம்

தெரியாமல்சிறுவிகர்னன் செப்பியவார்த்தைதன்னை
பெரியோரென்றுரைத்தீர்நல்ல பெரியோருங்களைப்போலுண்டோ
சரிதானாவழக்கிலுள்ள சங்கற்பந்தெரிந்திட்டீரோ
வரிவாகயிதோநான்கேட்கும் வார்த்தைக்குத்தாரஞ்சொல்வீர்.

வ-ம். இன்னமுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள் ராஜாக்களே! இந்த விகர்னன், வெகு ஞாயத்தைச் சொன்னானென்று, மெச்சிக் கொண்டபோதே; இவனிலும் நீங்கள் யோக்கியர்தான். ஆ ஆ! இந்த வழக்கிலுள்ள சூட்சத்தைத் தெரிந்துக்கொண்டீர்களா? இதோ நான் கேட்கிற மொழிக்கு உத்தரவு சொல்லுங்கள் பார்ப்போம்,

இதுவும் கர்னன்சொல் விருத்தம்

தனக்குள்ளபொருளுந்தம்பி மாரையுந்தோற்முன்
புனக்கிளியவர்படைத்த பொருளல்லால்வேறேயுண்டோ
குனிக்கவோர்மாத்தைநாடிக் குறித்தாடிக்கெலித்துக்கொண்டால்
கனக்கவேதழைபூபிஞ்சு காய்பழம்வேறேசொல்வீர்.

வ-ம். கேளுங்கள் இச்சபையில் வந்திருக்கும் உரியவர்களாகிய பெரியோர்களே? தனக்குள்ள பொருள்களெல்லாந் தோற்று, தம்பிமாரையுந் தோற்றுப்போனுல், இந்தத்துரோபதை அவர்களுக்கு உடன்பட்ட பொருளேயல்லாமல், மற்றப்படிக்கு வேறுண்டோ? நல்லது, ஒரு மாத்தைக்குறித்து, சூதாடி கெலித்துக்கொண்டால், அதில் தழைவேறு-பூவேறு-பிஞ்சுவேறு-காய்வேறு கனிவேறோ? பளா பளா! நன்றுய்ச்சொன்னீர்கள்.

விகர்னன்சொல் ஆசிரியவிருத்தம்

தடைக்கஞ்சாப்பாம்புக்கோ ராணையில்லை
சாந்தமில்லாமூர்க்கருக்கோ தருமமில்லை.
மடைக்கஞ்சாவெள்ளமதைபரிப்பாரில்லை
மனம்போனபோக்குக்கோர்வழியொன் றில்லை
புடைக்கஞ்சாவுங்களுக்குப்புத்தியில்லை
பூவைகண்ணீர்வீணுகப்போவதில்லை
தடைக்கஞ்சாக்குடியரைப்போல்சேர்ந்தீரிந்தச்
சமஸ்தானத்தைக்கெடுக்கத்தலைப்பட்டீரே.

வ-ம். தடைக்கஞ்சாப் பாம்புக்கு ஆணையில்லை, சாந்தமில்லா மூர்க்கருக்கு தருமசிந்தையில்லை, அலைகடந்தவெள்ளமதைத் தடுப்பாரில்லை, மனம்போனபோக்குக்கு வழியேயில்லை, பழிக்கு அஞ்சா உங்களுக்குப்புத்தியில்லை, இந்தப்பதிவிரதை கண்ணீர் பழுதாகப்போகிறதில்லை, கெஞ்சாகுடியரைப்போல் நீங்கள் இரண்டொருவர் சேர்ந்து இந்த சமஸ்தானத்தைக் கெடுக்க, கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறீர்களே? பேஷ்!

கர்னன் விகர்னனுக்குச்சொல் விருத்தம்

என்னடாவிகர்னநீதா னிறைசபைதனிலேநின் று
நன் றிசேர்சமர்த்தனென் று நல்லுரைபகர்ந்திட்டாய் நீ
துன்னவர்மாலைமார்பன் துரியோதனமகாராஜன்
மின்னிடைவிழியாள்தன்னை விட்டிடான் கண்டிடாயே.

வ-ம். ஆனுல் கேளடா விகர்னு? நீ என்னசொன்னுலும் துரியோதனமகாராஜன் துரோபதியை விடப்போகிறதில்லை சும்மாயிரு விகர்னு.

துரியோதனன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்

இத்தனைபேச்சென்னவடடாதம்பி
எழில்துற்சாதனப்புலியே என்சொற்கேளாய்

மெத்தபுத்திசாலியிந்த விகர்னனென்று
  மென்மேலுந்தலையசைத்த வேந்தர்முன்னே
பித்தரெனும்பாண்டவர்கள் துகில்முன்வாங்கி
  பேதித்தபடுவழக்குப் பேசுமிந்த
சித்தினியைஎதிர்நிறுத்தி மானபங்கந்
  தெரிந்திடவேயிவள் துகிலை யுரிந்திடாயே.

வ-ம். அடா தம்பி! துற்சாதனா? இங்கேவா. அந்த விகர்னன் மெத்த புத்திசாலியென்று மெச்சிக்கொண்டார்களே இந்த ராஜாக்கள். இவர்கள் பார்க்கும்படியாய், அந்தப்பாண்டவர்கள் ஐந்து பேருடைய வஸ்திரத்தை முன்னே வாங்கிக்கொண்டு, இப்போது எதிர்வழக்குப் பேசவந்தாளே, இவளை நிறுத்தி இவள் சேலையை உரியடா தம்பி.

விதுரன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

பன்னிடுவிகர்னன்சொல்லைப் பழுதென்றதுரியாகேளாய்
என்னமோகெடுதிகால மிசைந்ததுஉங்களுக்கு
கன்னியைப்பங்கஞ்செய்யக் கருத்தினில்நினைந்தபோதே
மன்னுமுன்குடிக்குத்தீங்கு வந்ததுவந்ததப்பா.

வ-ம். அடா துரியோதனா? உனக்கு என்னமோ பொல்லாத காலஞ் சம்பவித்தது. அந்த மகாபத்தினியான துரோபதியை மானபங்கஞ் செய்யவேண்டுமென்று எப்போது நினைத்தாயோ அப்போதே உன்குடிக்கு அனர்த்தகாலம் வந்தது சொன்னேன் சொன்னேன் துரியோதனா.

விதுரன் கர்னனுக்குச்சொல் விருத்தம்.

தண்படுமுலகங்காக்குந் தார்மன்னரிடத்திருந்து
புண்படுங்கோலைப்போலப் புகல்கின்றகர்னாநீதான்
எண்படுநூல்கடேர்ந்து மிழிவழக்குரைக்கலுற்றாய்
பெண்பழிதேடிக்கொண்டோ பெரியவனாகப்போறாய்.

வ-ம். கேளும் கர்னா? தர்மசாஸ்திரமெல்லாம் பார்த்திருந்தும், ராஜாக்களிடத்திருந்தும், புண்ணில் கோலிட்டாப்போல் இருவழக்குப் பேசுகிறாய்; (பெண்ணைப்பார்த்தால் பேயுமிரங்கு) மென்பார்கள். அவ்வளவுமில்லாமல், ஒரு பெண்பிள்ளைபேரில், உன்பிரதாபமெல்லாங் காட்டுகிறாய் இதனாலேயா பெரியவனாகப்போகிறாய்.

கர்னன் விதுரனுக்குச்சொல் விருத்தம்

பெரியோரைத்துணைக்கொளென்று பேசினபடியேநீங்கள்
உரியோரென்றிங்கேசேர்ந்து முதவியில்லாமற்பேசி
பிரியவுட்சுவரிருக்கப் புறஞ்சுவர்பூசப்பட்ட
சரியானபெரியோர்நீதான் சபாசுநன்றாகச்சொன்னீர்.

வ-ம். கேளும் விதுரமகாராஜனே? பெரியோரைத்துணைக் கொள்ளென்றல்லவோ வேதஞ்சொல்லுகிறது, அப்படி நீங்கள் பெரியோர்களென்றும், உங்களைச் சேர்ந்ததற்கு ஒரு உதவியில்லா

மற் போச்சுது. அதிலேயும் உட்சுவரிருக்கப் புறஞ்சுவர் தீர்த்தப் பட்டீர். சரிதான்! பெரியவர்தான்.

விதுரன் கர்னனுக்குச்சொல் விருத்தம்

பொய்சாக்ஷிசொன்னவரும் சபையிலொரு
தலைவழக்காய்ப் புகன்றபேரும்
பைசாசமாய்நரகில்வீழ்வரென்று
நான்முறையைப் பறக்கடித்தாய்
மெய்சார்ந்தவிகர்னனையுமெடுத்தெதிர்ந்தா
யளவிலா விகாதஞ்சொன்னாய்
பொய்சாரும்வழக்குரைத்தாய்
துரியனறிவையுங்கெடுத்தாய்புகழோகர்னா.

வ-ம். கேளும் கர்னா? பொய்சாக்ஷி சொன்னவரும், சபையில் ஒருதலைவழக்காய்ப் பேசினவனும், நரகத்தில் வீழ்வார்களென்று சொல்லப்பட்ட தருமசாஸ்திரத்தைத் தள்ளிப்போட்டாய்; அந்தத் துரியோதனன் புத்தியையும் கெடுத்தாய்; இப்படிப்பட்ட துர்கடத்தையினாலேயா நல்லவனாகப்போகிறாய் கர்னா.

துரியோதனன் விதுரனுக்குச்சொல் விருத்தம

நல்லதுசிற்றப்பாவுன் ஞாயத்தைநிறுத்திவையும்
எல்லையில்கர்னன்சொல்லு மென்சொல்லுமுனக்கோவ்வாது
வல்லதுற்சாதனாகேள் வலியவெம்புலிபோற்போற்றி
சொல்லுமிங்கிவளுடுத்துந் துகிலைநீயுரிந்திடாயே.

வ-ம். கேளும் சிற்றப்பா? கர்னன் சொல்லும், என்சொல்லும், உன்செவிக் கேற்கப்போகுதா? உன்னுடைய நியாயம் அங்கிருக்கட்டும்; அடா துற்சாதனா? இவள் உடுத்தியிருக்கும் சேலையை, உரியடா வென்று முன்னே தான் சொன்னேனே: இன்னமுந் தாமதமா தம்பி துற்சாதனா.

துற்சாதனன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

உரிந்திடுஞ்சேலையென்றே யுரைத்தவென்னண்ணாகேளீர்
பரிந்துநீசொல்லுமுன்னே பதைக்குதேயெந்தன்கைகால்
தெரிந்திடச்சபையிலுள்ளோர் சிரித்திடவைவர்நெஞ்சம்
கரிந்திடவிவள்தன்சேலையைக் கடுகெனவுரிவேன்பாராய்.

வ-ம். கேளும் என்னண்ணாவே? நீ சொல்லுகிறதற்குமுன் என் கையும் காலும் பதைக்குது, அப்படியே உரிந்து போடுகிறேன் பாரும்.

துரோபதியை துற்சாதனன் மேடைமேல் இழுக்கிற கண்ணிகள்

பாங்காயென்னண்ணனைப் பார்த்துநகைத்தவுன்
ஆங்காரமிப்போ அறிகிறேன்வாடி

தாங்காமலிந்தச்சபையிலே நீகேட்ட
  தீங்காவழக்கைநான் தீர்க்கிறேன்வாடி
வேணமட்டுஞ்சும்மாய் வீம்புபேசுமுந்தன்
  ஆணவமிங்கே அறிகிறேன்வாடி
நாணயமாகவுன் னுகரீகமெல்லாம்
  காணவே யெல்லோர்க்குங் காட்டுகிறேன்வாடி

துரோபதி மேடையின்மேல் போகிறபோது

விருத்தம்-முகாரி

பெரியோரிலையோபெண்களேயும் பெற்றோரிலையோமானமுள்ள
உரியோரிலையோவெந்தனுக்குங் கொருதிக்கில்லையோநீதிசொல்ல
அரியோரிலையோவொருவருக்கு மருளேயிலையோயாதொன்றுந்
தெரியாவேழையென்பங்கில் தெய்வமிலையோஓவிதியே.

வ-ம். அரி! அரி! வைகுந்தவாசா! முகுந்தா! அன்பரைக்காக்கும் கோவிந்தா! அந்த மகாசபையில், மனுவிக்கியானந் தெரிந்த பெரியவர்களில்லையா? என்போலும் பெண்களேப் பெற்றோரில்லையா? மானபிமானமுடைய சுற்றத்தாரில்லையா? நன்மை தீமையென்னும் நீதிமொழிகளேச் சொல்லும்படியாகிய அரிதாகிய கனவான்களில்லையா? ஒருவருக்காவது அருளில்லையா? ஏதுந்தெரியாத ஏழையான என்பங்கில் தெய்வமுமில்லையா விதியே.

துர்சாதனன்சொல் கண்ணி

தெய்வந்தானென்னசெய்யுமோ பார்ப்போமுன்
  சித்துவித்தையிங்கே காட்டாதே-உந்தன்
சேலைபுரிந்திந்தச் சபையிலேநானுன்னை
  திகம்பரமாக்காமல் விடுவேனே

துரோபதி-ஸ்ரீகிருஷ்ணசுவாமியை-துதிசெய்கிற-புலம்பல்

தரு-இ-ம்-கெண்டா-ஆதிதாளம்-பல்லவி

மாயவனேவைகுந்தவாசா எந்தன்
  மானங்காக்கவேணுஞ் சர்வேசா

அநுபல்லவி

ஆயனான்மறைதேடும் ஆதிமூலப்பொருளே
அபயமபயமுந்தன் உபயபாதமேகெதி (அரி)

துற்சாதனன் சொல்-கண்ணி

நேயமாக ஆதி மாயனென்று சொன்னல்
  நிலைநிற்குமானமென் றெண்ணதே-ஒரு
நிமிஷத்திலேயிந்த அரசர்க்குள்ளேயுன்னை
  நிர்வாணமாக்கிறேன் பாரடி

துரோபதிசொல்-கண்ணி

கருதுமெய்யருக்கெல்லா மெய்யா-என்னைக்
  கைசோரவிட்டிடாதே ஐயா

விரிகடல்மேற்றுயின்ற துய்யா-இந்த
வேளேகாத்தருள்செய்வாய் ஐயா-அரி (மாய)

துற்சாதனன் சொல்-கண்ணி

உரிந்தசேலேயெல்லா முரிந்துகொண்டேனின்னம்
ஒருசுத்திருக்குது பாரடி-இந்த
ஒருசுத்தும்போனுலுன் பரிசுத்தமெல்லாமிங்
குடனேவெட்டவெளி யாமடி.

துற்சாதனன்சொல் விருத்தம்

சேலேநாமுரிவோமென்று திருடிநீயறிவையோதான்
மூலேயிலொருவுள்ளாடை முன்னமேயுடுத்திக்கொண்டாய்
ஏலநீயுடுத்தவாடை யிதனேயுமுரிந்துகொண்டால்
நீலிகள்குருவேயப்பால் நீயென்னசெய்யப்போறுய்.

வசனம்

என்ன ஆச்சரியம்! அடி திருட்டுச்சிறுக்கி! உன்சேலேயை யாமுரிவோமென்று எப்படி தெரிந்துகொண்டாயடி! அப்படி யறிந்துதான் உள்ளாடையொன்று உடுத்திக் கொண்டாய்போலும்! தெரிந்துகொண்டேன். நல்லது, இந்தச் சேலேயையும் உரிந்துகொண்டால் அப்போது என்ன செய்வாய்.

வீமன் - துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

மதித்ததுரோபதையைத்தீண்டி வஸ்திரங்கள்நாங்கள்
எதிர்த்துமைப்பொருளாயெண்ணி யிருப்பமோதுரியாகேளாய்
துதித்தவிகர்னன்போக தொண்ணூற்றென்பதுபேர்தன்னேச்
சிதைக்கிறேனெமபுரத்திற் சேர்க்கிறேனெழுந்துவாரீர்.

வ-ம். அடா துரியோதனு! இந்த ராஜசபையிலே, துரோபதியை நிறுத்தி, வஸ்திரபங்கம் பண்ணும்படி, நாங்கள் பார்த்திருப்போமோ? எங்கள் அண்ணன் சொல்லுக்கு அடங்கியிருந்தோமேயல்லாமல், நீங்களனைவரும் ஒருபொருட்டா? இப்பவும், இந்த விகர்னன் ஒருத்தன் தவிர, மற்ற தொண்ணூற்றென்பதுபேரையும் எமபுரத்துக்கு இப்போது அனுப்பிவைக்கிறேன்; எழுந்திருந்து வாங்களடா.

தருமர்-வீமனுக்குச்சொல்-கவி

மறுத்தேனென்றுமருகாதே கறுத்தேகையில்கதைகொண்டாய்
ஒறுத்தால்தெய்வமெண்ணுதோபொறுத்தாயின்னம்பொறுவீமா.

துரோபதி சொல்-முன் தரு

தேவாதிதேவனே யின்னேரம்-என்னைத்
திருக்கண்பார்த்தாலே யுபகாரம்
பாவிநான்செய்த அபகாரம்-பொறுத்துப்
பரிவாயிரட்சிப்ப துன்பாரம் அரி (மாய)

துற்சாதனன் சொல்-கண்ணி

பலபேருமெய்யென்று மெச்சிக்கொள்ளவுந்தன்
பத்தினிதனமிங்கே காட்டாதேஇப்போ
பரிந்துவுன்சேலையை யுரிந்துசபைதனிலே
பவுஷைக்கெடுக்கிறேன் பாரடி

துரோபதிசொல் முன்-தரு

ஆனைமுறையிடவே வந்தாய்-மடுவில்
அன்றுமுதலையைப் பிளந்தாய்
ஓதுங்கஜேந்திரனைப் புறந்தாய்-இனை
யுனையல்லாற்கில்லை யெந்தாய்-அரி (மாய)

துற்சாதனன் சொல்-கண்ணிகள்

மாளாதுகில்வர மந்திரங்கற்றாயுன்
மந்திரவித்தைக்குச் சலிப்பேனோ-சும்மாய்
வளருந்துகிலெல்லாம் வாங்கிவாங்கியுந்தன்
மானங்குலைக்கிறேன் பாரடி

துற்சாதனன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

சித்திரமாயனந்தஞ் சேலைகளுதிக்குமானால்
எத்தனைகோடியென்று யிழுத்துநானுரிவேனப்பா
எந்தவென்மார்புந்தோளு மிளைக்குதேவுடல்கள்சேர்த்து
இத்தனைகலைவந்துற்று லென்செய்வேன் அண்ணேயண்ணே.

வ-ம். அடா அப்பா? இதென்ன காரணமோ தெரியவில்லை! அற்புத நிற்புதமாய், சித்திரவிசித்திரமாய், கோடிசூரியப் பிரகாசமான சேலைகள், விதவித வாசாமகோசரமாய் புற்றிலே ஈசலானது பெரும்போக்குப் புறப்பட்டாற்போல் எத்தனைகோடி சேலையென்று நானுரிவேன்? கையுஞ் சோர்ந்துபோகுது, காலும் அசைந்து போகுது, என்னாலே ஆகாது அண்ணே.

துரியோதனன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்

புலியொருபூனையாகப் போனாற்போலடடா தம்பி
பலர்களும்நகைப்பதாகப் பயனிலாவார்த்தைசொன்னாய்
உலகிலாக்கலைகளின்ன முண்டாகும்விதத்தைப்பார்ப்போம்
வலியுடனுரியடாநீ மனமதுதளர்ந்திடாதே.

வ-ம். அடா தம்பி துற்சாதனா? புலியைப்போலொத்த நீ பூனையாயொடுங்கிவிட்டு, எல்லோரும் நகைக்கும்படியாய், என்னாலே யாகாதென்று சொன்னாய்? தைரியம் விடாதே; இன்னம் பார்ப்போம் உரியடா உரி.

விகர்னன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

உரியுரிநாழிநாழி யுழக்காழாக்கெனச்சொல்லாதே
நெரிநெரிதம்பிமாரும் நீயும்நின்குடியும்வாழ்வும்
வரிவரிவேற்கண்ணாளின் மனநெருப்பாலின்றோடே
சரிசரியென்றுசொல்லுஞ் சத்தியமில்லாவண்ணே.

வ-ம். கேளாய் அண்ணே? உரி உரி நாழி நாழி உழக்காழாக் கென்று சொல்லவேண்டாம்; உன்னுடைய தம்பிமாரும்-நீயும்-உன் குடியும்-உன்னுடைய செங்கோலும் - உன்னுடைய வாழ்வும்-இந்த துரோபதி மனமென்னப்பட்ட நெருப்பிலே; சரி சரியென்று சொல் றும் அண்ணே.

துரோபதை முன்புலம்பல்-தரு

அடவிரணியனை விண் — சேர்த்தாய்-உந்தன்
அன்பன்பிரகலாதனனைக் — காத்தாய்
திடமான தேவர்கள் துயர் — தீர்த்தாய்-இந்த
ஜெகங்களுய்யக்கிருபைக்கண் — பார்த்தாய் (மாய)

துற்சாதனன் சொல்-கண்ணி

ஓலமிட்டேசும்மா — யொழுகிப்போகிறாயுந்தன்
ஒழுகலுக்குப்பயப் — படுவேனோ-கை
ஓய்ந்துபோனாலுமெய் — சாய்ந்துபோனாலும்-நா
னுனைப்பங்கம்பண்ணாமல் — விடுவேனோ

துரோபதைசொல்-கண்ணி

நாராயணா அரி — கோவிந்தா-உன்னை
நம்பினேனையா — கோவிந்தா
ஆரணனே அரி — கோவிந்தா-நானுன்
அடைக்கலமையா — கோவிந்தா-அரி (மாய)

துற்சாதனன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

அறிவுள்ளவண்ணாவேகேள் யடைவுடனேற்றம்போட்டு
மறிகடல்நீரையெல்லாம் மாளவேயிறைத்திட்டாலும்
நெறியுள்ள இவள்படைத்த நெடுந்துகில்முழுதும்வாங்கி
உரிவதுகடினமையோ யினியென்னாலாகாதப்பா.

வ-ம். கேளாயண்ணே? சத்த சமுத்திரத்திலே ஏற்றம்போட்டு வற்றிப்போகும்படியாய் நீரை யிரைக்கலாம்; இவளுக்குண்டான வஸ்திரத்தை உரிகிறதற்கு இனிமேல் என்னாலாகாது; எங்களப்பன் தரமல்ல கல்லைக்கடிக்க.

பொது விருத்தம்

வனக்கிளி துரோபதைக்கு மாளாமல்வளர்ந்தசேலை
தனித்தனியுரிந்து துற்சா தனன்கைகள் சலித்துநிற்க
குனித்தனிவிதுரன்வீஷ்மன் கோதிலாவேதியன் துரோணன்
இனித்தசொல்பெரியோரெல்லா மெழுந்தவருரைசெய்வாரே.

வ-ம். அகோதெப்படியென்றால், துரோணர்-வீஷ்மர்-அசுவத் தாமா-விதுரன்-இன்னும் சபையி லிருக்கப்பட்ட பெரியோர்கள் சொல்லுகிற விதங்காண்க.

சபையிலுள்ளோர்சொல் விருத்தம்

இவளேஐவருக்குந்தேவி இவளேமற்றெவர்க்குமாதா
இவளேஇப்பூமிதேவி இவளேயக்கினிசொரூபி
இவளேசத்தியநிதானி யிவளேயுத்தமகுணனி
இவளேயிக்குலத்துத்தெய்வ மிவளுக்கிணை ஒருவருண்டோ.

வ-ம். இவளே பஞ்சபாண்டவர்களுக்கு மனைவி! மற்ற யாவருக்கும் இவளே மாதா! பூமிதேவியு மிவளே! இவளே அக்கினிசொரூபி! இவளே சத்தியவசனி! இவளே உத்தமகுணத்தைப் பெற்றவள்! இவளே இக்குலத்துத் தெய்வம்! இவளேயல்லது மற்றொருவரையும் இவளுக்கிணை சொல்லக்கூடாது! தகும் தகும்.

துரியோதனன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்

தாரதரந்தெரிந்தோரெல்லாஞ் சந்தோஷப்படுவதாலும்
வாராதுகிலிவட்குச்சும்மா வளர்ந்துதேயாகையாலும்
பொராயிவள்செய்தகுற்றம் பொறுத்தனனடடாதம்பி
துரோபதிதனையெடுத்தென் துடைமீதில்வைத்திடாயே.

வ-ம். அடா தம்பி துற்சாதனு? இங்கேயிருக்கிற கிழவரெல்லாம் அவள்மேலே சந்தோஷப்படுகிறபடியினுலே மாளாத்துகில் இவளுக்கு வளர்ந்தது; ஆனபடியினுலே, எனக்கிவள் என்ன குற்றஞ் செய்திருந்தபோதிலும் பொறுத்துக்கொள்ளத்தான்வேணும்; இடலென்று வந்து என்தொடைமேலே உட்கார்ந்தால், பொறுத்துக் கொள்ளுகிறதற்குத் தடையில்லை? நல்லது நீயாகிலும் எடுத்துவந்து என்துடைமேலே உட்காரவையடா தம்பி துற்சாதனு?

விகர்னன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

தாவியெதிர்வருமெமனைத் தடுக்கலாகும்
தலைகொண்டபடுவிஷத்தை யிறக்கலாகும்
மேவுவடவாக்கினியை யவிக்கலாகும்
மேல்வரும்பிரமாஸ்திரத்தை விலக்கலாகும்
ஆவதுகேள்கற்புடையோர் சபித்தால்தீர்க்க
ஆதிமும்மூர்த்திகளாலு மாகாதண்ணே
பாவையிவள்மகிமைதனைக் கண்ணிற்கண்டும்
பழிதேடிக்கொள்வதற்கோ பதைக்கின்றயே.

வ-ம். கேளும் அண்ணே! கொல்லவருகிற எமனை தடுக்கலாம், தலைக்கேறின விடத்தையு மிறக்கலாம், வடவாக்கினியையும் அவிக்கலாம், மேலேவரும் பிரமாஸ்திரத்தையும் விலக்கலாம், கற்புடைய உத்தமி மனதுநொந்து அவள் வாக்கினுலே ஒன்றைச் சொன்னல், அதைத்தடுக்க மும்மூர்த்திகளாலு மாகாது. இவள் மகிமையைக் கண்டும், பழியைத் தேடிக்கொள்ளலாமோ அண்ணே.

## துரோபதிக்கும் துரியோதனனுக்கும் தர்க்கம்

### தரு-இ-ம்-காம்போதி-மிசுரதாளம்

ஒருமைத்தரணிபர்க்குள் பெருமைப்படவுதித்தாய்படுபாவி இந்த
அருமைகுருகுலத்தின்முறைமைதவிரவிட்டாயடாதோஷி அடி
முறைமைத்தவிரவிட்டவர்கள்நிதமுமிழக்குமொருவேசி உன்
முறையிப்படியிருக்கசபைமெச்சவும்நொடித்தாயடாதோஷி உந்த
மனதிற்பகையைவைத்துயிவிடந்தனில்அழைத்துப்படுபாவி நீ
வலியப்பகடைவைத்துஅடிமைப்படகெலித்தாயடாதோஷி அடி
அடுமைப்படகெலித்துஅவர்கைப்பொருள்பறித்தறிவாயே நீஎன்
அடிமைப்படுசிறிக்கிதுரைசொற்படிநடக்கவருவாயே எந்தன்
தருமத்துரைகளுக்குச்சதிசர்ப்பனைநினைத்தபடுபாவி இந்தச்
சகுனிப்புலையனிட்டசொற்படிமுடித்தாயடாதோஷி எந்தன்
சலவைத்தொடைமடிக்குள்சரசத்துடனிருக்கவருவாயே இந்தச்
சகுனிசொல்லையெடுத்துக்கடலுக்கப்புறமெட்டிஎறிவேனே நானுன்
தொடையிற்றனியிருக்கச்சபையிற்பழுதுரைத்தபடுபாவி உந்தன்
தொடையிற்கழுகுகொத்தநெளியபுழுபுழுத்துமடியாயோ எந்தன்
தலையைபடுகளத்திலுருளக்கணைகள்பட்டென்னுயிர்போயும் என்னை
தழுவிக்கொளநினைத்தமனதெப்படிமறக்கும் மறவேனே என்னைத்
தழுவிக்கொள்ளநினைத்துமடியில்தனையழைத்த படுபாவி என்
தருமதுரைகள்கைக்குளடிபட்டலறியெப்போவீழ்வாயோ என்னை
சபையிற்றனிநிறுத்தித் துகிலைக்களையவிட்ட படுபாவி உந்தன்
தலையைக்கணைதறிக்கதலையிற்புரள்வதெப்போ அடாதோஷி எந்தன்
தலையைக்கணைதறிக்கமுடிபெற்றிடுஞ் சமர்த்தரிவர்தானே இந்த
சவலைப்பசங்களுக்குமினிமற்றொருவருக்கு மசைவேனோ
நீங்களடியற்றுவொருமிக்கக்கொடியப்படுகளத்தில் மடியாமல்
மண்மேல்அலையசுருளவிழ்ந்தமயிரைக்கையாலெடுத்து முடியேனே

### துரோபதைசொல் விருத்தம் இ-ம்-முகாரி

கொலுவினில்நிறுத்தியெந்தன் கூந்தலுந்துகிலுந்தீண்டி
மெலிவுசெய்தவரைநாளை வேருடன்போர்க்களத்தில்
தலைதனைத்துணிந்துவெற்றித் தனிமுரசறைந்திடாமல்
இலகவேவிரித்தகூந்த லெடுத்தினிமுடிந்திடேனே.

வ-ம். கேளுங்கள் சபையிலுள்ள ராஜாக்களே? என்னை இந்த இராஜசபையிலே நிறுத்தி, என் கூந்தலையுந் துகிலையுந் தீண்டி,

என்னை அவமானபங்கஞ் செய்தவனை; நாளை இரணக்களத்தில் அவன் மார்பின்மேலிருந்து மயிரை முடிக்காவிட்டால் நான் துரோபதியல்ல.

வீமன்சொல் விருத்தம்

மங்கைதுரோபதியையிந்த மகாசபைதனில்நிறுத்தி
பங்கமாய்ப்பழுதுசொன்ன பாதகர்தம்மையிந்தச்
செங்கையிற்கதையினாலே சின்னபின்னங்களாகச்
சங்கரித்திடுவேன்சொன்ன சபதமுமுடிப்பேன்பாரீர்.

வ-ம். கேளுங்கள் சபையிலுள்ளவர்களே? துரோபதியைச் சபையில் நிறுத்தி, மானபங்கஞ் செய்துவைத்தபேரை, என்கையி லிருக்கும், கதையினாலே அடித்துக்கொன்று நான் சொன்ன சப தத்தை முடிக்கிறேன் பாருங்கள் ராஜாக்களே.

இதுவும் வீமன்சொல் ஆசிரியவிருத்தம்

மதித்ததுரோப்தியை மயிர்பிடித்திழுத்து
வஸ்திரமுரிந்தவன் றன்னைச்
சதைத்தவனுதிர மள்ளியுண்டெனது
தாகந்தீராமல்நானினிமேல்
கதித்தவென்கையாற் புனலெடுத்துண்ணேன்
கதையினாற்ஜலத்தினையடித்துக்
குதித்துமேலெழுந்த திவலையையுண்டு
கொண்டவன் பகைமுடித்திடுவேன்.

வ-ம். கேளுங்கள் ராஜாக்களே மந்திரிகளே? துரோபதியை மயிரைத்தொட்டிழுத்துவந்து, வஸ்திரபங்கம் பண்ணவனெவனோ? அவனை நெஞ்சைப்பிளந்து, அவனுடைய உதிரத்தை என்கையினால் அள்ளிக்குடித்து; என்னுடைய கோபமென்னப்பட்ட தாபந்தீர்க்கா மல், இனிமேல் என்கையினாலே ஜலத்தை அள்ளி தாகபானம்பண் ணேன் ஜலம் சாப்பிடவேணுமானால் இந்தக் கதையினால் ஜலத்தை யடித்து மேலே எழுந்த ஜலத்தை சாப்பிடுவேனேயல்லாமற்படிக்கு என் கையில் அள்ளிச் சாப்பிடுகிறதில்லை.

அர்ச்சுனன்சொல் விருத்தம்

படுதுரியோதனன்சொற் பழுதுபோகாமலேந்தி
விடுவிடென்றுரைக்குமிந்த விரோதியாங்கர்னன்றன்னை
தொடுகணையாலேயாவி துள்ளவேயடித்துநாளைப்
படுகளஞ்சேர்க்காவிட்டாற் பார்த்திபனல்லவேனே.

வ-ம். கேளுங்கள் ராஜாக்களே? இந்தத் துரியோதனன் சொல் லைக் கீழேவிழாமல் எடுத்துக்கொண்டு, இச்சகம்பேசுகிற இந்தக் கர்னனுயிரை என்விட அஸ்திரங்களுக்கு இரைகொடாவிட்டால், என்பேர் அர்ச்சுனனோ? நல்லது ஆகட்டும்.

நகுலன்சொல் விருத்தம்

கவடுவஞ்சனைக்கும்பொல்லா கறடகதமனகன்போல்
தவறுகள்மிகவேசெய்யுஞ் சலபலநாதன்றன்னை
அவமதித்தமர்க்களத்தி லதோகெதியாக்கிவெற்றி
நவின்றிடச்செய்யாவிட்டால் நகுலனாகுமேவனோ.

வ-ம். கேளுங்கள் ராஜாக்களே? மகா கறடகமனக வித்தைகளால் மித்துருபேதஞ் செய்யப்பட்ட சவுபலநாயகனை, ரணமுகத்திலே சங்காரம்பண்ணுமற்போனல், நான் நகுலனா? நல்லதாகட்டும்.

சகாதேவன்சொல் விருத்தம்

புகுநரிகுருக்கள்போலும் புருடவேசிகளைப்போலும்
வெகுபகைமனதில்வைத்து மித்திரபேதங்கள்செய்து
மகுடமன்னரைக்கலைத்து மாரீசஞ்செய்யுமிந்த
சகுனியைக்கொல்லாவிட்டால் சகாதேவனாவேனோ.

வ-ம். கேளுங்கள் ராஜாக்களே? நரி குருக்களென்றுஞ் சொல்லுவார்களே? அவர்களைப்போலவும், புருடவேசிகளைப்போலவும், சதிசர்ப்பனை, சாமத்துரோகம், மித்திரபேதமெல்லாஞ் செய்து, ஆதீனத்தைக் கலைக்கப்பட்ட இந்த சகுனியைச் சித்திரவதைசெய்து கொல்லாவிட்டால் நான் சகாதேவனா? நல்லதாகட்டும்.

பொது விருத்தம்

தருமபுத்திரனில்லாமல் தம்பிமார்நான்குபேரும்
அரிவைதுரோபதியுஞ்சொன்ன அடல்பெருஞ்சபதங்கேட்டு
மருவியபெரியோரெல்லாம் மனமிகக்கலங்கும்போது
குருகுலக்கொடியோனான குருடனுங்கூறுவானே.

வசனம்

அகோதெப்படியென்றால் தருமபுத்திரமகாராஜன் தவிர, மற்றத் தம்பியர் நால்வரும், துரோபதையும் சொன்ன சபதங்களைக்கேட்டு, சபையிலுள்ள யாவர்களும் மனதில் விசனமடைந்திருக்குந்தருணத்தில், திருதராட்டிரமகாராஜன் துரோபதிக்குச் சொல்லுகிறவிதங் காண்க.

திருதராட்டிரன் துரோபதிக்குச்சொல் விருத்தம்

கற்பினுக்கரசேதெய்வ கடாக்ஷமுள்ளவளேபோற்றி
மற்பெருமைவர்சிந்தை மகிழ்குலக்கொடியேபோற்றி
பொற்புறுமாதர்க்குள்ளே பொறுமையுள்ளவளேபோற்றி
அற்புதத்திருவேயிந்த அபசாரம்பொறுப்பாய்போற்றி.

வ-ம். அம்மா துரோபதியே! நீயென் தாயாச்சுதே? எங்களை ரட்சிக்கவந்த தெய்வமாச்சுதே? அப்படியா இப்படிச்செய்யவேண்டாமென்று நானுஞ் சொன்னேனே? என்பேச்சை இந்தப் பசங்

கள் கேட்கிறார்களா? உன்மகிமை இந்தப்பசங்களுக்கு இப்போது தான் தெரியவந்தது. எனக்குந் தெரியவந்தது; நாங்கள் என்ன அபசாரஞ் செய்தாலும் பொறுத்துக்கொள்ளவேணும் தாயே.

விகர்னன்சொல் விருத்தம்

எட்டினாற்குடுமிகையி லெட்டாமற்போச்சுதானல்
திட்டெனக்கால்பிடிக்குந் திருடர்போல்வந்தாரப்பா
கட்டிதங்கத்தின்மாற்றைக் கண்ணிலாரறிவரோதான்
துஷ்டப்பிள்ளைகளுக்கின்னஞ் சொல்லுவதெல்லாஞ்சொல்வாய்.

வ-ம். கேளுமையா என்பிதாவே! எட்டினால் குடுமி எட்டா விட்டால் கால்பிடித்துக்கொள்ளுகிறதென்று சொல்லிக்கொள்வார் களே? அப்படி யிருக்கிறது; இந்தத் துரோபதியை நீ துதிசெய் கிறது. தங்கத்தினது பிரகாசமும் மாற்றும், குருடனுக்குத் தெரி யுமா? அந்தத்துரோபதி அம்மாளது மகிமை நமக்குத் தெரியுமா? ஒருக்காலுந்தெரியாது. நீ சொல்லவேண்டியதெல்லாம் உன்னுடைய துஷ்டப் பிள்ளைகளுக்குச் சொல்லும். இந்த அம்மாளுக்கு உன் உபசாரஞ் சொல்லவேண்டியதில்லை.

திருதராட்டிரன் துரோபதைக்குச்சொல் விருத்தம்

உச்சிதமயிலேகேளா யுணர்விலாவெந்தன்மைந்தர்
மச்சினமுறைகொண்டேதோ வகைவிளையாடினார்கள்
குச்சிதமாயெண்ணாதே குறைமனதினில்வையாதே
பிச்சர்களென்றேயிந்த பிழைபொறுத்தாள்வாயம்மா.

வ-ம். அம்மா துரோபதியே! என்பிள்ளைகள் கள்ளங்கபடு தெரியாத பிள்ளைகள்; சூதுவாது ஒன்றுந்தெரியாது. இப்படி போனால் இப்படி வருமென்றுந் தெரியாதவர்கள்; மேலும் மச்சினமாராகையால் அந்த முறைகொண்டு நாம் எவைகளைச்செய்தாலும் கோபித்துக் கொள்ள மாட்டார்களென்கிற நம்பிக்கையினால் விளையாடினார்கள். அந்த விளையாட்டை நீ வினையாக நினைக்கவேண்டாம்; ஆயிரங்குற்ற மானாலும் அடியேனைப்பற்றி பொறுத்து எப்படியாகிலும் இதை மன்னிக்கவேணுந் தாயே.

திருதராட்டிரன்சொல் கவி

பொன்னுலகம்புகழும் கன்னியர்க்கரசே
என்னவரம்வேணும் முன்னிநீமொழிவாய்.

வ-ம். கேளுமம்மா துரோபதையே! உன் மனது துயரமெல் லாம் நீக்கி என்னால் உனக்கு வேண்டிய பிரயோஜன மின்னதென்று கேட்டால் நான் கொடுக்கிறேன் கேளுமம்மா.

துரோபதி திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்

ஒருமைகள்பலவும்பேசி யுளமெலாமுருகிநின்ற
அருமையென்மாமாவுந்த னரவிந்தபாதம்போற்றி
வருமனுநீதியன்றி மற்றுமக்கடுமையான
தருமமூர்த்திகளைக்கொண்டு தவிழ்த்துநீர்விடுகுவீரே.

வ-ம். கேளும் என்மாமாவே? கேட்டதைக் கொடுக்கிறேனென்று சொன்னபடியினாலே, நீங்கள் சூதாடி அடிமைப் படுத்திக்கொண்ட, அந்த தர்மமூர்த்திகள் அடிமைத்தனத்தை மீட்டுக்கொடுக்கவேணும் மாமா.

திருதராட்டிரன்சொல் வசனம்

அப்படியேகொடுத்தேன் அம்மா.

இதுவும் திருதராட்டிரன்சொல் கவி

கனியெனும்நிறம்போல் இனியசொற்கோதாய்
மனதினில்வருந்தா தினியொருவரங்கேள்.

வ-ம். கேளுமம்மா துரோபதியே? இன்னமொரு வரங்கேள் கொடுக்கிறேன்.

துரோபதைசொல் விருத்தம்

நூல்வரும்நீதியாய்ந்து நுண்ணியகேள்விகேட்டு
மால்வரும்புகழைப்பெற்ற மாமாகேளொருவிண்ணப்பம்
ஆல்வரும்வெற்றிபெற்ற வாயுதத்துடனேமற்ற
நால்வர்தனடிமைநீக்கி நயமுடன்தந்திடாயே.

வ-ம். கேளும் மாமாவே? இன்னம் வேண்டியதைக் கேட்கச் சொன்னபடியினாலே, மற்ற நாலுபேரையும், ஆயுதத்துடனே அடிமைத்தனத்தை நீக்கிவிடவேணும் மாமா.

திருதராட்டிரன்சொல் வசனம்

அப்படியே கொடுத்தேன் இன்னமொரு வரங்கேளம்மா.

துரோபதைசொல் வசனம்

கேளும் மாமாவே? ஸ்திரீஜாதிகள் வரம்பெற்றால்; பிராமண ஸ்திரீகள் ஒருவரமும், க்ஷத்திரிய ஸ்திரீகள் இரண்டுவரமும், வைசிய ஸ்திரீகள் மூன்றுவரமும், பெறலாமேயல்லாமல் அதற்குமேலும் பெறலாகாதே மாமா.

திருதராட்டிரன்சொல் வசனம். அப்படியா அம்மா.

திருதராட்டிரன்சொல் விருத்தம்

தேடக்கிடையாமைந்தர்களே தீதாஞ்சூதில்நீர்தோற்ற
நாடுகொடுத்தேனகர்கொடுத்தேன் நாலுவிதச்சேனைகள்கொடுத்தேன்
வீடுகொடுத்தேனெப்பொருளும் விளங்கக்கொடுத்தேன்கைக்கொண்டு
பீடுபடைத்துமுன்போலும் பேர்பெருத்துவாழ்வீரே.

வ-ம். கேளுங்கள் பொறுமையுள்ள என்கட்டிமக்களே? நீங்கள் ஆயாசப்படவேண்டாம்; அந்தப்பிள்ளைகள் வேறல்ல. நீங்கள் வேறல்ல. இப்போது நீங்கள் சொக்கட்டாணடித் தோற்ற, நாடுநகரம் நால்வகை சேனைகளெல்லாங் கொடுத்துவிட்டேன் நீங்கள் எப்போ

தம்போல ராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டு சுகமாயிருங்களப்பா.

தருமர் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்

அப்படிதானேசெய்வோம்ஐயனேநின்றாள்போற்றி
பெட்புறுமுலகந்தன்னிற் பிதாவாக்கியந்தள்ளுவாரோ
எப்படிநீர்சொன்னாலும் யாமதைத்தடுப்பதில்லை
மெய்ப்புடன்விடைகொடுத்தால் மேனகர்க்கேகுவோமே.

வ-ம். கேளும் பிதாவே! உலகத்திலே பிதாவாக்கியந் தள்ளுவார்களா? நீர் எப்படிசொன்னாலும் அப்படியே கேட்போம், செலவுகொடுத்தனுப்பினால், நாங்கள் இந்திரபிரஸ்தம்போய்ச் சேருகிறோம் ஐயா.

சகுனிசொல் விருத்தம்

பகையெலாம்போச்சேநான்றான் பட்டதுவீணாய்போச்சே
வகையெலாம்போச்சேயுங்கள் வைரங்கள்விட்டுப்போச்சே
சுகமுடனவரும்நீரும் துஜங்கட்டிவாழ்ந்திருங்கள்
தருமிதுநன்றாய்ச்செய்தீர் சபாசுன்னைமெச்சினேனே.

வ-ம். இன்றோடே இருந்த பகையும்போச்சுது, நான் பட்டபாடெல்லாம் ஆற்றிலேகரைத்த புளியாய்ப் போச்சுது. இருக்கட்டும் எப்படியாகிலும் நீங்களும் அவர்களும் ஒருமித்துச் சுகமாயிருந்தால் சரி கேடுவரும்போது மதிகெட்டுவருமென்று சொல்லுவார்கள் அப்படியிருக்குது; அடாபோங்கள் வேலைமெனக்கிட்டதாசிரிகளே ஆ! ஆ!

கர்னன் சகுனிக்குச்சொல் விருத்தம்

மதிப்புடன்தன்னைத்தேடி வந்திடுஞ்செல்வந்தன்னை
உதைத்துமேதள்ளிவிட்டா லுமக்கென்னநமக்கிங்கென்ன
பிதைப்பைகளென்றுசொல்லி பேச்சொன்றுநின்றுபோச்சு
விதப்படுசகுனிமாமா விடுவிடுபேசவேண்டாம்.

வ-ம். கேளும் சகுனிமாமா? வேணுமென்று தனக்குத் தானே அந்த செல்வத்தை வேண்டாமென்று உதைத்துத் தள்ளிவிட்டாலிப்போது உமக்கும் எமக்கும் என்னமுழுகிப்போச்சுது துரியோதனன் பங்காளியென்கிற பட்டம்மாத்திரம் வந்தது இதனாலே நீரேன் பேசுகிறீர் சும்மாயிரும்.

துரியோதனன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்

துற்சாதனாநீவாடா சுருக்காயோர்நொடியிற்சென்று
பொய்சார்ந்தவைவர்தன்னைப் போகாமல்மடக்கிக்கொண்டு
பிச்சானகிழவன்பேச்சைப் பெரிதென்றுநம்பிப்போக
உச்சாயமல்லவென்று உடனேபோய்தடுத்துவாடா.

வ-ம். அடாதம்பி துற்சாதனா? இங்கேவாடா நீ சீக்கிரமாயோடி தர்மபுத்திரர்களை போகவொட்டாமல் மடக்கிக்கொண்டுவா கண்

ணில்லாத பயித்தியக்கார கிழவன் பேச்சை நம்பிப்போகிறது காரிய மல்லவென்று அதற்குண்டான பேச்சுகளெல்லாம் பேசி அவர்களை இந்திரப்பிரஸ்தத்துக்குப் போகவொட்டாமல் இங்கே இட்டுக் கொண்டுவாடா தம்பி துற்சாதனா.

துற்சாதனன் வசனம்

அப்படியே செய்கிறேன் அண்ணாவே.

துற்சாதனன் பாண்டவர்களுக்குச்சொல் விருத்தம்

ஐயனேகேளீருங்க ளறிவென்னவாண்மையென்ன
மெய்வரும்படியாய்தோற்றீர் விழியிலாக்கிழவன்பேச்சை
கைவரும்படியாயெண்ணிக் கடிந்துலகாளப்போறீர்
பொய்வரும்புகழும்போக்கும் பொறியிலாநெறிசெய்தீரே.

வ-ம். பாண்டவர்கள் நீங்கள் சத்தியமாய் சபையில் ஆடித் தோற்ற நாடுநகர முதலானதை நான் கொடுத்தேன் போய்விடுங்க ளென்று முன்பின்தோன்றாத கிழவன் சொன்னான். அதைக்கேட்டுக் கொண்டு நீங்கள் போகலாமோ? இது தருமமா! இதுவரையிலும் சத்தியமாயிருந்து இப்போது அசத்தியத்தைக்கொண்டா போகிறது வாரும்.

தருமர்சொல் வசனம்

அப்படியே வருகிறோம் தம்பி துற்சாதனா.

தர்மர் சபையில் வந்து சொல்லுகிற விருத்தம்

இதாகிதந்தெரிந்துசொல்லு யிறைவனேசொல்லக்கேளீர்
பிதாசொன்னவார்த்தையெல்லாம் பிசகுதானென்றுசொல்லி
சுதாவிலேவந்துசொன்னான் தோன்றுதுற்சாதனன்றான்
எதாகிலுமொருமார்க்கத்தை யின்னதென்றுரைசெய்வீரே.

வ-ம். ஐயா துரோணரே? பீஷ்மரே? நாங்கள் சொக்கட்டா னடித்தோற்ற நாடுநகரமுதல் மறுபடியும் உங்களுக்குக் கொடுத்து விட்டேனென்று என்பிதாவான திருதாட்டிரமகாராசன் சொல்லி விடைகொடுத்தனுப்பியிருக்க அது தகாதென்று துற்சாதனன் தடுக் கிறான் அதைத் தெரிந்து சொல்லுங்களையா.

துரியோதனன் பாண்டவர்களுக்குச்சொல் விருத்தம்

சொல்லுவதென்னமுன்பின் தோன்றாதகிழவன்பேச்சைக்
கல்லின்மேலெழுத்தென்றெண்ணிக் கடிந்துலகாளப்போறீர்
நல்லதுதானாயிதுவும் ஙியாயமாயினிமேலுங்கள்
வல்லபங்கட்டிவைத்து வனத்துக்குவேகுவீரே.

வ-ம். என்னத்தைக்காணும் இங்கே சொல்லுகிறது பிரமாணிக்க மாய்ச் சூதாடி எப்போ தோற்றீர்களோ அன்றே போச்சுது எங்கள் தகப்பன் பெரியமனிதனுச்சுதே கண்ணில்லாக்கிழவன் ஏதொன்றுக்

தோன்றாமல் ஒன்றைச்சொன்னால் அதைச்சிலாக்கியமாய்ப் பிடித்துக் கொண்டுபோக எத்தனப்பட்டீர்கள் அதுகூடாது இந்தக்ஷணத்தில் நீங்கள் காட்டுக்குப் போய்விடுகிறதே தீர்மானம்.

துரோணர் தருமருக்குச்சொல் விருத்தம்

பகடையில்தோற்றதெல்லாம் பரிந்தவர்தந்திட்டாலும்
இகழ்வதுகொள்ளலாகா திராசருக்கியற்கையன்றோ
தகும்பழிமுன்பின்னிந்தத் தரணியையாளுமன்னர்
புகும்நெறிப்படியேசெய்தால் புரவலர்வாழ்க்கையாமே.

வ-ம். கேளும் தர்மராஜனே! எப்போ சூதாடித் தோற்றுப் போனதைக் கொடுத்துவிட்டேனென்று அவர்கள் சொன்னாலும் நீங்கள் அதைக்கொள்ளுகிறது யோக்கியமல்ல முன்பின் இராஜாக்கள் போன வழிப்படியே போகவேணும் தர்மராஜனே.

அஸ்வத்தாமர் தருமருக்குச்சொல் விருத்தம்

தர்மபுத்திரனேயுங்கள் தம்பிமார்நாலுபேரும்
சபதமிட்டிருக்குமந்தத் தன்மையைமறந்திட்டாயோ
மருவுமுன்செல்வமெல்லா மறுபடிகிடைக்குங்கண்டாய்
ஒருவர்தன்னருளுமற்ற ஒருவர்தான்பகையாகாதே.

வ-ம். கேளும் தர்மராஜனே! உங்கள் தம்பிமார் நாலுபேரு மிட்ட சபதம் பொய்த்துப்போமோ, அந்தப்படியே முடியும் எப்படியும் நாடுநகர முதலானதுகள் உங்களுக்குக் கிடைக்கும். திருதராட்டிரனுடைய அன்பும் துரியோதனன் பகையும் பெற்றுப்போனதினால் காரியமென்ன.

பீஷ்மர் தருமருக்குச்சொல் விருத்தம்

அறிவுடனயோத்தியாண்ட வரிச்சந்திரராஜன்செல்வம்
பறிகொடுத்தப்பால்பிள்ளை பத்தினிதன்னைவிற்று
விறல்விட்டுத்தானுங்கூட விலைபட்டுமீண்டுவந்து
கறையரவுலகமெல்லாம் கைக்கொண்டதறிகிலாயோ.

வ-ம். கேளும் தர்மராஜனே! மகாசக்கிரவர்த்தியான அரிச்சந்திரன் நாடுநகரமெல்லாம் விஸ்வாமித்திரனுக்குக் கொடுத்துவிட்டு பிள்ளையைவிற்றுப் பெண்சாதிவிற்றுத் தானும் விலையாகிப் படாத துன்பங்களைப்பட்டு மறுபடியும் உலகத்தை யாளவில்லையா இதைக் கேட்டதில்லையா தர்மராஜனே.

விதுரன் தருமருக்குச்சொல் விருத்தம்

நளச்சக்கிரவர்த்திசூதால் நாடெலாமிழந்துகானில்
உளமெலிந்துழன்றுகொண்டே யொண்டொடியாளைநீக்கி
வளமிகுமங்கக்குன்றி வலியதேர்ப்பாகனாகிக்
களதுயர்நீக்கிவையங் கர்த்ததுமறிந்திலாயோ,

வ-ம். கேளும் தர்மாசனே? நளச்சக்கிரவர்த்தி நாடுநகாமிழந்து வனத்திலே சஞ்சரித்து பெண்சாதியைநீக்கித் தேர்ப்பாகனுகியும் மறுபடியும் இந்தப் பூச்சக்கரமெல்லாம் ஏகமாய்ப் பெற்றிருக்கவில்லையா இதுவுங் கேட்டதில்லையா தர்மாசனே.

துரோணர் தருமருக்குச்சொல் விருத்தம்

ஆகையால்நீருமிந்த வரிவைதுரோபதையுங்கூடி
பாகமாய்வனத்துக்கேகிப் பனிரண்டுவருடந்தங்கி
ஓகையோர்வருடங்காட்டி லொருவர்க்குந்தெரியாவண்ணம்
வாகுடன்மறைந்திருந்து வந்துபின்னுலகையாள்வீர்.

வ-ம். கேளும் தர்மாசனே! நீங்கள் ஐந்துபேரும் இந்தத் துரோபதையுங் காட்டுக்குப்போய் பன்னிரண்டு வருடம் வனவாசம் பண்ணி ஒருவருடம் யாருக்குந்தெரியாமல் காட்டிலே மறைந்திருந்து வந்தீர்களானல் மறுபடியும் உங்கள் நாடு நகரமெல்லாம் பெற்று சுகமாகயிருக்கலாம் தர்மாசனே.

இதுவும் துரோணர்சொல் விருத்தம்

மறைந்திருக்கின்றநாளில் மற்றொருவர்கள்கண்டால்
நெறியினில்நீங்கள்சென்று நேர்வனஞ்சஞ்சரித்து
இறைமறுபடியுங்காட்டிற் கேகுவதென்றோரிந்த
குறைவறவந்தாலுங்கள் குவலயங்கைக்கொள்வீரே.

வ-ம். கேளும். என்னருமையான பிள்ளைகளே! பன்னிரண்டு வருஷம் வனவாசம் ஒருவருடம் அக்கியாதவாசத்திலே உங்களை யாராவது இன்னுரென்று தெரிந்துகொண்டால் மறுபடியும் பதின்மூன்று வருஷம் இப்படிக்குச் சஞ்சரிக்கிறதென்று இருக்கின்றது சமஸ்தானத்தின்கருத்து. அப்படியே இந்தப்படிக்கு வனம்போய்வந்தால் உங்கள்செல்வத்தைப்பெற்றுக்கொள்ளலாம் தர்மாசனே.

துரோபதைசொல் விருத்தம் முகாரி

துறையிதுவென்றுசொன்ன துரோணரேநின்றுள்போற்றி
அறைதருமிவர்களைவர் ராசர்களாவதென்றுந்
திறமுடனிவர்களுக்குத் தேவினுனவதென்றும்
குறைவுறவினியொருக்காற் கொடியசூதாடவேண்டும்.

வ-ம். ஐயா துரோணரே? நீங்கள் சொன்னது சரியே. ஆனுலும் இந்த ஐந்துபேரும் அடிமையென்றும் அவர்களுட்பட்ட பொருள் நானென்றும் அவர்கள் சொல்லச்சே அந்த வில்லங்கத்தை வைத்துக்கொண்டு வனத்துக்குப்போகிறது யோக்கியமல்ல இனியொருதரஞ் சூதாடவேண்டும் ஐயரே.

தர்மர்சொல் விருத்தம்

மெய்யிதுதையல்வார்த்தை விசிதந்தானவர்க்குநாங்கள்
கையறுமடிமையாகிக் காட்டுக்குப்போனுல்நானே

வையகமடுமைப்பட்ட மனிதர்க்கிங்கேதென்பாரே
துய்யனேயினியோராட்டஞ் சூதாடவேணுமையா.

வ-ம். கேளுமையா துரோணரே! துரோபதை சொல்லுகிறது மெய்யே அடுமைத் தனத்தோடே பூமியேதென்றுசொல்வார்கள்? அந்த அடுமைத்தனத்தை இப்போது தீர்த்துக்கொள்ளுகிறது நல்லது ஆகையால் இன்னுமொருதரஞ் சொக்கட்டாளுடவேண்டும் ஐயா.

விதுரன் துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

சரிசரியிதற்குவேறே தடங்கலைசொல்லொணுது
துரியனே சகுனிகர்ண துற்சாதனுகேளீர்
பரிவுடனினியோராட்டம் பகடையுமாடச்செய்வீர்
கரியதோர்சபையிலிப்போ காணவேயாடுவோமே.

வ-ம். கேளும் துரியோதனு? கர்ணு? துற்சாதனு? தர்மாசன் சொல்லுகின்றது சரியே ஆனகயினுலே முன்போல் தர்மாசனும் சகுனியும் இன்னமொரு ஆட்டம் சொக்கட்டான் போட்டுப்பார்ப்போம்.

சகுனிசொல் விருத்தம்

நாட்டையுங்கொடுத்துவுள்ள நகரையுங்கொடுத்துச்சொந்த
வீட்டையுங்கொடுத்துசும்மா வெறுங்கையைக்கட்டிக்கொண்டு
காட்டுக்குப்போரபேர்க்குக் கைப்பொருளேதனைக்கண்டு
ஆட்டத்தையாடச்சொன்னீ ரதற்கொருவயணஞ்சொல்வீர்.

வ-ம். நாடுநகரம் ரொக்கரோசனே ஆனேசேனே முதலானதுகளெல்லாந் தோற்றுக் கைகட்டிக்கொண்டு காட்டுக்குப்போகிறபேர்களுடனே சூதாடச்சொல்லி குதித்தீர்களே அவர்கள் கையில் என்னயிருக்கிறது என்னபந்தயம் வைத்தாடுவார் கேளுங்கள்.

தருமர் சகுனிக்குச்சொல் விருத்தம்


நான்தோற்முலெந்தன்புண்ணியம் நல்குவேனல்லாமல்நீர்
தான்தோற்முலெங்கள்தொண்டு தவிர்வதுயிதைக்குறித்து
தேன்தோற்றவாயாலிங்கே திறல்மன்னர்பார்ப்பதாக
வான்தோற்றகையாலிங்கே வலியசூதாடுவோமே.

வ-ம். கேளும் சகுனிமாமா! நான் தோற்முல் நான்செய்த புண்ணியமெல்லாங் கொடுத்துவிடுகிறேன் நீர்தோற்முல் எங்களுக்கு அடுமைத்தனம் அக்கரையில்லே. இந்தப்படியே யாடுவோம் வாரும் மாமாவே.

சகுனிசொல் வசனம்.

அப்படியே யாடுவோம் வாரும் தர்மாசனே.

---



துற்சாதனன் துரோபதையைத் துகிலுரிதல்

தருமரும் சகுனியும்

## ஐந்தாவது ஆட்டம்

தருமர்சொல்-தரு-காம்போதி-மிசுரதாளம்

தாமோதராவாசுதேவா கோவிந்தா
தற்காத்தருள்முகுந்த வைகுந்தா

வ-ம். இரண்டு பனிரண்டு பத்து.

சகுனிசொல்-தரு

இன்னமுஞ்சூதாட வந்தீரோ வாரும்
இனியாகிலுமென்கை திராணியைப் பாரும்

வ-ம். மூணத்தொண்ணு.

தர்மர் சொல்-தரு

நாராயணாவச்சுதா பத்மநாபா
நம்பினேனுன்னையே மெய்யா ஞானசொரூபா

வ-ம். இரண்டு பனிரண்டு இரண்டெட்டு இரண்டிரிக்கா இரண்டு துகை பத்து.

சகுனி சொல்-தரு

அனைத்துந்தோற்றீரென்று சற்றுமெண்ணாதா
அத்துடனானாலும் போகவொண்ணாதா

வ-ம். நாலத்தோரஞ்சு.

தருமர் சொல் தரு

அண்டமெல்லாம்வாரி யுண்டசெவ்வாயா
ஆதரிக்கவேணு மார்க்கசகாயா

வ-ம். நாலு பன்னிரண்டு நாலிரிக்காலெட்டு நாலு மூணேழு.

சகுனி சொல் தரு

விபரீதப்பந்தயம் விழுந்ததும்போச்சே
விழுவதெல்லாம்அஞ்சு மூணத்தொண்ணாச்சே

வ-ம். மூணத்தொண்ணு.

தருமர் சொல் தரு

தரணியெல்லா மளந்தபொற்பாதா
தட்சகனேயர்தி லட்சுமிசமேதா

வ-ம். இரண்டுதுகை நான்கு இரிக்கால் எட்டு பனிரண்டு பத்து.

சகுனி சொல்-தரு

ஆட்டத்திலெல்லாங் கொடுத்துச்சலித்தான்
அடிமைத்தனம்போக இப்போகெலித்தான்

வ-ம். நாலுமூணேழு.

பீஷ்மர் துரோணர் அஸ்வத்தாமர் விதுரர்
இவர்சொல்லுகிற விருத்தம்

தொண்டரென்றவர்சொல்லாமற் சூதாடித்தீர்த்துவிட்டீர்
விண்டிடுமடிமையான வில்லங்கமினிமேலில்லை
பண்டுறசெய்யுமிந்தப் பதின்மூன்றுவருடஞ்சென்றால்
கொண்டிடுநாடும்வாழ்வுங் கொள்ளுவீர்வெல்லுவீரே.

வ-ம். கேளுங்கள் பாண்டவர்களே? அம்மா துரோபதையே? அடிமையென்ற வார்த்தையை அவர்கள் சொல்லாமல் அந்த வில் லங்கத்தைத் தீர்த்துவிட்டீர்கள். இனிமேல் நீங்கள் ஆரணியத்துக் குப்போய் பன்னிரண்டு வருஷம் வனவாசமும், ஒருவருடம் அக்யாத வாசமு மிருந்துவந்தால் மறுபடியும் எப்போதும்போல் உங்களுடைய இராச்சியமெல்லாம் பெற்றுக்கொள்ளுவீர்கள்.

தருமர் சபையோர்களுக்குச்சொல்-விருத்தம்

அருள்பெறுந்துரோணாதி யையரேபாட்டனாரே
மருவுசிற்றப்பாவுங்கள் மலர்ப்பாதம்போற்றிபோற்றி
கருதியபெரியோருங்கள் கடாக்ஷம்வைத்தருளவேணும்
விரவியவனத்துக்கேக விடையதுதருகுவீரே.

வ-ம். ஐயா துரோணரே? அஸ்வத்தாமரே? வீஷ்மரே? பாட்ட னாரே? எங்கள் குருக்கள்மாரே? சிற்றப்பாராகிய விதுரமகாராசனே! உங்களனைவருக்கும் சரணம் சரணம் உங்கள் திருக்கடாட்ச மிருக்க வேண்டும் நாங்கள் வனத்திற்குப் போய்வருகிறோம் செலவுகொடுங் கள் பெரியோர்களே.


பீஷ்மர் துரோணர் அசுவத்தாமர் இவர்கள்சொல்
விருத்தம்

மறிகடல்வற்றினாலும் மகம்மேருகுலுங்கினாலும்
அறைதருபுவியாழ்ந்தாலு மண்டபங்களிடிந்திட்டாலும்
குறையிலாமக்களுங்கட் கொருதீங்குவருவதில்லை
துறைவனஞ்சென்றுமீண்டு சுகமுடன்வருகுவீரே.

வ-ம். மகாசத்தியவந்தரான பாண்டவர்களே? இந்தச் சத்தசாக ரங்கள் வற்றிப்போனாலும், மகம்மேருவுக்கு ஒருசஞ்சலம் வந்தாலும் பூமியானது ஆழ்ந்திப்போனாலும் பிர்மாண்ட கடாகங்கள் இடிந்து போனாலும் உங்களுக்கு ஒரு துன்பமும் வருவதில்லை சுகமாய்ப் போய் வாருங்கள் மைந்தர்களே.

தருமர் சொல்-வசனம்

அப்படியே போய்வருகிறோம் பெரியோர்களே.



# பாண்டவர்கள் காட்டுக்குப் போகுதல்

தரு-இ-ம்-தோடி-தாளம்-மிசுரம்

பல்லவி

வனத்திற்பன்னிரண்டுவருஷஞ் சஞ்சரிப்போம்
வாருந்தம்பிமாரே

அநுபல்லவி

தொனித்தசகுனிமாமன்சுழலினி லகப்பட்டோம்
துரைத்தனமும்நாடும் சூதிற்றோற்றுவிட்டோம் (வன)

சரணங்கள்

எம்மாலேயாதொன்று மாகுமோ-ஆயன்
எழுதினதும்தப்பிப் போகுமோ
தம்மாலொன்றுமில்லை யெவர்களுக்கானுலும்
தாழ்வுஞ்சிலகாலம் வாழ்வுஞ்சிலதுகாலம் (வன)
பங்கும்பங்காளியாய்ப் பிறந்தோமே-இந்தப்
பாரெல்லாம்விட்டுத்துறந்தோமே துறந்தோமே
கொங்கலர்மாலைமகுட மன்னருக்கும்
குறையுஞ்சிலதுகாலம் நிறையுஞ்சிலதுகாலம் (வன)
மன்னவர்க்கிதுமெத்த தொல்லையோஇந்த
வருத்தப்பட்டபேர்க ளில்லையோ
இன்னமின்னந்துயரெண்ணுவ தென்னமதி
என்றைக்குமாயனிரண்டு பாதமேகெதி (வன)

விருத்தம்-இராகம்-முகாரி

வரிசையாய்ப்பாண்டவாளும் வனத்தினிற்சென்றுதானும்
அரியதோர்பன்னிரண்டாம் அக்கியாதவாசஞ்செய்த
துரியோதனுதிகளைக்கொன்று துரோபதைசமேதராக
மருவியதர்மராசன் மகுடாபிஷேகங்கொண்டார்.

ஆசிரிய விருத்தம்

தாளதங்கமதிதலையிற்சூடித் தற்பரனும்செவ்வந்திநாதர்வாழி
மாளாததுரோபதையின்கற்புக்காக மலரடியில்மாதர்பூதீஸ்வரரும்வாழி
மீளாதநரகமுற்றதுரியனுைை மெய்நடுங்கப்போர்க்களத்தில்வென்றுவாழி
நீளாததுயரகற்றிபஞ்சவர்க்கு நிகரில்லாவரமளித்தநெடுமால்வாழி
கார்வாழிமதிமறையினுடுக்கள்வாழி கற்புடையதுரோபதையாள்கணவரைந்து
பேர்வாழிபெரியோர்கள்தானும்வாழி பேசிடும்சாஸ்திரங்கடிநமும்வாழி
ஊர்வாழிஅஸ்திஞபுரியும்வாழி உண்மைநெறியுடையபாண்டவரும்வாழி
ஊர்வாழிஊரிலுள்ளோர்கள்வாழி ஏர்வாழிபாகவதர்கள் தானும்வாழி.

ஸ்ரீமகாபாரதவிலாசம் என்னும்

## சூது - துகிலுரிதல்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

## இதனுள் அடங்கிய

# படங்களின் அட்டவணை


| நெம்பர் | படங்களின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 1 | தருமர் இராஜசூயயாகஞ்செய்தல் | 8 |
| 2 | துரியோதனன் கொலுவு | 10 |
| 3 | துரியோதனாதிகள் மண்டபம்போய்ப்பார்க்குதல் | 22 |
| 4 | பாண்டவர்களும் துரோபதையும் அஸ்தினா புரிக்கு வருதல் | 36 |
| 5 | தருமரும் சகுனியும் இரண்டாவதுதடவை சூதாடல் | 49 |
| 6 | தருமரும் சகுனியும் நான்காவது ஆட்டத்தில் துரோபதையை வைத்தாடுதல் | 56 |
| 7 | தருமரும் சகுனியும் ஆடும் ஐந்தாவது ஆட்டம் துற்சாதனனுக்கும் துரோபதைக்கும் தர்க்கம் துரோபதையைத் துகிலுரிதல் | 59 |
| 8 | பாண்டவர்கள் வனவாசம் போகுதல | 98 |


படங்களின் அட்டவணை

முற்றிற்று.